


கல்கி
LKI 31.3.91 ரூ. 2.50
ம்மா சும்மா தே!”
சினிமாவும் சும்மாவே!
–அமிதாப் சிறப்புப் பேட்டி



மிருதுவான போஷாக்கு

உங்கள் குழந்தைக்கு 4 மாதங்களாகும் சமயத்தில் அவனது இயற்கை உணவான பாலுடன் எளிதில் ஜீரணிக்க உகந்த போஷாக்கு உணவான நெஸ்டத்தையும் கொடுங்கள்.

பாலுடன் கலந்து தயாரிக்கப்பட்ட நெஸ்டம் உங்கள் குழந்தையின் மிருதுவான முதல் திட உணவாகும். ஏனெனில் இதில் குழந்தை ஆரோக்கியமாய் வளர்வதற்குரிய எல்லா போஷாக்குகளும் சமச்சீர் அளவில் அடங்கியுள்ளன. உங்கள் குழந்தையின் உணவில் வெவ்வேறு சுவையைக் கூட்ட விரும்பினால், அவ்வகை உணவுடன் நெஸ்டத்தை கலந்து கொடுங்கள். உதாரணமாய் வேக வைத்த பழங்கள், வேகவைத்து மசிய வைத்த காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள்.

அரிசி சேர்த்த நெஸ்டம் போஷாக்கு நிறைந்த ஸீரியல் ஆகும். உங்கள் குழந்தை இதை எளிதில் ஜீரணிக்கும். உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு மருத்துவர்கள் சிபாரிசு செய்யும் எல்லாவித போஷாக்கும் இதில் உள்ளன. உறுதியான எலும்புகளுக்கும் பற்களுக்கும் தேவையான கால்ஷியம்; ஆரோக்கியமான ரத்தத்திற்கு தேவையான இரும்பு சத்து; பட்டு போல் பளபளக்கும் சருமத்திற்கும், ஒளிவீசும் கண்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் தேவையான வைட்டமின்களும் இதில் அடங்கியுள்ளன.

உங்கள் செல்லக் குழந்தை நெஸ்டத்துடன் சேர்ந்து வளர்வதை கவனியுங்கள்.

இலவச நெஸ்டம் செய்முறை புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25, புது டில்லி-1

எளிதில் ஜீரணிக்க வல்ல பேபி ஸீ

நெஸ்டம்

TSA-D/NESTUM/90/TM

ஆசிரியர் பக்கம்:

போலீஸ் தொல்லையை விடத் திருடன் தொல்லையே தேவலாம்!

'ஆளுனர் ஆட்சியில் தமிழகத்தில் சட்ட ஒழுங்கு வெகுவாகச் சீர்ப்பட்டு விட்டது' என்று ஆளுனர் அறிக்கை நாளிதழில் வெளியாகும் போது கூடவே கல்லூரி மாணவிகள் கடத்தல், வீடுகளில் புகுந்து சொந்தக்காரர்களைத் தாக்கி விட்டுக் கொள்ளை என்றெல்லாம் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன.

இந்தப் பெரிய குற்றங்கள் பரபரப்பை ஏற்படுத்துவதால் போலீஸ் உயர் அதிகாரிகள் தங்கள் 'இமேஜ்' பாதிக்கப்பட்டு விடும் என்று சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பில் இருப்போரும் போலீஸை முடுக்கி விடுவார்கள்.

ஆனால் இத்தகைய விளம்பரம் பெறும் பெரிய கொள்ளைகளை விட, சின்னச் சின்னத் திருட்டுக்கள் ஒரு புறமும் போலீஸாரின் சில்லறைத் தொல்லைகள் மறு புறமுமே அதிகமான மக்களை மிகுதியான வேதனைக்கு உள்ளாக்கி வருகின்றன.

உதாரணமாக,சாராயக்கடைகள் திறக்கப் பட்ட பிறகு, வீடுகளைச் சுற்றிப்பாதாளச் சாக்கடைகளுக்குப் போடப்படும் இரும்புக் கதவுகள் (Air tight inspection covers) அடிக்கடி திருட்டுப் போகின்றன. இவற்றைப் பழைய இரும்பு வாங்கும் கடைகளில் பத்து அல்லது இருபது ரூபாய்க்கு விற்றுக் குடித்துத் தீர்த்து விடுகின்றனர். ஆனால் இக்கதவுகளைத் திரும்பவும் புதிதாக வாங்கிப் போட வீட்டுக்காரர்கள் ஒவ்வொரு கதவுக்கும் ரூ. 300க்கு மேல் செலவழிக்க வேண்டியுள்ளது. அப்படியே வாங்கிப் போட்டாலும் பத்து நாட்களில் மீண்டும் திருட்டுப் போய் விடுகிறது.

இதுபோன்ற சில்லறைத் திருட்டுக்களை வீட்டுக்காரர்கள் போலீஸாரிடம் போய் ரிப்போர்ட் பண்ணவே தயங்குகின்றனர். காரணம் போலீஸார், திருடர்களைக் கண்டு பிடிக்க முனைவதற்குப் பதில், புகார் கொடுத்தவர்களையே பிடித்துக் கொண்டு தொல்லை கொடுப்பதுதான்! போலீஸ் தொல்லையை விடத் திருடன் தொல்லையே தேவலாம் என்றாகி விடுகிறது மக்களுக்கு.

எனக்குத் தெரிந்த ஒரு கிழவனார் ஒரு பெட்டிக் கடை வைத்துப் பிழைத்து வருகிறார். சில காலம் முன்பு ஓர் இரவு அவர் பெட்டிக் கடையில் திருட்டுப் போய் விட்டது. அப்பாவிக் கிழவனார் பக்கத்துப் போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்து விட்டார். அவ்வளவுதான். அன்று முதல் தினம் இரண்டு போலீஸ்காரர்கள் அவர் கடைக்கு விஜயம் பண்ண ஆரம்பித்தார்கள்! "என்ன தாத்தா, திருடன் பிடிபட்டானா? யார் மேல சந்தேகப்படறே? என்னென்ன திருட்டுப் போச்சு?" என்றெல்லாம் பேச்சுக் கொடுத்தபடியே ஆளுக்கு ஒரு வாழைப் பழத்தைத் தாரிலிருந்து பிய்த்து, உரித்து உள்ளே தள்ளுவார்கள்! "எங்கே, ஒரு சோடா உடை பார்க்கலாம்" என்பார்கள். சார்மினார் புகைத்தபடி திரும்பி விடுவார்கள்! ஒரு வாரத்துக்கு மேல் இந்தப் பகிரங்க போலீஸ் கொள்ளையைத் தாக்குப் பிடிக்க முடியாத தாத்தா, கடையையே மூடி விட்டார்! ஒரு மாதம் சென்று போலீஸ் நடமாட்டம் குறைந்த பிறகுதான் மீண்டும் திறந்தார்!

இன்னொரு எடுத்துக்காட்டு: என் நண்பர் ஒருவர் வீடு கட்டிக் கொண்டிருக்கும் இடத்துக்குப் பக்கத்தில் ஒரு மாடிக் கட்டிடத்தில் பெண்களை வைத்து வியாபாரம் நடக்கிறது என்பதாக அரசல்புரசலாகத் தெரிய வந்தது. 'நமக்கேன் வம்பு' என்று நண்பர் கண்டுகொள்ளாமல் ஒதுங்கி விட்டார். ஆனால் நண்பரின் வாலிபப் பருவப் பிள்ளைகள் அந்தப் பெண்களைக் கேலி செய்து வம்பு பண்ணப் போக, ரகளையாகி விட்டது. போலீஸுக்குத் தகவல் போய், அவர்கள் வந்த போது அந்த இளைஞர்கள் அங்கே இல்லை. நழுவி விட்டனர். ஆனால் வீடு கட்டப்படும் இடத்தில் வாட்ச்மேனாகப் பணியாற்றி வந்த அப்பாவி அகப்பட்டுக் கொண்டான்! அவனைப் போலீஸார் தள்ளிக் கொண்டு போனார்கள். இளைஞர்களை இனம் காட்டுமாறு கேட்டார்கள். "அவர்கள் எங்கே போனார்களோ எனக்குத் தெரியாது" என்று இந்த அப்பாவி உண்மையைக் கூறவும் அவனை முட்டியில் தட்டி அவன் மீதே புகார் பதிவாகி இருப்பதாகச் சொன்னார்கள். மேலும் அடிவாங்காமல் வீடு திரும்ப வாட்ச்மேன் கொடுத்த விலை ஐம்பது ரூபாய்! இரண்டாவது முறையும் அவன் போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் செல்லப்பட்டு மேலும் முப்பது ரூபாய் அழுதான்! அது மட்டுமல்ல, அந்த வாட்ச்மேனின் மனைவியிடம் மாடிக் கட்டிடக்காரர் மீது பொய் வழக்குப் போடுமாறு தூண்டினார்கள் போலீஸார்!

நிலைமை அத்துமீறிப் போவதை உணர்ந்த நண்பர், ஒரு வழக்கறிஞர் மூலம் அந்த வட்டாரத்து அரசியல் பிரமுகர் ஒருவரைப் பிடித்து, மூவருமாக போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக, வாட்ச்மேன் மீது எந்தவித வழக்கும் பதிவாகவில்லை என்பதாகத் தெரியவந்தது. அப்பாவி என்பதால் மிரட்டியே பணம் பறித்திருக்கின்றனர் போலீஸார்!

வேலியிடமிருந்து பயிருக்குப் பாதுகாப்புத் தரப் போவது யார்? எப்போது?

தற்கொலை எண்ணத்தை விரட்ட முடியுமா?

இந்தியா முழுவதிலும், 1986 இல் மட்டும் ஐம்பத்து மூவாயிரம் பேர் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் 8238 பேர்! பெண்களை விட ஆண்களே தற்கொலைக்கு அதிகம் துணிகிறார்கள்......

இச்செய்தியைப் படித்த ஸ்ரீமுஷ்ணம் வாசகர் சா. கிருஷ்ணசாமி, மனநல நிபுணர்களைச் சந்தித்து, தற்கொலை பற்றிய விவரங்களையும், அதனைத் தடுப்பதற்கான வழிகளையும் அறியச் செய்யலாமே என்று எழுதியிருந்தார். டாக்டர். வி. ராமச்சந்திரன் மற்றும் டாக்டர் என். கோபாலகிருஷ்ணன் ஆகியோரை இது குறித்துப் பேட்டி கண்டோம்.

கேள்வி: இந்தியாவில் தற்கொலைகள் பெருகக் காரணம் என்ன...?

பதில்: இந்தியாவில்தான் என்றில்லை. இன்றைக்கு உலகின் பல நாடுகளிலும் தற்கொலை மூலமான இறப்புகள் பெருகி வருகின்றன. உலகின் மொத்த மரணங்களில் தற்கொலை மூலமான இறப்புகள் 17 – 24 சதவீதம்! நாட்டுக்கு நாடு இது வேறுபடும்... வெவ்வேறு நாட்டில் வெவ்வேறு பிரச்னைகளுக்காகத் தற்கொலைகள் பெருகி வருகின்றன.

கேள்வி: தற்கொலை செய்து கொள்வதற்கு முக்கிய காரணங்கள்...?

பதில்: நிறைய காரணங்கள் உண்டு.

- நெருங்கிய உறவில் (கணவன், மனைவி, குழந்தைகள், உடன்பிறந்தோர், நண்பர்கள்....) ஏற்படும் மனஸ்தாபங்கள்.
- வியாபாரத்தில் ஏற்படும் நஷ்டங்கள்.
- அளவுக்கதிகமான துக்கம்.



- வறுமை
- வேலையில்லாத் திண்டாட்டம்.
- தீராத நோய்...

— இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

கேள்வி: பெண்களை விட ஆண்களே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்றொரு செய்தி — இதற்கென்ன காரணம் என நினைக்கிறீர்கள்?

பதில்: ஆண் — பெண் இருபாலரிடமுமே தற்கொலை மனப்பான்மை அதிகரித்துத் தான் வருகிறது. ஒருவேளை பெண்களை விட ஆண்களுக்கு இன்னும் கூடுதல் பொருளாதாரப் பொறுப்புகள் இருப்பதாலோ என்னவோ, அவர்களின் இறப்பு அதிகமாயிருக்கிறது.

கேள்வி: இவர் நிச்சயம் தற்கொலைதான் செய்து கொள்ளப் போகிறார் என்று முன்னரே நாமறியும்படியான அறிகுறிகள் ஏதேனும் அவரிடம் தென்படுமா...?

பதில்: கண்டிப்பாக.. தங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களிடம் அடிக்கடி மரணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள். "ஒண்ணுமே பிடிக்கலைப்பா... செத்துடலாம் போல இருக்கு..." என்று அடிக்கடி சொல்வார்கள். அவர்கள் பேச்சில் தீராத மன வேதனை இருப்பது வெளிப்படையாகவே தெரியும்.

கேள்வி: சில குடும்பங்களில் மட்டும் பல பேர் ஒருவர் மாற்றி ஒருவராய்த் தற்கொலை செய்து கொள்வது ஏன்?

பதில்: குறிப்பிட்ட ஒரு குடும்பத்தில் வரிசையாக அம்மா, அப்பா, குழந்தைகள்.. என்று தற்கொலை மூலம் இறந்திருப்பார்களேயானால், அதற்குக் காரணம் ஒருவித மனோவியாதி (MANIC DEPRESSIVE DISORDER) என்று சொல்லலாம். இந்த வியாதி வந்தவர்களுக்கு நிலையற்ற மனநிலை இருக்கும். என்ன காரியம் செய்கிறோம் என்றே அவர்களுக்குத் தெரியாது.

கேள்வி: தற்கொலை முயற்சியில் தோல்வி அடைந்தவர்கள் மீண்டும் அம்மாதிரி முயற்சியில் ஈடுபடுவார்களா...?

பதில்: நிச்சயம் ஈடுபடுவார்கள். எந்தப் பிரச்னைக்குப் பயந்து அவர்கள் தற்கொலை செய்து கொள்ள முயன்றார்களோ, அந்தப் பிரச்னை தீர்க்கப்படாமலேயே இருந்தால்; மீண்டும் தற்கொலையைத்தான் (முன்பை விட தீவிரமாக) நாடுவார்கள்.

கேள்வி: இன்றைய இளைஞர்களிடத்தில் Self immolation (தன்னைத்தானே எரித்துக் கொள்ளுதல்) அதிகரித்து வருகிறதே...?

பதில்: இது ஆரோக்கியமானதேயல்ல...



• டாக்டர் கோபாலகிருஷ்ணன்



• டாக்டர் வி. ராமச்சந்திரன்

இளைஞர்கள் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதில்லை. வாழ்க்கை, மரணம் என்பது பற்றியெல்லாம் அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. முன்பின் யோசியாமல் க்ஷண நேரத்தில் எடுக்கப்படும் முடிவு தான் இந்த தீக்குளிப்பு. எம். ஜி. ஆர். இறந்த போது எத்தனையோ இளைஞர்கள் தீக்குளித்து இறந்தார்கள்...! அவரின் மரணம் அந்த அளவுக்கு இளைஞர்களிடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது...! அவரை ஒரு தலைவராகவோ, நடிகராகவோ பார்க்காமல் குடும்பத்தில் அவரையும் ஓர் உறுப்பினராக நினைத்தார்கள். ஆனால் தீக்குளித்தல் உணர்ச்சிவசப்படுவதால் நிகழ்கிறது. தற்கொலை, பொதுவாக, போராடித் தோற்று விட்டோம் என்ற உணர்வினால் உந்தப்படுவது. ஜப்பான் போன்ற வெகு முன்னேற்றமடைந்த நாடுகளில் தற்கொலை செய்து கொள்வதைப் பெரிய வீரச் செயலாக நினைக்கிறார்கள். சமுதாயத்தில் இனியும் தமக்கு மதிப்பில்லை என்று நினைப்பவர்கள் (Harakiri) கத்தியால் வயிற்றைக் கிழித்து உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள்!

கேள்வி: தற்கொலைக்கு என்னதான் தீர்வு...?

பதில்: மனம் விட்டுப் பேசுவதுதான். அப்படிப் பேசும்போதுதான் சம்பந்தப்பட்டவர்களின் குறை — நிறைகள் வெளிப்படும். இது இயலாத பட்சத்தில் சைக்யாட்ரிஸ்டை அணுகலாம். மன இயல், நிபுணரால் நிச்சயம் பிரச்னைக்குத் தீர்வு சொல்ல முடியும்...! தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வந்தால், தாமதிக்காமல் உடனே மருத்துவரை அணுகி உதவி கோருவது நல்லது. தற்கொலைத் தடுப்பு மையங்கள் சஞ்சீவினி என்ற பெயரில் டெல்லி, கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களில் இயங்கி வருகின்றன. எடுத்த எடுப்பில் இங்கெல்லாம் போகக் கூச்சமாக இருந்தால் குடும்ப டாக்டரை நண்பனாகக் கருதி மனம் விட்டுப் பேசலாம். பிரச்னைக்கு நிச்சயம் தீர்வு கிடைக்கும். அவர் வழி காட்டுவார்.

பேட்டி: வே. ப.

ஜெயலலிதா பிரபலமடையக் காரணம் என்ன?

○ மா. பழனிசாமி, கோவை.

? ஆளுனரின் பொரிசு இன்றித் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது தமக்கு ஆச்சர்ய மளித்ததாக ராஜீவ் காந்தி குறிப்பிட்டிருக்கி றாரே?

! தற்போது தி.மு.க. அனுதாப அலையில் தாமும் கொஞ்சம் குளிக்கலாம் என்பதற் காக இப்படிப் பேசுகிறார். ஆனால் முன் னர் சந்திரசேகர் தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்யாமல் இருந்திருந்தால்தான் இன்னும் அதிக ஆச்சரியம் அடைந்திருப்பார்! இரட்டை வேடம் போடுவது ராஜீவுக்குக் கைவந்த கலை. மண்டல், ஹிந்தி திணிப்பு, ஈழப் பிரச்னை என்று பல உதாரணங்கள்.

○ கே. சோமசேகர், காவேரிப்பட்டணம்.

? பி. ஜே. பி. யின் தற்போதைய நிலை என்ன?

! பந்தயம் ஆரம்பிக்கு முன்னரே வெற்றி பெற்று விட்டோம் என்று எண்ணும் மன நிலைதான்!

○ ஏ. ஜி. கல்யாணசுந்தரம், கோயமுத்தூர்.

? பார்த்திபன், வசந்த், விக்ரமன், அனந்து — திறமையை வரிசைப்படுத்துக.

! கடைசியாகக் குறிப்பிடப்பட்டவர், பின் னணியில் இருந்த போது வாங்கிய நற் பெயரை முன்னணிக்கு வந்தபோது இழந்து விட்டார். விக்ரமனுக்குப் பெரும்புள்ளி கரும் புள்ளியாகி விட்டது. பார்த்திபன் நடிப்பதே மேல் என்ற முடிவுக்கு வந்து விட்டார். கையை மூடி வைத்திருப்பவர் வஸந்த். திறந் தால் தெரியும், மண்ணா, மாங்காயா என்று!

○ பாளை அசோக், சென்னை — 15.

? ராஜ்காட் மகாத்மா காந்தி சமாதியைச் சேதப்படுத்தியிருக்கிறார்களே?

! 'காந்தியத்தை ஒரு தலைவரும் கடைப் பிடிக்காத போது சமாதி என்ன? அதற்கு மலர் வளையம் என்ன?' என்ற ஆத்திரத்தில் செய்யப்பட்டிருந்தால் கூடப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் நிகழ்ந்தது அப்படியல்ல. காந்தியையும் காந்தியத்தை யும் வெறுக்கும் சிறுபான்மையினரான சிலர் செய்த வேலை என்று தெரிய வருகிறது. யாராயினும் கருத்துச் சுதந்திரம் உண்டு. ஆனால் பொதுச் சொத்தை அழிக்கும் உரிமை இல்லை. இப்படி மீண்டும் நிகழா திருக்கப் போலீஸ் பாதுகாப்பு அதி கரிப்பது போதாது. தலைவர்கள் மெய்யா லுமே காந்தியையும் காந்தியத்தையும் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

○ சிவா ஸ்ரீநிவாசன், கும்பகோணம்.

? ஜெயலலிதா மக்களிடையே பிரபலமாகி இருப்பதற்குக் காரணம், கவர்ச்சியா? இரட்டை இலையா? காங்கிரஸ் கூட்டா?

! மூன்றையும் காட்டிலும் முக்கியமாக எம். ஜி. ஆர்.

○ பால. சித்தார்த்தன், சென்னை — 45.

? சர்க்கஸில் விலங்குகளை வைத்து வேடிக்கை காட்டுவதைத் தடை செய்ய அரசு முடிவெடுத்தது பற்றி...?

! ரொம்ப நல்ல காரியம். சர்க்கஸில் வேடிக்கை காட்டுவதற்காகப் பழக்குவ தாகக் கூறி, பிராணிகள் வதைக்கப்படு கின்றன. ஆனால் தடை விதித்தால் மட்டும் போதாது. சர்க்கஸ் தொழிலே நசித்துப் போகும். ஆதலால், அவர்கள் புனர்வாழ் வுக்கு வகை செய்ய வேண்டும். மற்றொன்று, சினிமாவில் பாம்பையும் நாயையும் ஆட் டையும் மாட்டையும் நடிக்க வைப்பதாகக் கூறி வதைப்பதும் நிறுத்தப்பட வேண்டும்.

○ எஸ். பிரியா, பாளையங்கோட்டை.*


? பிரிட்டன், அமெரிக்கா போல் இந்தியா விலும் இரு கட்சி ஆட்சி முறை வர என்ன செய்ய வேண்டும்?


! ஏறத்தாழ ஒரே மாதிரி கொள்கைகள்

* ஸ்பெஷாலிடி என்ன? * ஆச்சர்யம் அடைந்தார்!









* பிராபல்யம் எதனால்? * மண்ணா, மாங்காயா?

* சேருமிடம் அம்பேல்!



நீங்கள் கேட்டவை

— தராசு



* புகழும் பெருமையும்!



* பூக்கடைக்கு விளம்பரம்!

உடைய கட்சிகள் உதிரிக் கட்சிகளாக இராமல் ஒன்றோடொன்று இணைந்துவிட வேண்டும். ஆனால் இதற்கு இடம் கொடாமல் ஒவ்வொரு கட்சித் தலைவரும் தலைவராகவே இருந்து தமது பிரபையை வளர்த்துக் கொள்ளவே விரும்புகிறார். இதனைச் சமாளிக்கக் குறைந்தபட்சம் இத்தனை சதவீத வோட்டுக்களைப் பெறாத கட்சிகள் அடுத்த தேர்தலுக்கு நிற்க முடியாது என்று சட்டம் செய்யலாம். இந்தக் குறைந்தபட்சச் சதவீதத்தைத் தேர்தலுக்குத் தேர்தல் அதிகரித்துக் கொண்டே போகலாம். இப்படியெல்லாம் யோசித்துத் தேர்தல் சீர்திருத்தங்களை அடுத்து வரும் ஆட்சியாவது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினால் நல்லது.

o **வி. எஸ். அனந்தராமன், சென்னை.**

? **கலைஞரின் ஸ்பெஷாலிடி என்ன?**

! உடன் பிறப்பு.

o **கே. இந்து குமரப்பன், விழுப்புரம்.**

? **டெல்லிக்கும் போயஸ் தோட்டத்துக்கும் ஓடிக் கொண்டிருக்கும் சுப்பிரமணிய சுவாமி, 'ஒரு தீபாவளிக் காக்கை' எனத் துரைமுருகன் வர்ணித்துள்ளாரே?**

! காக்கையிடம் உள்ள நற்குணங்கள், சு. சுவாமிக்குக் கிடையாது. அவர் சேருமிடம் அம்பேல். ஜெ அல்லது ராஜீவ். இந்த இரட்டை சுயநலக்காரருடன் தோழமை கொண்டாடினால், இருக்கும் கௌரவத்தில் மேலும் கணிசமாக இழப்பார்கள்.

o **தஞ்சைத் தரணியன், முத்துப்பேட்டை.**

? **பாராளுமன்றம் கலைத்தது குறித்து?**

! நிச்சயமாக அது ராஜீவ் வர்ணித்தது போல், சபாநாயகரும், பிரதமரும், எதிர்க்கட்சியினரும் சேர்ந்து செய்த சதி அல்ல.

o **தங்க நாகேந்திரன், செம்போடை.**

? **வைரமுத்து மதுரையில் நடத்திய இலக்கியப் பேரவைக்குத் தமிழகம் முழுவதிலிருந்து மக்கள் திரண்டது எதைக் காட்டுகிறது?**

! 'பூக்கடைக்கு விளம்பரம் தேவையா?' என்ற காலம் மலையேறி விட்டது. நடை அழகும் இலக்கிய மணமும் மிக்க வைரமுத்துவின் கவிதைகளுக்கும் இன்று விளம்பரம் தேவைப்படத்தான் செய்கிறது. அதுவும் இந்த விழா விளம்பரங்கள் ஓஹோஹோ ரகம். கலைஞர் கலந்து கொண்ட போதிலும் அரசியல் வாடை அதிகமின்றி, இலக்கிய விழாவாகவே நடத்ததும் வைரமுத்துவின் நூல்களுக்கான விழாவாக மட்டுமின்றி, முப்பது இளம் கவிஞர்கள் கலைஞரால் சால்வை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதும் பாராட்டுக்குரியன. வைரமுத்துவை விட, அவரது கவிதைகளைக் காதலிக்கும் இளைஞர்களுக்கு இந்த விழா ஒரு பெரிய வெற்றி.

o **வி. ராஜா, சீர்காழி.**

? **கல்கிக்கு யாரை மிகவும் பிடிக்கும்?**

! தங்களுக்குத் தாங்களே புகழ் சேர்த்துக் கொண்டு, கல்கிக்கும் பெருமை தேடித் தரும் நபர்களை. சமீபத்தில் சிவசங்கரி. கல்கியில் வெளியான இவரது ''வேரில்லாத மரங்கள்'' நாவல், பாரதிய பாஷா பரிஷத் அமைப்பின் 1989 ஆம் ஆண்டுக்கான இலக்கிய விருதையும் ரூ. 11,000 ரொக்கப் பரிசையும் பெற்றுள்ளது. கல்கி வாசகர்கள் சார்பில் சிவசங்கரிக்கு வாழ்த்துக்கள்.

o **ஆர். வெங்கடேஷ், குத்தாலம்.**

? **அரசியலில் ராஜேந்தருக்கும் கலைஞருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

! எல். கே. ஜிக்கும், பி. எச்டி பட்டப்படிப்புக்கும் உள்ள வித்தியாசம்.

o **எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**

? **சிவகாசி என்றதும் உங்கள் நினைவுக்கு வருவது?**

! தீக்குச்சிகள் போல் வாழ்க்கையை இழந்து கொண்டிருக்கும் இளம் சிறார்கள்.


* **ரூ. 20 பரிசு பெறுபவர்:**

எஸ். பிரியா,
4/789-B, 29 வது தெரு,
சாந்தி நகர்,
பாளையங்கோட்டை — 627 002.

தேர்தல்கள் நிச்சயமாகிவிட்ட நிலையில் அதை வைத்து எப்படி பணம் பண்ணலாம் என்று பலரும் யோசிக்கும் சீசன் இது. வேட்பாளர்களும் அவர்களின் தொண்டர்களும் எப்படிச் செலவைக் கூடுதலாகக் காட்டி, எவ்வாறு சிக்கனம் பண்ணி, பணத்தை மிச்சப்படுத்தலாம் என்று யோசிப்பார்கள். அது போக, கொடிகள் தயாரிப்போர்; சுவரில் எழுதுவோர்; போஸ்டர் அடிப்போர்; குடம், குத்து விளக்கு என்று வாக்காளருக்குப் பரிசுப் பொருள்கள் தயாரிப்போர்; மைக், ஆட்டோக்காரர்கள் என்று எல்லாரும் சுறுசுறுப்படைவார்கள்.

தேர்தலில் எல்லாரும் சம்பாதிக்கிற போது நாமும் ஏதாவது ஒரு வகையில் சம்பாதித்தாக வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. யோசித்தேன். கடைசியில் ஒரு கையகராதி போடலாம் என்று தீர்மானித்தேன். இந்த அகராதியில் விசேஷம் என்னவென்றால் — இது ஒரு வகை கைகு. வேட்பாளர்களுக்கு உதவக்கூடிய கைடு.





தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களுக்கு உடனடித் தேவை பணம் என்று சிலர் தப்பாக நினைக்கிறார்கள். பணத்தை விட, அவர்களுடைய பெயர்களுக்குச் சில அலங்காரமான அடைமொழிகள்தான் முக்கியமாக வேண்டும். அதுதான் வாக்காளரிடையே அவர்கள் மதிப்பை உயர்த்தும்.

கொடை வள்ளல் கொய்யாத் தோப்பு கோவிந்து

உதாரணமாக ஒரு கட்சியில் பழனியப்பன் என்பவர் தேர்தலில் நிற்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவரைப் பற்றி வெறுமே 'பழனியப்பன் இன்ன தொகுதியில் பேசுவார்' என்றால் அது எடுபடாது. பழனியப்பனுக்கு ஓர் அடைமொழி முக்கியம். அதைத்தான் நமது யோசனை அகராதி தொகுத்துத் தருகிறது.

வெறும் பழனியப்பன் பேசுவார் என்பதை விட 'பல்லாவரம் பழனியப்பன் பேசுவார்' என்று அச்சிடலாம். அதிலும் பல்லாவரம் என்பதைக் கொட்டை எழுத்திலும் பழனியப்பனைச் சின்ன எழுத்திலும் போஸ்ட்டரில் அச்சடிக்க வேண்டும். பிறகு கொஞ்ச நாளில் பழனியப்பனையே விட்டுவிட்டுப் 'பல்லாவரம் பேசுவார்' என்று போட வேண்டும். இதிலேயே வேட்பாளரின் பிராபல்யம் கொஞ்சம் அதிகமாகும். கொஞ்ச நாளில் வெறும் பல்லாவரத்துடன் வேறு ஏதாவது சேர்க்க வேண்டும். அது மக்களைத் தொடர்புபடுத்தி இருக்க வேண்டும்.

'மக்கள் அன்பர் பல்லாவரம்' பேசுகிறார் என்று போட்டால் வேட்பாளருக்கு மதிப்பு இன்னும் கூடும்.

மக்கள் அன்பர் பல்லாவரம் என்பதை விட 'மக்களின் இதய அன்பர்' இன்னும் அதிக பலனைத் தரும்!

மக்களின் இதய அன்பர் பல்லாவரம் பேசுகிறார்!

இப்போது மக்களின் இதய அன்பருக்கும் பல்லாவரத்துக்கும் நடுவே ஒரு சிறப்புச் சொல் போட வேண்டும்.

ஜிஷ்ராம்

'மக்களின் இதய அன்பர். மாமேதை பல்லாவரம்' என்று நைஸாக மாமேதையைச் சேர்த்து விட வேண்டும்.

சில நாட்களுக்குப் பிறகு மேதையைக் குறிப்புப்படுத்த வேண்டும். என்ன வகை மேதை?

'மேடை மேதை பல்லாவரம்' என்று அச்சடிக்க வேண்டும்!

'மேடை மேதை பல்லாவரம்' என்றால் ஓரளவு இப்போது மக்களுக்குப் பழகியிருக்கும். கூட்டம் கூடும்.

இப்போது சட்டென்று அவருடைய பெயருக்கு முன் நீளமாகச் சில வார்த்தைகள் சேர்க்க வேண்டும். அந்த வார்த்தைகளைப் பார்த்ததுமே அவரது சேவை மனப்பான்மை, திறமை, கொடை உள்ளம், உழைப்பு எல்லாம் தெரிய வேண்டும். (அந்தக் குணநலன்கள் அவருக்கு இருக்க வேண்டிய அவசியமில்லை. அவர் நிஜமாகவே மேதை என்பதாலா மேடை மேதை என்று போட்டோம்? அப்படித்தான் இதுவும்) அந்த வார்த்தைகளை ஏதாவது தமிழ் இலக்கியத்திலிருந்து கிளப்பலாம்.

உதாரணமாக, 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்று ,சேர்க்கிறோம் என்று வையுங்கள். மேடை மேதை பல்லாவரத்தின் மதிப்பு 'கும்'மென்று உயர்ந்து, அவர் ஒரு தியாகியாகி விடுவார்! இதற்காக அவர் ஒரு சின்னத் தூசியைக் கூடத் தியாகம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

போஸ்ட்டர் இப்படி இருக்கும்: தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் மேடை மேதை பல்லாவரம்!

இன்னும் ஒரு உதாரணம் பார்ப்போம்:

ஒரு அபேட்சகர் பெயர் கோவிந்து என்று வையுங்கள். அவருக்கு அடைமொழி முதலில் 'கொய்யாத்தோப்பு கோவிந்து' என்று கொய்யாத் தோப்பை அவர் பெயர் முன் ஒட்ட வைக்க வேண்டும். (கொய்யாத் தோப்பில் அவர் பிறந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அது எந்தத் திசையில் உள்ளது என்பது கூட அவருக்குத் தெரிய வேண்டிய கட்டாயமில்லை!)

கொய்யாத்தோப்பு கோவிந்துவுடன் 'கொ' பிரவசம் வருவது போல ஓர் அடைமொழி: 'கொடை வள்ளல் கொய்யாத் தோப்பு கோவிந்து' என்று நீட்டி முழக்கலாம்! அல்லது கொ. வ. கொ. தோ. கோவிந்து என்று சுருக்கலாம். நீட்டினாலும் புகழ். சுருக்கினாலும் புகழ்தான். கவனிக்க வேண்டியது, கொ. வ. கொ. தோ. என்பதைக் கொட்டை எழுத்திலும் கோவிந்துவைச் சின்ன எழுத்திலும் அச்சடிக்க வேண்டும் என்பதுதான்.

நாளடைவில 'கொ. வ. கொ. தோ. பேசுவார்' என்றாலே போதும். இன்னும் பழகி விட்டால் 'கொ. கொ. பேசுவார்' என்றோ 'கொக்கொ பேசுவார்' என்றோ போஸ்டர் அச்சடிக்கலாம். பிறகு 'கொக்கொ'வுடன் ஒரு சின்ன உறவு வார்த்தை சேர்க்கலாம். 'உங்கள் கொக்கொ' என்று நெருக்கம் கொணரலாம்.

இப்படியாகத் தேர்தல் வேட்பாளர்களுக்கு அருமையான அடைமொழிகள் என்னால் சப்ளை செய்ய முடியும். அவ்வளவையும் வெளியிட்டால் இனாமாகவே வேட்பாளர்கள் அடைமொழிகளை அள்ளிக் கொண்டு விடுவார்கள் என்பதால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். மற்றவற்றை என் புத்தகம் வெளிவந்ததும் காசு கொடுத்து வாங்கிப் பார்க்கட்டும்!



''ஏம்பா, 'கொய்யாப்பழம் விலை ஒண்ணு 75 பைசா; மூணு இரண்டு ரூபா'ன்னுதானே சொன்னே?''

''ஆமாம் சாமி!''

''எனக்கு முன்னாடி வாங்கினவர் இரண்டு பழம் ஒண்ணரை ரூபாய்க்குத் தானே வாங்கிட்டுப் போனார்?''

''ஆமாம் சாமி!''

''அப்போ, எனக்கு அந்த மூணாவது பழத்தை எட்டணாவுக்குக் கொடு!''

— வெ. ராஜாராமன்.

''யாரைத் தைரியசாலி என்று கருதுகிறீர்கள்?'' என்று தம் கூட இருந்த தோழர்களிடம் முகமது நபி (ஸல்) கேட்டார்:

''வீரத்துடன் போரிட்டு வெற்றி அடைந்தவர்களே'' என்றார்கள் தோழர்கள்.

''இல்லை. கோபம் வந்து தன்னைக் கட்டுப்படுத்தி அடக்கிக் கொள்கிறானே, அவன்தான் ரொம்ப தைரியசாலி'' என்றார் முகமது நபி (ஸல்)!

தகவல்: தக்கோலம் அ. முஸ்தபா.



கல்கத்தா மெட்ரோ:

உலகத்தின் மிகச் சிறந்த பாதாள ரயில் கல்கத்தாவில்தான் இருக்கிறது என்றால் நம்புவீர்களா!? சென்ற ஆண்டு உலகெங்கும் பாதாள ரயில்களை ஆராய்ந்த நிறுவனம் ஒன்று இந்தத் தீர்ப்பை வழங்கி யிருக்கிறது!

'கல்கத்தா மெட்ரோ' என்றழைக்கப் படும் பாதாள ரயில் உலகம் தனியழகுடன் பொலிகிறது. சாக்கடைகளும் சேரிகளும் கரைகட்டிய கல்கத்தா சாலைகளில் நடந்து விட்டு மெட்ரோவுக்குள் இறங்கினால் 'இது வும் கல்கத்தாவா' என்ற சந்தேகம் தான் எழும். மழமழப்பான கற்கள் பதித்த தூய்மையான தளம். பளபளக்கும் தூண்கள், ஜகஜ்ஜோதியாக விளக்குகள், நன்கு பராமரிக்கப்படும் ரயில்கள், சுகமான காற்று. அதிக நெரிசலில்லாத, விரைவான பயணம்....



• காளிகட் ரயில் நிலையம்.

இந்தியாவிலேயே பாதாள ரயில் வசதி உள்ள ஒரே நகரம் கல்கத்தாதான். இதற்கு ஒரு காரணமும் உண்டு. புதுடெல்லி, சண்டிகர் போல் திட்டமிட்டு நிர்மாணிக்கப் பட்ட நகரமல்ல கல்கத்தா. பிரிவினைக்குப் பிறகு அகதிகள் வரவாலும், தொழில் முன் னேற்றம் காரணமாக இதர மாநிலங்களி லிருந்து மக்கள் வந்து குடியேறியதாலும் கல்கத்தாவில் கட்டடங்கள் பெருகி விட்டன; ஆனால் சாலைகளின் விஸ் தீரணம் அதற்கேற்ப முறையாகப் பெருக வில்லை. இந்நகரின் 90 லட்சம் ஜனத் தொகையும் அன்றாட அலுவலுக்கு வெளியே போய்வர சாலைகளை உபயோ கிப்பதால் அவை நெரிசல் தாளாமல் திணறு கின்றன. இந்த நெரிசலைச் சமாளித்து ஓரளவு குறைக்கும் முகமாகத்தான் பாதாள ரயில் போக்குவரத்துத் தொடங்கப்பட் டுள்ளது.


மேல்நாடுகளுக்கு இணையான இந்த பிரயாண சுகத்தை எப்படி வழங்கினார்கள்? இத்தனைக்கும் பாதாள ரயில் பாதை அமைப்பதில் பல சிக்கலான தலைவலி களைச் சந்தித்தாக வேண்டும்:

ஹுக்ளி நதி அருகிலேயே ஓடுவதால் ரயில் பாதைக்குப் பள்ளம் தோண்டும் போது சில அடிகளுக்குள்ளாகவே தண்ணீர் சுரக்கிறது: இந்தத் தண்ணீரை வெளியேற்று வதோடு, பூமிக்கடியில் அமைந்துள்ள, டெலிபோன் கேபிள்கள், குடிநீர், கழிவு நீர்க் குழாய்கள் ஆகியவற்றை மாற்றிய மைக்க வேண்டும்; நாற்பது அடி ஆழம் நிலத்தைத் தோண்டுவதால் அக்கம் பக்கத்

துக் கட்டடங்கள் பாதிப்புக்குள்ளாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; ஸ்டேஷன்களுக்குத் தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்யும் போது, நஷ்ட ஈடு கொடுப்பதோடு, ஆர்ஜிதத்தை எதிர்த்துத் தொடுக்கப்படும் வழக்குகளையும் சமாளிக்க வேண்டும்; ரயில் பாதை அமைக்கப்பட்டு வரும் பகுதியில் வேலை முடியும் வரை சாலைப் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுத் திசைதிருப்பப்பட வேண்டும்.

இவ்வளவு பிரச்னைகளையும் எண்ணிப் பார்த்த கல்கத்தா வாசிகள், இந்தத் திட்டமே பகற்கனவுதான் என்று முடிவு

கலை அழகுடன் தனி உலகம்



ரவீந்திர சதன் ஸ்டேஷனில் டாகூரின் ஓவியங்களும் ஓர் ஆங்கிலக் கவிதையும்.

செய்து விட்டார்கள். இவ்வளவையும் மீறி, பாதாள ரயில் ஓட ஆரம்பித்தாலும் கல்கத்தாவோடு கூடப் பிறந்த மின்வெட்டுப் பிரச்னையால் திட்டமே புஸ்வாணமாகி விடும் என்று எண்ணினார்கள்.

ஆனால், கல்கத்தா மெட்ரோ **driven shield tunnelling** என்ற நவீன முறையில் (தரைப் பகுதிக்கு அதிக சேதமின்றி மண்ணை அணைத்துக் கொண்டு முன்னேறுவது) குடையப்பட்டு, ரயில் நிலையங்கள் கலை நயத்தோடு நிர்மாணிக்கப்பட்டிருப்பதோடு, தினம் 53 மெகாவாட் மின்சாரத்தை உபயோகிக்க, பாதுகாப்புத் தேவைக்கு அடுத்த படியான முன்னுரிமையைப் பெற்றிருக்கிறது.

கல்கத்தா மெட்ரோவுக்கான திட்டங்கள் 1921 ஆம் ஆண்டு முதலே ஆராயப்பட்டு வந்தாலும் 1970 ஆம் ஆண்டு ரஷ்ய நிபுணர் குழு ஒன்று ஆய்ந்தளித்த திட்டம் தான் செயல்வடிவம் பெற்றுள்ளது. '73 இல் தொடங்கிய பணி பகுதியளவுதான் நிறைவேறியுள்ளது. '92 இல் முழுமையாக முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள், ஜப்பானிய நிறுவனம் ஒன்றின் உதவியுடன் இப்பணியில் ஈடுபட்டுள்ள இந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியினர். 863 கோடி ரூபாய் செலவாகும் என்று முதலில் திட்டமிடப்பட்டு, இப்போது அத்தொகை 1325 கோடி ரூபாயாக உயரும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

திட்டம் முடிவடைந்த பிறகு இரண்டு நிமிடங்களுக்கு ஒரு ரயில் எதிரெதிர் திசைகளில் விடப்படும். இந்த ரயில்கள் பதினேழு ஸ்டேஷன்களை இணைக்கும். மினி பஸ் பிரயாணத்தில் 45 நிமிடங்களில் கடக்கக்கூடிய தூரத்தை மெட்ரோவில் பதினாறு



"'எம். எல். ஏ. ஆனதும் ஏழைங்களுக்கு வீடு கட்டிக் குடுக்கறதுதான் என் முதல் பணி'ன்னு சொல்லிட்டு இப்ப உங்களுக்கே வீடு கட்டிக்கிறீங்களே! நியாயமா?''

"ஹி... ஹி... எம். எல். ஏ. ஆகிறதுக்கு முன்னாடி நானும் ஏழைதானே!''

— வேதபுரி எஸ். இரமேஷ்.



பாக்தாத் ஸ்பெஷல்!

● 1918 தொடக்கத்தில் வெளிவந்த 'பாக்தாத் டைம்ஸ்' பத்திரிகையின் முதல் ஆங்கிலப் பதிப்பு சமீபத்தில் லண்டனில் ஏலம் விடப்பட்டது. இந்தப் பத்திரிகை, முதல் உலக மகா யுத்தத்தின் போது ஈராக்கில் இருந்த பிரிட்டிஷ் ராணுவத்தைப் பற்றிய செய்திகளைக் கொடுத்திருக்கிறது. இந்தப் பத்திரிகைப் பிரதி 308 பவுண்டிற்கு (இந்திய ரூபாய் மதிப்பில் சுமார் ரூ. 10,500/-) ஏலத்தில் எடுக்கப்பட்டது!

தகவல்: கிருஷ்ணவேணி ரங்கனாதன்.
நன்றி: பிசினஸ் இண்டியா.

நிமிடங்களில் கடந்துவிடலாம்.

தற்போது மெட்ரோ ரயில் இரண்டு பகுதிகளில் இயங்குகிறது: டம்டம்மிலிருந்து பேல்காச்சியா வரை சுமார் இரண்டு கிலோ மீட்டர்; எஸ்பிளேனேடிலிருந்து டாலிகஞ்ச் வரை சுமார் எட்டு கிலோமீட்டர்.

கல்கத்தா மெட்ரோவின் சிறப்பு அதன் தூய்மைதான். அப்போதுதான் துடைக்கப்பட்டதுபோல் பிளாட்பாரம் சுத்தமாயிருக்கிறது. தரையில் ஒரு காகிதத் துண்டுகூடக் கிடையாது. தெருக்களில் குப்பை போட்டாலும் கல்கத்தாவாசிகள் தங்கள் மெட்ரோவைக் குறித்து மிகவும் பெருமை கொண்டிருப்பதால் இங்கே குப்பை போடுவதில்லை!

ஸ்டேஷன்களின் சுவர்கள் கலைநயத்துடன் அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஸ்டேஷன் எந்த முக்கிய கேந்திரம் அல்லது நிறுவனத்துக்கு அருகே உள்ளதோ அதற்குப் பொருத்தமான ஓவியங்கள் சுவர்களை அலங்கரிக்கின்றன. உதாரணமாக ரவீந்திர சதன் அரங்குக்கு அருகில் உள்ள ஸ்டேஷனில் தாகூரின் ஓவியங்கள், அவருடைய கையெழுத்திலேயே அவரது ஆங்கில, வங்காளக் கவிதைகள் ஆகியவை சுவர்களில் பொருத்தப்பட்டுள்ளன. விளையாட்டு மைதானங்களுக்குப் பெயர் போன 'மைதான்' ஸ்டேஷனில் விளையாட்டுப் பந்தயங்களைச் சித்திரிக்கும் ஓவியங்கள் உள்ளன. ரவீந்திர சரோவர் ஏரிக்கரையில் குழந்தைகள் பூங்கா இருப்பதால் அந்த ஸ்டேஷனில் குழந்தைகளுக்கான பாடல்களும் அவற்றுக்குப் பொருத்தமான படங்களும் இடம்பெற்றுள்ளன.

டாலிகஞ்ச் ஸ்டேஷனில் ஸெயில் நிறுவனத்தின் ஆதரவில் ஒரு **art gallery** அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஆர்வமிக்க ஓவியர்கள் கட்டணம் ஏதுமின்றித் தங்கள் ஓவியங்களைக் காட்சிக்கு வைக்கலாம்.

மேல்நாட்டைப் போல் டிக்கெட் கொடுக்கும் இயந்திரங்கள், டிக்கெட்டை அதற்குரிய இடத்தில் நுழைத்தால் "ஆட்டோமேடிக்காகத் திறந்து கொள்ளும் நுழைவாயில்கள், ஸ்டேஷன் பிளாட்பாரத்திலிருந்து சாலையை அடைவதற்கு எஸ்கலேட்டர், ஏறிக்கொண்டதும் ஆட்டோமேடிக்காக மூடிக் கொள்ளும் ரயில் கதவுகள் (படிக்கட்டில் திராட்சை கொத்துப் போல் தொங்கும் பிரஜைசெல்லாம் கிடையாது!) என்று எல்லாமே சீராக அமைக்கப்பட்டுள்ளன. இந்த இனிய ஆச்சர்யங்களுக்கு மேலாக மெட்ரோ ஊழியர்கள் கட்டுப்பாட்டுடனும் சுறுசுறுப்பாகவும் இயங்குகிறார்கள் என்பது மேலும் ஓர் இனிய ஆச்சரியம். மனது வைத்தால், அரசாங்க நிர்வாகமும் சுறுசுறுப்பாக இயங்க முடியும் என்பதற்குக் கல்கத்தா மெட்ரோ ஓர் எடுத்துக்காட்டு.

— சு. கிருஷ்ணமூர்த்தி



புது நெல்லு புது நாத்து



பத்தொன்பதாம் நூற்றாண்டு ஓலைச் சுவடியை எடுத்துத் தூசு தட்டிப் பிரித்து முடிவு செய்திருக்கும் வெகுவான பழங் கதை.

கிராமத்து விவசாயிகளை ஏமாற்றிச் சொத்தை அபகரிக்கும் பண்ணையார். எதிர் காலத்தில் ஏழையின் மகன் பண்ணையார் மகளைக் காதலிக்க, உபரிப் பிரச்னைகள், வில்லனின் மரணம் என்ற இந்த வெகு சாதாரணக் கதையை ஒரு சின்னப் பட்டியல் கைகொடுத்துத் தேற்றுகிறது.

எவையெவை?

பட்டியலில் முதல் இடத்தில் கதாநாயகி சுகன்யா. இப்போதுதான் கவனிக்கிற புதுப் பறவை போல, கிராமத்துத் தாவரம் போல வெகு பொருத்தமான தேர்வு. கிருஷ்ண வேணியாக இவரின் நடன நடையும், பேச்சும், துடுக்கும், அட்டகாசம். நெருக்கக் கேமிராவில் இவரின் நாசியும், உதடுகளும் கொஞ்சம் அப்படி இப்படி இருந்தாலும் முகத்தின் அத்தனை திசுக்களும் நடிப்பில் பட்டொளி. மாமனிடம் அறை வாங்கி அழுது, கூட்டங் கூட்டி இவர் பேசும் நியாயம், தோளில் தொங்கியபடி மாமனின் பின் காலை வருடும் குறும்பு, இன்னும் இன்னும் என்று.... வருக இளவரசியே வருக!

அடுத்தவர் விஷம் தடவிய குறுவாள் போன்ற வில்லன். உயரமரமாய் அந்தத் தோற்றமும், விசிறி மீசையும், தக்கித்தக்கின பேச்சும், இப்படி அப்படித் திரும்பும் போது மின்னி மறையும் வைரக் கடுக்கன் என்று அவ்வளவும் நம் நெஞ்சில் பயவிதை தூவி விடுகின்றது. மனைவியிடம் இவர் அழுகையைப் பார்த்துத் திருந்தி விட்டாரோ, அதற்குள்ளாகவா எனக் குழம்புகையில், அது விஷயம் கிடைக்கச் செய்யும் உத்தி என்று புரிகிறது. சமீப வில்லன்களிலேயே டேஞ்சரஸ் ஃபெல்லோ!

பேசும் ஏற்ற இறக்கம் பற்றி வேறு வேறு விதக் கருத்துக்கள் இருந்தாலும் வசனம் சிறப்பாக இருக்கிறது. அதிலும் அந்த வில்லனுக்கு வெகு பொருத்தம்.

பாத்திரங்களுக்கு ஏற்ற நபர்களைத் தேர்ந்தெடுக்கும் டைரக்டர் இதில் வயதானவர்களுக்குக் கூட இளைஞர்களையே அமைத்திருப்பதில் சற்றே நாடகத் தன்மை தென்படுகிறது. ருத்ராவின் இடுப்பில் தெரியும் இளமை.... நடிப்பில்?

மானாட்டுநல்லூரின் வனப்புகளை மட்டுமில்லாமல் அங்கே ஊடோடியிருக்கும் மண் வாசனையையும் மிருதுவான இசையுடன் பாரதிராஜாவின் செலுலாயிட் வெளிப்படுத்தி இருக்கிறது. தொகுப்பும், படப்பிடிப்பும் மற்ற நிறைவுகள்.

கதை அமைப்பில் குறைகள், ஓட்டைகள் என ஏகமாக அடுக்கலாம். அதெல்லாம் அடிபட்டுப் போகிறது.....

மூச்சு முட்டும் கிராமத்து டாக்குமெண்டரியில்.

— சுந்தர்ஜி.



நிதானம்...
நிதானம்...
தர்மத்தைக்
காப்பாத்துங்க...
நீண்டு
தரையில
புரளணும்...
அப்பதான்
அழகு
கொஞ்சும்!
தேவிலால்
கருணாநிதி
மந்திர்
ராம் மந்திர்!
மண்டல்!
தேவிலாலும்
கருணாநிதியும்
சந்தித்து
ஒருவரையொருவர்
நம்பக்கம்
வருமாறு
அழைப்பு
விடுத்தனர்.
- செய்தி



கல்கி

1991 மார்ச் 31
மலர் : 49 இதழ் 35
பிரமோதூத பங்குனி 17



நீதித் துறையும் பீதி அளிக்கிறது!

நமது அரசியல் அமைப்பில் நாடாளுமன்றமும், நீதித்துறையும் சம அந்தஸ்து பெற்றவை. எனினும், நாடாளுமன்றத்தைவிட நீதித்துறையை மக்கள் அதிகமாக மதிப்பதுடன், அதுதான் தங்களை அநீதிகளிலிருந்து பாதுகாக்கும் என்பதாகவும் நம்புகிறார்கள். இதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை. நாட்டை ஆள்வது நாடாளுமன்றமே என்றாலும், அதன் அங்கத்தினர்கள் எல்லாரும் மிக உயர் தரத்தில் அமைந்து விடுவதில்லை. குறிப்பாக, மக்களவைக்கான வேட்பாளர்கள் வட்டாரச் செல்வாக்கு, பணபலம், ஜாதி, மதம் போன்ற பல அம்சங்களின் அடிப்படையில் கட்சித் தலைவர்களால் தேர்வு செய்யப்படுகிறார்களேயொழிய, அவர்கள் அறிஞர்கள், தன்னலமற்ற நேர்மையாளர்கள் என்பதற்காக அல்ல. ஏன், மாநிலங்கள் அவையில் கூட பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர் பெருமக்களுக்கு இடம் என்று முன்பிருந்த நிலை மாறி, அங்கும் அரசியல் நோக்கிலேயே பல்வேறு கட்சிக்காரர்களுக்கு வாய்ப்புத் தரப்படுகிறது. இத்தகைய அரசியல்வாதிகள் செய்கிற, அல்லது செய்யக்கூடிய தவறுகளிலிருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றி, அரசியல் சாசனப்படி நல்லாட்சியை நிலைநிறுத்தும் கடமையை நீதித்துறை செவ்வனே நிறைவேற்றும் என்று மக்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை வீண் போகாத விதத்தில் பல சந்தர்ப்பங்களில் மக்கள் நலனுக்கான மனுக்களை ஏற்று, உயர் நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் அரசுக்கு எதிராகவும், தேசநலன் கருதியும் தீர்ப்புக்கள் வழங்குகின்றன.

இவையெல்லாம் நீதித்துறையிடம் மக்களுக்கு மரியாதையை அதிகரித்துள்ளன என்ற போதிலும், சமீப காலமாக நீதித்துறையிலும் அரசியல் புகுந்து விளையாட ஆரம்பித்து விட்டதாக ஓர் அச்சம் பொது மக்களிடையே பரவி வருகிறது. நீதித்துறையில் நியமனங்கள், பதவி உயர்வுகள், மாற்றல் உத்தரவுகள் ஆகியன அரசியல் கண்ணோட்டத்தில் ஆட்சியில் இருப்பவர்களால் கையாளப்படுகின்றன என்ற கருத்து நிலவுகிறது. துரதிர்ஷ்டவசமான இந்தப் போக்கினால் நீதித் துறையின் நேர்மையும் நடுநிலைமையும் சந்தேகத்துக்குள்ளாகி வருகின்றன. பொதுவான இந்த நிலவரத்துக்குக் குறிப்பிட்டுக் கூறக் கூடிய ஓர் எடுத்துக்காட்டாக ஜஸ்டிஸ் ராமசாமி விவகாரம் அமைந்துவிட்டது மிகவும் விசனிக்கத்தக்கது.

ஹரியானா உயர்நீதிமன்றத்தில் பணியாற்றி வந்தபோது ஜஸ்டிஸ் ராமசாமி அரசுப் பணத்தை அளவுக்கு மீறிச் செலவழித்து, சோபா செட்டுகளையும் இதரப் பொருள்களையும் வாங்கிக் கொண்டார் என்றும், வேறு பல விதங்களிலும் அதிகார துஷ்பிரயோகம் செய்து மக்கள் பணத்தை விரயடித்தார் என்றும், பிரதம கணக்காயர் அறிக்கை கூறியது. இதை அடுத்து, 'உச்சநீதிமன்ற நீதிபதியாக ராமசாமி தொடர்ந்து பணியாற்றலாமா?' என்ற கேள்வி பிறந்தது. உச்சநீதிமன்றப் பிரதம நீதிபதியே ஒரு குழு அமைத்து விசாரணை நடத்தச் செய்தார். மூன்று நீதிபதிகள் அடங்கிய இந்தக் குழு, 'ராமசாமி தொடர்ந்து நீதிபதிக்குரிய பணிகளைச் செய்து வரலாம்' என்று தீர்ப்பளித்தது. இது அதிர்ச்சியளித்த ஒரு தீர்ப்பாகும். ஏனெனில், இந்த மூவர் குழுவே ராமசாமி தவறு ஏதும் செய்யவில்லை என்ற முடிவுக்கு வரவில்லை; மாறாக, 'லட்ச ரூபாய்க்கு வாங்கப்பட்ட சோபாக்களைக் காணவில்லை' என்றும், 'ராமசாமி இந்தத் தொகையை அரசுக்குத் திருப்பித் தருவதே நல்லது' என்றும் கூறியது. அப்படியிருந்தும் ராமசாமி தொடர்ந்து நீதிபதியாகப் பணியாற்றலாம் என்ற விநோதத் தீர்ப்பு, உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்களிடையே ஒரு கிளர்ச்சியையே தோற்றுவித்தது. இதன் அடுத்தகட்டமாக, நாடாளுமன்றத்தின் 108 அங்கத்தினர்கள், ராமசாமி மீது விசாரணை நடத்துமாறு சபாநாயகருக்கு மனு சமர்ப்பித்தனர். அவரும் மக்களவை கலைக்கப்பட்ட அன்று, அதற்குச் சற்று முன்னதாக, மூன்று நீதிபதிகள் அடங்கிய விசாரணைக் குழுவை அமைத்தார். இந்தக் குழு இனி தன் பணியைச் செய்யவிருக்கிறது.

வருந்தத்தக்க இந்தச் சூழ்நிலையில் ஜஸ்டிஸ் ராமசாமி ராஜினாமா செய்யாவிட்டாலும், குறைந்தபட்சம் தம் மீது விசாரணை நடந்து முடியும் வரையிலாவது நீதிபதிக்குரிய ஆசனத்தில் அமர்ந்து வழக்கு விசாரிப்பதில்லை என்ற முடிவைத் தாமே எடுத்து, பகிரங்கமாக அதை அறிவிக்கலாம். தமிழகத்தின் கௌரவம் அந்த அளவுக்கேனும் தப்பிப் பிழைக்கும்!

இவ்வளவுக்கும் இடையில் சட்ட அமைச்சர் சு. சுவாமி, ''ராமசாமி மீது நடக்கும் தாக்குதல், பி.ஜே.பி. — ஆர்.எஸ்.எஸ். சூழ்ச்சி'' என்று திருவாய் மலர்ந்தது விசனத்துக்கிடையே நம்மைச் சிரிக்கவும் வைக்கிறது!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

○ ஆண்டவனால் படைக்கப்பட்ட அபூர்வ மூலிகைகள் முதல் அப்போலோவில் வந்துள்ள அதிநவீன இயந்திரங்கள் வரை ஓர் அலசு அலசிய கல்கியின் 'மருத்துவச் சிறப்பிதழ்' விவரமாகவும், வித்தியாசமாகவும் இருந்தது!

குற்றாலம், அமிதா.

○ 'ஜெயிலுக்குப் போக வேண்டிய டாக்டர்கள்' தெளிவான நோக்கோடு, நேர்மையான துணிவோடு எழுதப்பட்ட கட்டுரை!

மருதூர், சிதை. கருணாநிதி

○ உடலுழைப்பு நிவாரணிகளினால் உடல் உபாதையைப் போக்கிக் கொள்ளும் இன்றைய உலகின் இயந்திர வாழ்க்கையில் உழலும் எண்ணற்றோர்க்கு, மருந்தில்லாமல் நோயினைக் குணப்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியுள்ள கடைசிப் பக்க கட்டுரை, மருத்துவச் சிறப்பிதழுக்குச் சிறந்த முடிவுரை!

கும்பகோணம், பாலு. கிருஷ்ணமூர்த்தி.

○ ஒரு சாதாரண புல்போலவின் வரிசை கூட நம் நாட்டில் ஒழுங்காகத் தயாரிக்க இயலவில்லை என்பதை நினைக்கும் போது மிகவும் வருத்தமாகத் தான் உள்ளது. ஆசிரியர் பக்கம் சிந்திக்க வைத்தது.

ஒரூர், வி. ஆர். ராஜேஷ்.

'ஓசி'க்கு இம்முறை மூச்!

○ மருத்துவச் சிறப்பிதழாக இருக்கிறதே. 'அறுவை'யாக இருந்து விடுமோ என்று சந்தேகத்தோடு படிக்க ஆரம்பித்தேன். அருமை எனச் சொல்ல வைத்து, மருத்துவச் சிறப்பிதழ் II, III என்றெல்லாம் வாராதா என ஏங்க வைத்து விட்டீர்கள்!

அரூர், மு. மதிவாணன்.

○ இலவசமாக மருத்துவம் பெற வேண்டிய பல இடங்களில் பணம் பறிபோகிறது. பணம் அதிகம் செலவாகுமே என்று எண்ணும் சென்னையில் இலவச கண் மருத்துவம்! ஆச்சர்யம்! டாக்டர்களின் பேட்டிக் கட்டுரைகள் ஒவ்வொன்றும் அருமை. இவற்றைத் தொகுத்து வெளியிட்ட கல்கியை எப்படிப் பாராட்டுவது என்றே புரியவில்லை. படித்ததும் பத்திரப்படுத்தி விட்டேன். ஓசிக்கு இம்முறை மூச்...!

மதுராந்தகம், எம்.வி. குமார்.

○ மருத்துவச் சிறப்பிதழ் சிறப்பாகவே இருந்தது. ஆனால் ஒரு முக்கிய விஷயத்தை மறந்து விட்டீர்கள். இன்று நாட்டில் எட்டாம் வகுப்புக் கூட பாஸ் செய்யாத பலர் EHMP, RMP, HMP என்ற போலியான பட்டங்களைப் போட்டுக் கொண்டு, ஆங்கில முறை (allopathy) மருத்துவம் செய்கிறார்கள். இவர்களை டாக்டர்கள் என நம்பி படிக்காத பாமர ஏழை மக்கள் வைத்தியம் செய்து தங்களின் உடலைப் பாழ் செய்து கொள்கிறார்கள். யாரும் கண்டு கொள்வது இல்லை. இதை மக்கள் புரிந்து கொள்ளும் வரையில் பிரசாரம் செய்தல் வேண்டும். நுகர்வோர் பாதுகாப்புக் குழு மூலம் இவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதையும் ஆராய்தல் வேண்டும்.

சின்னசேலம், கே. ஜெயகணேஷ்.

○ "முதன்முதலாக முதியோருக்காக" என்ற கட்டுரை படித்தேன். "ஜெனரல்" என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'முதன்மையான' என்ற ஓர் அர்த்தமுமுண்டு. General Hospital என்ற சொற்றொடருக்கு, தலைமை மருத்துவமனை என்றே பொருள் கொள்ள வேண்டும். 'பொது மருத்துவமனை' என்று கூறுவது தவறாகும்.

சென்னை – 56, எஸ். கிருஷ்ணன்.

○ கல்கி மருத்துவச் சிறப்பிதழில் இயற்கை சிகிச்சை பற்றி எங்களுடைய பேட்டியை வெளியிட்டமைக்கு நன்றி. சூரிய நமஸ்காரத்தில் சூரியனின் ஒளிக் கிரணங்கள் கண்வழியாகப் பாய்ந்து "பிட்யூட்டரி சுரப்பி"யில் தாக்கி அதை ஊக்குவிக்கிறது என்று இருக்கிறது. அது "பினியல் சுரப்பி" என்று இருக்க வேண்டும்.

சென்னை – 90, கே.வி. முரளி, லலிதா முரளி.

○ தலையங்கம் படித்தேன். பொம்மைப் பிரதமர் சந்திரசேகரால் நாட்டுக்கு ஒரு பயனும் செய்ய முடியவில்லை என்பதையும், அதே சமயம் உண்மைப் பிரதமர் ராஜீவ் செய்த அநியாயமான செயல்களையும் விலாவாரியாக எடுத்துக்காட்டி, காங்கிரஸ் அபிமானிகளையும் சற்று யோசிக்க வைத்து விட்டீர்கள். பாராட்டுக்கள்!

சென்னை – 35, எஸ். தங்கராஜு.

○ 'சந்திரசேகர் 117 நாள் ஆண்டதால் நாட்டுக்கு ஒரு பயனும் இல்லை' என்னும் ஆசிரியரின் தலையங்கம் ஒருதலைபட்சமானது. கொழுந்து விட்டு எரிந்த பஞ்சாப் பிரச்னை, காஷ்மீர் பிரச்னை, ராமஜன்ம பூமி பிரச்னை, மண்டல் கமிஷன் போன்ற பிரச்னைகள் அடங்கியிருக்கின்றன. தீர்வுக்காகப் பேச்சுவார்த்தைகள் நடப்பதும் சந்திரசேகர் ஆட்சியால் தான்.

கச்சணம், ஜி. பாலசுப்ரமணியன்.


○ கல்கி 10.3.91 இதழில் 'அபூர்வத் தலைவர் பெற்ற அன்புப் பரிசு' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை படித்தேன். கள்ளிகுளம் கிராமத்துக்குச் செல்லுவோர் ஒரு டம்ளர் தண்ணீர் கேட்டால் ஊர் மக்கள் யோசித்து விட்டுப் போனால் போகிறதென்று அரை டம்ளர் கொடுப்பார்கள் என்றும், ஆடி மாதம் இந்த ஊரில் மாதா கோவில் திருவிழா நடக்கும் போது ஒரு டம்ளர் தண்ணீர் இரண்டு ரூபாய் வரை விற்றதாகவும் கட்டுரையில் காணப்படுகிறது. இரண்டும் உண்மைக்கு மாறான செய்திகளாகும்.

அங்கே பல ஆண்டுகளாகத் தண்ணீர் கஷ்டம் இருந்து வருவது உண்மை. என்றாலும் களிகை மக்கள் நற்பண்புகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள். களிகை வரலாற்றில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு டம்ளர் தண்ணீர் இரண்டு ரூபாய்க்கு விற்றதாக எந்த ஆதாரமும் கிடையாது. களிகை மக்களுக்கே தண்ணீர் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, அன்னையின் திருவிழாவைக் காண வரும் பக்தர்களுக்கு எப்படியும் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதற்காகக் கோவில் நிர்வாகமும், களிகை பஞ்சாயத்தும் இணைந்து வெகுதூரத்தில் இருந்து லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டு வந்து பக்தர்களுக்கு இலவசமாக வழங்குகின்றன.

சென்னை, எஸ். ஜார்ஜ் செல்வன்.
செயலாளர்,
சென்னை வாழ்களிகை மக்கள் நற்பணிமன்றம்.

வட்டமேஜை

சம்பாத்தியமும் போதாது...
சாமர்த்தியமும் போதாது!



தேன் நிலவும்
அதன் பின்பும் — 13

ஆனால் இது மிகத் தவறான முடிவென்பது சீக்கிரமே நிரூபணமாயிற்று. மாப்பிள்ளை கேசவனுக்கு அந்த வீட்டில் சொஞ்சம்கூட மரியாதை இல்லை. மாமியாரும் மாமனாரும் பேர் பேராக விரட்டினார்கள். மனைவி அவனைக் கண்டு கொள்ளவேயில்லை. தான் பாட்டுக்கு 'ஹாய்'யாக கிளம்பி, தினமும் வெளியே போய்விட்டு, இஷ்டப்பட்ட நேரத்தில் வீடு திரும்புவான்.

பொறுக்க முடியாமல் கேசவன் மீண்டும் மாற்றல் வாங்கிக் கொண்டான். இந்த முறை கோமளா அவனுடன் செல்ல மறுத்தாள். பிரிந்து சென்றவன், மனைவிக்கு அன்பு நிறைந்த கடிதங்களையும் மாமியாருக்கு வெறுப்பை உமிழும் கடிதங்களையும் எழுதினான். மாமியார் அவனுக்கிழைத்த ஒவ்வொரு அவமானத்துக்கும் பதிலடி கொடுக்கும் திருப்தி அவனுக்குக் கிடைத்தது! அவ்வப்போது மனைவி இருந்த ஊருக்கு வந்து அவளை மட்டும் வெளியே அழைத்துப் போவான். அந்த சமயங்களில் கேசவன் தன் அம்மாவிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று வற்புறுத்துவாள் கோமளா. ஒவ்வொரு முறையும் அதற்கு மறுத்து வந்தவன், ஒரு முறை அவள் பிடிவாதமாக நச்சரிப்பதைத் தாளாமல் நிரந்தரமாக அவளைப் பிரிவது என முடிவு செய்து விட்டான்.

நண்பர்கள் சிலர், நல்லெண்ணத்துடன் கேசவனை மண நல ஆலோசகர்களிடம் அழைத்துச் சென்றனர். Legal Aid Board ஐச் சேர்ந்த அந்த ஆலோசகர்கள்





கேசவனை மனம் விட்டுப் பேசத் தூண்டினர்.

"என் மாமனார் தன் மனைவிக்குப் பயந்து அடங்கி ஒடுங்கிக் கிடக்கிறார்; அதே போல் நானும் மனைவிக்கு அடங்கிக் கிடக்க வேண்டும் என்று நினைக்கிறாள் என் மாமியார். அந்த எண்ணத்தைத் தன் மகளுக்கு மூளைச் சலவை செய்து ஏற்றிவிட்டிருக்கிறாள். கோமளாவும் சுயமாகச் சிந்திக்காமல் அம்மா சொல்படி ஆடுகிறாள்!... என் மனைவி பத்தாம்பசலியாக எனக்கு அடங்கிச் சேவகம் செய்ய வேண்டும் என்று நான் கேட்கவில்லை. ஆனால் பரஸ்பர மரியாதை கூட இன்றி நான் எப்படி அவளோடு வாழ்க்கை நடத்த முடியும்....?" என்று கேசவன் கூறினான்.

மண நல ஆலோசனை கோமளாவின் பெற்றோருக்குத்தான் அதிகமாகத் தேவை என்பதை உணர்ந்து அவர்களை அழைத்தனர் ஆலோசகர்கள். கோமளாவின் தந்தை ராமனிடம் தனியாகப் பேசி, மாப்பிள்ளையின் மனக்குறையை எடுத்துச் சொன்னார்கள். சிறிது யோசனைக்குப் பிறகு ராமனிடம் பிரமிக்கதக்க மாற்றம் ஏற்பட்டது! சினிமா கணவர்கள் கடைசிக் காட்சியில் அந்தர் பல்டியடித்து வில்லி மனைவியைச் சாடுவதுபோல் சாடினார். அந்த அம்மாளுக்குக் கிடைத்த அதிர்ச்சி வைத்தியம் நல்ல பலன் அளித்தது. கோமளா – கேசவன் வாழ்க்கையில் தலையிடுவதை அவள் நிறுத்தினாள். கோமளாவின் பொருட்களை அவளிடமே கொடுத்து, கேசவனிடம் அனுப்பினாள். இதற்குப் பிறகு அவர்கள் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மலர ஆரம்பித்தது.

தொகுப்பு: **எஸ். ஆர்.**

“ஜும்மா சும்மா தே!



ஹம்

● அறுபத்தைந்து லட்சங்கள் முதலீடு செய்து எடுக்கப்பட்ட படம்!

● வெளிவந்த ஒரு வாரத்தில் ஒரு கோடி பதினைந்து லட்சம் ரூபாய் வசூல்! இப்போது ஏழு கோடியை எட்டிப் பிடித்து விட்டது!

● இப்படம் வெளிவந்த ஓரிரு வாரங்களில் பம்பாய் தியேட்டர்களில் டிக்கெட்டுகள் பிளாக்கில் நூறு ரூபாய் வரை விற்றன!

● அட்வான்ஸ் புக்கிங்கே இல்லாத தியேட்டர்களில் கூட, கூட்ட நெரிசலையும், அடிதடி சண்டைகளையும் தவிர்க்க, தற்காலிக அட்வான்ஸ் புக்கிங் கவுண்டர்கள் திறக்கப்பட்டன. ஹம் ஓடும் தியேட்டர்களில் 'ஹவுஸ் ஃபுல்' போர்டு நிரந்தரமாகத் தொங்குகிறது!

● ஹம் வீடியோ காஸெட்டுகளுக்கு நான்கு மணி நேரத்துக்கு ஐம்பது ரூபாய் என்று கூடுதல் வாடகை வசூலிக்கப்படுகிறது. அவ்வளவு டிமாண்ட்!

● 'ஜும்மா' (வெள்ளிக்கிழமை) அன்று வெளியே செல்லும் பெண்களைப் பார்த்துப்

சினிமாவும் சும்மாவே!



பம்பாய் இளைஞர்கள் 'சும்மா' (முத்தம்) கேட்டுப் பாட ஆரம்பித்து விட்டனர்! ('ஜும்மா சும்மா தேதே' ஹம் இன் ஹிட் பாடல்)

●● ஹம் பட ப்ரிவியூவுக்குப் பிரதமர் சந்திரசேகர் வந்தது ஏராளமான பரபரப்பை ஏற்படுத்தியது!

●● 'கூலி' படப்பிடிப்பின் போது ஏற்பட்ட விபத்துக்குப் பிறகு பிழைத்துப் புனர்ஜன்மம் எடுத்த அமிதாப் பச்சன் 'ஹம்' வெளியான பிறகு திரைவாழ்வில் புனர்ஜன்மம் எடுத்திருக்கிறார். இந்த 'உயர்ந்த' மனிதனை நேரில் சந்தித்துப் பேட்டி கண்டோம்:

கேள்வி: 'ஹம்' படத்தின் இமாலய வெற்றிக்கு என்ன க்ாரணம் என்று நினைக்கிறீர்கள்?

அமிதாப் பச்சன்: படத்தின் பின்னணி இசைதான்! இப்போதெல்லாம் ஒரு படம் வெளியாவதற்கு முன்பே அதன் பாடல் காசெட்டுகள் வெளியாகி விடுகின்றன. 'ஜும்மா சும்மா'வும் 'எக் தூஸ்ரே ஸே ஹம்' பாடலும் ரசிகர்களை ஈர்த்து, இப்படத்தைத் திரையில் பார்த்தே ஆக வேண்டும் என்ற ஆவலையும் எதிர்பார்ப்பையும் வளர்த்தன. பாடல்களுக்கு அடுத்தபடியாக 'ஸ்டார் வால்யூ' ரசிகர்களைக் கவர்ந்தது. 'ஊட்டி'யையும் மொரிஷியஸையும் உயிர்பெற வைத்திருக்கும் காமெரா யுக்தியையும் வெற்றிக்குக் காரணம் என்று கூறலாம்.

கே: இப்படத்தின் எந்தக் காட்சி உங்களுக்கு அதிக மன நிறைவைத் தந்தது?

அமிதாப்: ஒவ்வொரு காட்சியையும் விரும்பி, ரசித்துத்தான் செய்தேன். ஆனால் எனக்கு மன நிறைவைத் தந்த விஷயம் யூனிட்டில் ஒவ்வொருவருமே 'ஹம்' (நாம்) என்ற ஒன்றுபட்ட சிந்தனையுடன் செயல்பட்டதுதான். கோவிந்தா, ரஜினி, கிமி, ஷில்பா, தீபா என்று நாங்கள் ஒரு பெரிய நட்சத்திரக் கூட்டமாக இருந்தபோதிலும் ஏ. ஸி, தனி மேக்கப் மேன், தனி சௌகரியங்கள் போன்ற ஆடம்பரங்கள் இல்லாமல், ஒன்றாகவே உழைத்து, உண்டு, ஒரு குடும்ப





"என் மனைவி சாப்பாடு பரிமாறினா, இன்னைக்குப் பூராச் சாப்பிடலாம்!"

"அவ்வளவு தூரம் உபசரிச்சுப்போடுவாங்களாக்கும்...?"

"அட நீங்க வேற! சாதத்துக்குக் குழம்பு போட்டுட்டு எதிர் வீட்டுக்கு வம்பளக்கப் போறவ, சாயந்திரம்தான் ரசம் போடவே வருவா!"

— சீர்காழி வி. ரேவதி.

மாகச் செயல்பட்டோம்... எனக்குச் சவாலாக இருந்த காட்சி என்று ஹெலிகாப்டர் காட்சியைக் குறிப்பிடலாம். முதலில் 'டூப்' போட்டுச் செய்யத்தான் தீர்மானித்தோம். ஆனால், அதை நானே செய்தால்தான் ரசிகர்கள் மனத்தில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தும் என்று தோன்றியதால் துணிந்து 'ரிஸ்க்' எடுத்தேன்.

கே: இப் படத்தில் 'டைகராக' நீங்கள் தோன்றும் காட்சிகளில் வன்முறைக்குக் குறைவேயில்லை! சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு செயல்படும் கதாநாயக வேடங்களில் நீங்கள் பல முறை நடித்திருக்கிறீர்கள். இதனாலெல்லாம் சாதாரண மக்கள் பாதிக்கப்பட்டு, தாங்களும் அதைப் போல் செய்யலாம் என்று துணிவு கொள்வதாகக் குற்றம் சாட்டப்படுகிறதே!

அமிதாப்: சினிமாக்கள் வன்முறைக்கு வித்திடுகின்றன என்ற வாதம் அர்த்தமற்றது! பகல்பூர் ஜெயிலில் நடந்த வன்முறை எந்தப் படத்தால் உந்தப்பட்டது?! பாக் பிரிவினைக்கு முன்னும் பின்னும் நடந்த வன்முறைகளை எந்தத் திரைப்படம் தூண்டிவிட்டது!? சினிமா என்கிற சாதனம் இவ்வளவு பிரபலமாவதற்கு முன்பு உலகில் வன்முறையே இருக்கவில்லையா? இன்று நிலவும் பஞ்சாப், காஷ்மீர் ஸ்ரீலங்கா பிரச்னைகளுக்கு என் படங்களா வித்திட்டன? எங்கோ ஒரு பெண் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதற்கு சினிமாதான் தூண்டுகோலாக இருந்தது என்று யாரோ சொல்லப் போக, அதையே பொது விதியாக எடுத்துக் கொள்வது தவறு! அதிக அளவு சினிமா கொட்டகைகள் உள்ள ஆந்திராவிலும் தமிழகத்திலும் வன்முறை குறைவாகவும் மிகக் குறைந்த சினிமா கொட்டகைகள் உள்ள பீகாரில் வன்முறை உச்சக்கட்டத்திலும் உள்ளதே! நிஜ வாழ்க்கையைப் பார்த்துத்தான் நாங்கள் படமெடுக்கிறோமேயொழிய படத்தைப் பார்த்து வாழ்க்கை அமைவதில்லை...... நம் நாட்டை இன்று ஆட்டிப் படைப்பது இன வெறிதான். இந்த இனக் கலவரத்தைத் தூண்டும் வகையில் நான் எந்தப் படத்திலாவது நடித்திருக்கிறேனா? மாறாக, 'ஹம்' படத்தில் கிறிஸ்துவப் பெண்ணைக் காதலிப்பதாகவும் மற்றொரு படத்தில் ஒரு முஸ்லிம் வீட்டில் வளரும் ஹிந்துவாகவும் நடித்துள்ளேன். 'ஹம்' என்ற தலைப்பு வலியுறுத்துவதைப் போல் 'எல்லோரும் ஓர் குலம், ஒரு தாய் மக்கள்' என்ற கருத்தைத்தான் நிலைநாட்ட முயன்றுள்ளோம்.

கே: 'ஹம்' இல் உங்களுக்கு இளவலாக நடித்த தென்னகத்து சூப்பர் ஸ்டாரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அமிதாப்: நிஜ வாழ்விலும் அவரை என் 'சின்னத் தம்பி'யாகவே பாவிக்கிறேன். அவரும் என்னை அண்ணனுக்குரிய மரியாதையுடன் நடத்துகிறார். நடிப்புத் திறமையோடு தொழில் தர்மத்தை மதித்து நடந்து கொள்ளும் பண்பு படைத்தவர். யாருக்கும் அவரால் தொந்தரவு கிடையாது. அவரோடு சேர்ந்து இன்னும் நிறையப் படங்கள் செய்ய விரும்புகிறேன். பந்தா இல்லாமல் பழகும் அவர் ஒரு 'சென்சேஷனல்' நடிகர் மட்டுமல்ல; சென்சேஷனல் மனிதரும் கூட.

கே: 'போபர்ஸ்' வழக்கில் நீங்கள் பெற்ற வெற்றிக்கும் 'ஹம்' படத்தின் வெற்றிக்கும் தொடர்பு உள்ளதாகக் கூறப்படுகிறதே....?

அமிதாப்: அது யதேச்சையாக நிகழ்ந்த ஒற்றுமை! ஒரு படத்தின் வெற்றிக்கு, அதில் நடிப்பவர்களுடைய அரசியல் அல்லது சொந்த வாழ்க்கை காரணமாக முடியாது என்பது என் கருத்து. ஆனால் மக்கள் எனக்கு மாறாக நினைத்து, நீங்கள் சொல்வது போன்ற தீர்ப்பை அளித்தால் அதற்கு நான் தலை வணங்குகிறேன்!

கே: 'ஹம்' மின் வெற்றிப் படிகள், உங்கள் அரசியல் வாழ்க்கைக்கு ஏணிப் படிகளாக விளங்குமா?

அமிதாப்: விளங்காது! 1987 இலேயே எனது அரசியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டேன். இனி பிரசாரம் செய்யும் முகமாகக் கூட அரசியலில் ஈடுபட மாட்டேன். அரசியலில் இருந்தவரை என்னைத் தூற்றிக் கொண்டிருந்தார்கள். போற்றலும் தூற்றலும் அரசியலில் சகஜம்தான் என்றாலும் நான் மற்றவர்களைப் போலில்லை. 'அரசியல் விளையாட்டை' விளையாட இங்கு பல திறமைசாலிகள் உள்ளனர். அவர்களுக்கு ஒப்பான திறமைகள் எனக்கு

இல்லை என்பதை ஏற்றுக் கொண்டு நான் வாளாவிருப்பது என்று முடிவு செய்து விட்டேன்.

கே: பணத்துக்காக ஒரு படத்தை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் இன்று உங்களுக்கு இல்லை. 'சூப்பர் ஸ்டாராக' புகழேணியின் உச்சியையும் எட்டிவிட்டீர்கள். அதனால், சராசரி மசாலா படங்களை விடுத்து, அறிவு பூர்வமான, அர்த்தமுள்ள படங்களில் நடிக்க மட்டுமே நீங்கள் ஒப்புக் கொள்ளக் கூடாதா?

அமிதாப்: முதலாவதாக, நான் சூப்பர் ஸ்டார் என்ற எண்ணம் எனக்குக் கிடையாது! அது பத்திரிகையாளர்கள் ஒட்ட வைத்த அடைமொழி! நான் செய்யும் 'ரோல்'களுக்கும் அந்த அடைமொழிக்கும் சம்பந்தமில்லை என்பதே என் கருத்து.

இரண்டாவதாக—மக்கள் அறிவு பெருக்கத்துக்காக சினிமாவுக்குப் போவதில்லை. பொழுது போக்குக்காகவே செல்கிறார்கள்.. என் குழந்தைகளுக்கு அறிவு புகட்ட கல்விக் கூடத்துக்கு அனுப்புவேனேயொழிய சினிமாவுக்கல்ல!

மூன்றாவதாக—மக்களின் சிந்தனையைத் தூண்டி, அறிவை வளர்க்க வேண்டிய பொறுப்பு சினிமாக்காரர்களுடையதல்ல! அரசியல்வாதிகள் கல்வித் துறையினர், இதைச் செய்யட்டுமே!

இறுதியாக—வித்தியாசமான படங்கள் மக்களுக்குப் பிடித்திருந்தால் அவர்கள் அவற்றைப் பேணி வளர்த்திருப்பார்களே! அத்தகைய படங்கள் எடுக்கப்பட்டு டப்பாவில் தூங்குவது ஏன்?...... நீங்கள் கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்பதைப் போல் மிக அதிகமாக எதிர் பார்க்கிறீர்கள் — திரைப்படங்கள் ஜனரஞ்சகமாகவும் இருக்க வேண்டும், அறிவு பூர்வமாகவும் இருக்க வேண்டும்; 'போர்' அடிக்கவும் கூடாது போதனைகளும் வேண்டும் என்றால் எப்படி! பல படங்களில் நான் செய்ததையே திரும்பத்திரும்பச் செய்கிறேன் என்பதை மறுக்கவில்லை. ஆனால் வேறு வழி....? 'மை ஆஜாத் ஹூம்' போன்ற வித்தியாசமான படங்களை எடுத்தால், ரசிகர்கள் தோல்வியைத் தழுவ வைத்து விடுகிறார்களே!

கே: 'எனக்கு ஐம்பது வயதாகிவிட்டது; இனி ஆடிப்பாடி மரத்தைச் சுற்ற மாட்டேன்' என்று கூறியிருக்கிறீர்கள்...... அப்படியானால் 'ஹம்' மில் கடைசி முறையாக மரத்தைச் சுற்றியிருப்பதாகக் கொள்ளலாமா?

அமிதாப்: இதே பாணியில் இன்னும் மூன்று படங்களை நான் முடிக்க வேண்டியுள்ளது. அதற்குப் பிறகு எனது ஐம்பது வயதுக்கேற்ற பாத்திரங்களையே ஏற்பதென்று முடிவு செய்திருக்கிறேன்.

'ஹம்' இயக்குனர் முகுல் ஆனந்த் பேட்டி:

கே: புளித்துப் போன இந்தப் பழங்கதை (பழிவாங்கும் படலம்) யைப் படமாக்கும் போது இது வெற்றி பெறும் என்று நீங்கள் எதிர்பார்த்தீர்களா!

ப: ஓ! எனக்குப் பிடித்தவற்றை (காநூன் க்யா கரேகா, அக்னிபத் போன்ற படங்கள்) அளித்த போது மக்கள் நிராகரித்தார்கள். அதனால் அவர்கள் விரும்புவதையே தருவதென்று முடிவு செய்தேன். மணிரத்தினம் போன்றவர்கள் தமிழ் சினிமாவுக்குப் புதுப் பொலிவு ஏற்றி வருகிறார்கள். நானும் அப்படி ஆரம்பித்தவன்தான். ஆனால் ஹிந்தி ரசிகர்களிடம் அவை எடுபடவில்லை. அதனால் அவர்கள் நிலைக்குக் கீழே வந்து, 'ஹம்' போன்ற ஜனரஞ்சகமான சூப்பர் ஹிட்டுகளையே தருவது என்று முடிவு செய்து விட்டேன்.

கே: நீங்கள் புதுமையைப் புகுத்துவதில் ஆர்வமுள்ளவராயிற்றே.... இப்படத்தில் அந்த ஆவலை எப்படி அடக்கிக் கொண்டீர்கள்?

ப: கருத்தில் புதுமை புகுத்தும் ஆசையை விடுத்து, வேறு சில புதுமைகளைச் செய்திருக்கிறேன். மத்தியதர வகுப்பு மக்கள் என்றால் வறுமையில் வாட வேண்டுமென்ற சினிமா ஃபார்முலாவை மாற்றி அவர்களை வசதியானவர்களாகக் காட்டியிருக்கிறேன். 'ஜும்மா சும்மா', 'ஸனம் தேரி ஸனம்' ஆகிய பாடல் காட்சிகளைக் கனவுக் காட்சிகளாக்காமல் நிஜக் காட்சிகளாகக் காட்டியுள்ளேன். 'ஏழைகள் எப்படி இவ்வளவு பீர் குடிக்கிறார்கள்? ஊட்டியில் எப்படி

"என்னபொய்தான் சொல்லிப்பாட் டுச்சொல்லிப்பாட் விக்கறதுங்கிறதே இல்லாமல் போயிட்டுது!"

"என்னாச்சு?"

"பக்கத்தில் பீச் வரப் போகுதுன்னு விளம்பரப்படுத்தியிருக்காங்க!"

— வேதபுரி எஸ். இரமேஷ்.



விமானம் வந்தது?' போன்ற பகுத்தறிவுக் கேள்விகளையெல்லாம் கேட்கக் கூடாது! மூளையைக் கழற்றி வைத்துவிட்டுக் கொஞ்சம் நேரம் ஜாலியாகப் பொழுதைக் கழிக்க வேண்டுமானால் 'ஹம்' பாருங்கள்.

கே: இசைமயமான காதல் சித்திரங்களே பிரபலமாகவிருந்த ஒரு காலகட்டத்தில் வன்முறைக் காட்சிகள் கொண்ட பழிவாங்கும் கதைக்குத் திரும்பியதேன்?

ப: 'கானூன் க்யா கரேகா', 'அக்னிபத்', 'சிவா' போன்ற படங்களோடு ஒப்பிடும் போது 'ஹம்' மில் வன்முறை மிகவும் குறைவு.... இதில் எங்கேயும் ரத்த ஆறு பாயவில்லை; குண்டடிப்பட்ட காயங்கள் காட்டப்படுவதில்லை.

கே: இப்படத்தின் சிறப்பம்சம் என்னவென்று நினைக்கிறீர்கள்?

ப: துறைமுகப்பகுதியை (Docks) நிலைக்களனாக வைத்து எந்த டைரக்டரும் இது வரை காட்சிகளை அமைத்ததில்லை. அந்தப் பகுதியில் குடிசை முதல் மாளிகை வரை எல்லாவற்றையும் அமைத்தோம். ஒளிப்பதிவிலும் 'ஹம்' ஒப்புயர்வற்றது. மணிரத்னம் தம் குழுவுடன் அதிகாலையிலேயே ஊட்டியில் ஷூட்டிங் ஆரம்பித்து விடுவார் என்று கேள்விப்பட்டோம். அதே போல் நாங்களும் செய்யத் திட்டமிட்டோம். ஆனால் இரண்டு பெரிய சூப்பர் ஸ்டார்கள் உள்ளனரே என்று தயக்கம். அவர்கள் அபாரமாக ஒத்துழைத்தார்கள்.

கே: ரஜினியின் ஹிந்தி உச்சரிப்பு வித்தியாசமாகப் படவில்லையா?

ப: அவர் மீது எனக்கு அலாதியான அன்பு. அதனால் அவர் பேசும் ஹிந்தியும் எனக்குப் பிடித்துவிட்டது. என்ன... கொஞ்சம் வேகமாகப் பேசுகிறார். எப்படியிருந்தாலும் அவர்கள் ஊட்டியில் பிறந்து வளர்ந்ததாகக் கதை அமைந்துள்ளதால் அந்த உச்சரிப்பும் இயல்பானதாகவே தோன்றுகிறது.

கே: சாதனை படைத்து வரும் இந்தப் படத்தில் உங்களுக்குச் சோதனையாக அமைந்த காட்சி எது?

ப: அமிதாப் ஹெலிகாப்டரிலிருந்து தொங்கும் காட்சிதான். அவர் ஏற்கெனவே குடலும் வயிறும் தைக்கப்பட்டவர். இனி அனிஸ்தீஷியா கூட அவரால் எடுத்துக் கொள்ள முடியாது. இந்நிலையில் அவரைத் தவிர வேறு யாரும் இவ்வளவு ரிஸ்க் எடுக்கத் துணியமாட்டார்கள்.

'ஜும்மா சும்மா' புகழ் கவிதா கிருஷ்ணமூர்த்தி கூறுவது என்ன...?

இந்தப் பாடலை முதலில் பதிவு செய்ய ஆரம்பித்த போது நூறோடு நூற்றியொன்றாக அமையும் என்றுதான் நினைத்தேன். ஆனால் ரெக்கார்டிங் தியேட்டரிலேயே அதன் வசீகரம் புரிய ஆரம்பித்து விட்டது. முதலில் ரெக்கார்டிங் தியேட்டர் சிப்பந்திகள் இந்த மெட்டை முனக ஆரம்பித்தார்கள். மெதுவாக வெளியே பரவியது. பிறகு பச்சன் தம்பதி, இயக்குனர் முகுல் ஆனந்த், ரொமேஷ் ஷர்மா என்று ரெகார்டிங்குக்கு வந்த அவ்வளவு பேரும் இதை ஹம் பண்ண, யாரோ ஒருவர் தாளத்துக்கேற்ப சின்னஞ்சிறு அசைவுகள் செய்ய, சீக்கிரமே அவ்வளவு பேரும் பாட்டுக்கு ஏற்ப ஆடும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது! அப்போதுதான் அப்பாடல் நிச்சயம் 'ஹிட்'டாகும் எனத் தெரிந்தது. முஸ்லிம்களின் மனம் புண்படக் கூடும் என்பதால் இப்பாட்டை ரேடியோ, டீ. வி. யில் தடை செய்து விட்டனர். தடைகளையும் மீறி இன்று தெருவுக்குத் தெரு ஒலிக்கிறது!

பேட்டிகள்: **ஜெயஸ்ரீராஜ்**

அட்டை வண்ணப்படம்:
கே. ஆர். வி. பக்தா



போலீஸ் அதிகாரி: கேடி கண்ணுச்சாமியை எப்படியும் இந்த வாரத்துக்குள்ளே பிடிச்சிடுவோம்.

திருடர்: ஒரு வருஷமாப் பிடிக்க முடியாத நீங்க, எப்படி ஒரு வாரத்துலே பிடிப்பீங்க?

போலீஸ் அதிகாரி: அடிக்கடி மாமூல் வாங்கினாச் செலவாயிடுதேன்னு, நாங்கதான் மொத்தமா வாங்கிக்கலாம்னு விட்டு வைச்சிருக்கோம்!

— சீர்காழி வி. ரேவதி.



பாஸ்கரன் வாங்கிய புடவை!

'**நூ**த்தி எட்டு' என்று சொல்லிக் கொண்டே பாஸ்கரன் காட்டிய புடவையைத் தூக்கிப் போட்டான் கடைக்காரன்.

''பரவாயில்லையே, நூத்தி எட்டு ரூபாய்க்கு இவ்வளவு அழகா இருக்கே'' என்று புடவையைத் தொட்டுப் பார்த்து வியந்தான் பாஸ்கரன்.

''இருக்காதா பின்னே'' என்று முறைத்தான் கடைக்காரன். ''நீங்கள் பார்ப்பதற்காக நான் எடுத்துப் போட்ட நூத்தி எட்டாவது புடைவை இது! அதோடு ஒரு சைபரைச் சேர்த்துட்டா தோராயமா அதோட விலை தெரியும்! என்று சொல்லி விட்டு, ''டேய் சோமாறி, சீக்கிரமாப் போய் ஒரு ம வாங்கிட்டு வா'' என்று கட்டளையிட்டதும் ஒரு கணம் நிலைதடுமாறிப் போனான் பாஸ்கரன்.

அவன் கட்டளையிட்டது தனக்கு அல்ல. சப்தமில்லாமல் தனக்குப் பின்னால் வந்து நின்ற கடைப் பையனைத்தான் என்று தெரிந்தபிறகுதான்மனம்சமாதானப்பட்டது. இருந்தாலும் கடைக்காரன் உதிர்த்த பாய்ச்சல் சொற்களில் தனக்கும் ஏதோ ஒரு வகையில் தூரத்து சொந்தம் இருப்பதாக அவனுக்குப் பட்டது.

மனைவியை நினைத்து எரிச்சல்பட்டான்.

'இந்த சந்தியா சொன்னால் கேட்கவே மாட்டாள். கடைக்குப் போய் நானே செலக்ட் செய்து ஒரு புடவையை எடுத்து வர வேண்டுமாம். அதை வைத்து என் செலக்ஷன் கிரேடை அவள் நிர்ணயிப்பாளாம். இதெல்லாம் எவனால் ஆகும்...?'

தன் முன்னே மலையாகக் குவிந்து கிடந்த புடைவைகளைப் பார்த்து அவனுக்குக் கிலியாக இருந்தது. இதில் ஒரு புடவையையேனும் வாங்கிக் கொள்ளாமல் கடையை விட்டு வெளியே செல்லவே திகிலாக இருந்தது அவனுக்கு. அங்கு இல்லாத நிறத்தில் ஒரு புடைவையைக் கேட்டால் தப்பி வந்து விடலாம் என்று தந்திரக் கணக்கு போட்டது அவன் மனம்.

ஜீவா



''என் மாமியாருக்கு 'எஸ். பி. பி. என்று பட்டம் கொடுத்திருக்கிறார்கள்.

''அவ்வளவு நன்றாகப் பாடுவார்களா?''

''இல்லை! மூச்சு விடாமல் சண்டை போடுவார்!''

— ஏ. விஜி முரளி.

''ரோஸ் கலரும், மெரூன் கலரும் கலந்த மாதிரி ஒரு புடவை... எங்கேயோ பார்த்திருக்கேன்... பச்சை கலரில் பொட்டு பொட்டாய்....'' என்று அசடு வழிய இழுத்தான் பாஸ்கரன்.

''ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி அந்தப் புடவையை இங்கேயேதான் பார்த்தீங்க'' என்று சொல்லி விட்டு அந்த மலைக் குவியலின் அடியில் இருந்து ஒரு புடவையை எடுத்து வெளியே போட்டான் கடைக்காரன்.

தன் கற்பனையில் எழுந்த அதே கலரும், டிசைனுமாயிருந்த அந்தப் புடவையைத் திக்பிரமையுடன் பார்த்தான் பாஸ்கரன்.

தன்னுடைய தந்திரக் கணக்கு தப்புக் கணக்கு ஆகி விட்டதையும், புடவையை வாங்காமல் தப்பிச் செல்வதற்கான அனைத்து மார்க்கங்களும் அடைபட்டுப் போனதையும் உணர்ந்தான் அவன்.

மடமடப்பான காகிதப்பை சூறைக் காற்றில் படபடப்பதைப் போல் சிடுசிடுத்தாள் சந்தியா.

''எப்படித்தான் இப்படி ஒரு கலரில் புடவையை எடுக்க மனசு வந்ததோ உங்களுக்கு. 'இது என்ன கலர்'னு நாலு பேர் கேட்டா நம்மால் சொல்ல முடியுமா? இந்த லட்சணத்தில் சேத்து மேல சோத்தைக் கொட்டின மாதிரி புள்ளிகள் வேறு. கட்டிட்டு வெளியே போனா ஊர்ல இருக்கிற காக்காய் எல்லாம் என் மேல்தான் வந்து உட்காரும்!''

கரும்புள்ளி, செம்புள்ளி குத்திக் கழுதை மேல் ஊர்வலம் விட்டாற் போல இருந்தது பாஸ்கரனுக்கு. புலியாக மாறினான் அவன்.

''என்னடி, சும்மாத்தான் அளந்திட்டே போறே? என்னால் எதுவும் பேச முடியாதுன்னு நெனைப்பா? முந்தாநாள் சூப்பர் மார்க்கெட்டுக்குக் கட்டிட்டுப் போனியே ஒரு புடவை, அது மட்டும் பெரிய டிசைனா? அப்படியே கழு தண்ணியிலே பருத்திக் கொட்டையும், புண்ணாக்கும் போட்டுக் கலக்கின மாதிரி இருந்தது. அதைப் பார்த்ததும் ஊர்ல மேயற ஆடு மாடு எல்லாம் உன் பின்னாடியே ஓடி வந்திடுச்சா என்ன?'' – என்றான் வெற்றிக் களிப்புடன்.

''ஆஹாங்...'' என்று நீட்டி முழக்கிய சந்தியா, ''இப்பத்தானே புரியுது, யாருக்குப் புண்ணாக்கும், பருத்திக் கொட்டையும் புடிக்கும்கற சங்கதி'' – என்றாள்.

''என்ன சொல்றே?'' – என்று எகிறினான் பாஸ்கரன்.

''சும்மா துள்ளாதீங்க. நீங்க என்னைப் பெண் பார்க்க வந்த போது, அப்படியே சோபாவில் உட்கார்ந்து வழிஞ்சீங்களே, அப்போ நான் கட்டியிருந்தது அந்தப் புண்ணாக்குப் புடவையைத்தான். தெரிஞ்சுக்குங்க.''

'நுணலும் தன் வாயால் கெடும்'னு சொல்லி வச்சது தவளைக்கு மட்டும் அல்ல, தனக்கும் சேர்த்துத்தான் என்று நொந்தான் பாஸ்கரன்.

''இதையும் பாருங்க'' என்று பாலிதீன் பையிலிருந்து ஒரு புடவையை எடுத்தாள் சந்தியா.

கிரீம் கலரில் சிவப்பு பார்டர் போட்ட அந்தப் புடவையை வெறித்துப் பார்த்த பாஸ்கரன், ''ஓஹோ, உன் இஷ்டத்துக்குப் புடவைகளை வாங்கிக் குவிச்சிட்டே போவே, இல்லே'' என்றான் கோபத்துடன்.

''கொஞ்சம் இருங்க. இந்தப் புடவையை நான் ஒண்ணும் காசு கொடுத்து வாங்கலே! எதிர் வீட்டுப் புஷ்பாவின் வீட்டுக்காரர் குமார்தான் இதை செலக்ட் பண்ணி வாங்கியிருக்கார்'' என்று சந்தியா சொன்னதும்,

''அவன் யாரடி, உனக்காக செலக்ட் பண்ணி வாங்க!'' என்று ஆத்திரத்துடன் குதிக்க ஆரம்பித்தான் பாஸ்கரன்.

''கடவுளே! கடவுளே!'' என்று தலையிலடித்துக் கொண்டாள் சந்தியா. ''முழுசாக் கேக்காம நீங்க பாட்டுக்குத் தாம் தூம்னு குதிக்காதீங்க. புஷ்பாவுக்காக அவனோட வீட்டுக்காரர் செலக்ட் பண்ணி எடுத்த புடவை இது. டிசைனும், கலரும் எவ்வளவு அழகா இருக்கு. இந்த மாதிரி செலக்ட் பண்ண உங்களுக்குத் தோணலையேன்னு சொல்ல வந்தேன். எல்லா விஷயங்களிலும் பாதிக் கிணறு தாண்டறதே உங்க பழக்கமாப் போச்சு'' என்று பொறிந்து விட்டு விடுவிடு என்று சமையல்கட்டுக்குள் சென்று விட்டாள் சந்தியா.

பெட்டிப் பாம்பாக அடங்கி, கெட்டித் தயிராக உறைந்து போனான் பாஸ்கரன்.

பஸ்ஸில் செல்லும் போது யாராவது காலை மிதித்து விட்டு 'சாரி' என்றால் கூடப் பற்றிக் கொண்டு வந்தது பாஸ்கரனுக்கு.

'சாரியாம் சாரி. என் தன்மானத்தை வாரி விட்ட சாரி' என்று கையில் இருந்த

Mafatlal Fashion Spreads!



Presenting the one-stop shopping spree for you.

TRENDZ
THE *Mafatlal* FASHION STORE

Announcing TRENDZ — the Mafatlal Fashion Store.
A new fashion fabric shopping experience.
With the complete Mafatlal range of high quality fabrics in the latest designs and textures.
Choose from: Suitings & Shirtings.
Worsted Suitings. Ready-to-wear Shirts & Trousers.
Young Sensations Dress Materials and Sarees. Dreamz bed fashions which include bed sheet sets, sheets and pillow cases. Also Corduroys, Rubias, Dhotis — and more!

Mafatlal Fabrics

TRENDZ
THE *Mafatlal* FASHION STORE

MF/363/903

புடைவைப் பொட்டலத்தைக் கோபத்துடன் பார்த்துக் கொண்டான். துணிக் கடைக் காரனை நினைத்துப் பார்க்கும்போதே அவனுடைய துணிவெல்லாம் பின்வாங்க ஆரம்பித்தது.

'நான் செலக்ட் பண்ணின ஒரே பாவத்துக் காகத்தானே இந்தப் புடைவை இத்தனை அல்லோலகல்லோலப்படுகிறது. நாளைக்கே டீ. வி. யில் ஒரு பெண்மணி இதை உடுத்திக் கொண்டு செய்தியை வாசிக்கட்டும். அப்புறம் பார் இந்தப் புடைவைக்கு வரும் மவுசை' என்று முணுமுணுத்துக் கொண் டான்.

ஸ்டாப்பிங் வந்ததும், பஸ்ஸை விட்டு இறங்கியவனுக்கு ஏனோ நேராகத் துணிக் கடைக்குச் செல்ல மனம் வரவில்லை. ஒரு ஓட்டலுக்குள் நுழைந்து காப்பிக்கு ஆர்டர் கொடுத்து விட்டுக் காத்திருந்தான். தனக்கு முன்னால் யாரோ 'ஹலோ' என்று சொல்லி விட்டு உட்காரவும் தலைநிமிர்ந் தான் பாஸ்கரன்.

புன்னகையுடன், எதிர் வீட்டுக் குமார் உட்கார்ந்திருந்தான். ஒப்புக்கு 'ஹலோ' என்றான் பாஸ்கரனும்.

சில விநாடிகள் இருவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

மேஜை மீது பாஸ்கரன் வைத்திருந்த காகிதப் பையைப் பார்த்து, 'புடைவையா?' என்று மெதுவாகக் கேட்ட குமாரின் தொனியில் எதிரொலித்தது யதார்த்தமா, இல்லை எகத்தாளமா என்று புரியவில்லை பாஸ் கருக்கு.

''புடவையேதாண்டா மடையா'' என்று ஆத்திரத்துடன் வந்த வார்த்தைகளைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, 'ம்' என்றான் விறைப்பாக.

'அடியே சந்தியா, இப்படி என்னைச் சந்தி சிரிக்க வச்சிட்டியே' என்று தனக்குள் புலம்பினான்.

காப்பியைக் கொண்டு வந்து வைத்த சர்வர், "சார் உங்களுக்கு?" என்று குமாரைப் பார்த்தான்.

"நாங்க ரெண்டு பேரும் ஒன் பை டு குடிச்சுக்குவோம்" என்று சொல்லி விட்டு பாஸ்கரனின் பதிலைக் கூட எதிர்பார்க்கா மல் டம்ளரில் இருந்து காப்பியை டபராவில் ஊற்றிக் கலக்க ஆரம்பித்தான் குமார்.

'பிச்சைக்காரப் பயல்' என்று தனக்குள் கறுவிக் கொண்டான் பாஸ்கரன். அவன் முகத்தில் பட்டவர்த்தனமான வெறுப்பைப் படித்த குமார்,

காப்பியை உறிஞ்சிக் கொண்டே ''சைக்கலாஜிகலா பார்த்தா நாம ரெண்டு பேரும் ஒருத்தரையொருத்தர் வெறுக்கக் காரணமே இடையாதும்பேன். எப்ப டின்னா...'' என்றபடி தன் மடியிலிருந்த பிளாஸ்டிக் பையிலிருந்து உருவி எடுத்து, ''இதுவும் புடைவைதான்'' என்றான்.

நேற்றிரவு சந்தியாவுக்கும், அவனுக்கும் இடையே சச்சரவைக் கிளப்பிய அந்த காண்ட்ரோவர்ஷியல் புடைவையைக் கண் கொட்டாமல் பார்த்தான் பாஸ்கரன்!

சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி

பதினேழாம் அத்தியாயம்

விடுதலை

வியர்க்க விறுவிறுக்க மூச்சு வாங்கிக்கொண்டு வந்த சத்ருக்னனின் முகத்தை மூவிரண்டு கண்கள் இமையையும் அசைக்காமல் ஆவலுடன் உற்று நோக்கின. ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்கு ஒரு கண நேரங்கூடக் கொடுக்காமல், ''சத்ருக்னா! யாருக்கு என்ன செய்தி கொண்டுவந்தாய்?'' என்று தேவி கேட்டாள்.

''தாயே! இங்குள்ள மூன்று பேருக்கும் செய்தி கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கூறி மூவருக்கும் வணக்கம் செலுத்தினான் சத்ருக்னன். பின்னர், ''தேவி! மகேந்திர பல்லவரின் முதல் செய்தி தங்களுக்குத் தான்! வீர பத்தினி என்னும் பெயருக்கு இதுகாறும் தாங்கள் உரிமை பெற்றது போல் வீரத்தாய் என்னும் பெயருக்கும் உரிமை பெறவேண்டிய காலம் இப்போது வந்து விட்டது என்று தங்களுக்குத் தெரியப்படுத்தச் சொன்னார். எட்டு மாதங்களுக்கு முன்பு அகமும் முகமும் மலர்ந்து பதியைப் போர்க்களத்துக்கு அனுப்பி வைத்தது போல் இன்று தங்களுடைய அருமைப் புதல்வரை அனுப்பி வைக்க வேண்டிய காலம் வந்து விட்டதாகத் தெரிவிக்கச் சொன்னார்!'' என்றான் சத்ருக்னன்.

விவரிக்க முடியாத உணர்ச்சி வெள்ளம் உள்ளத்தில் பொங்க, தோள்கள் பூரித்து விம்ம, தேகமெல்லாம் சிலிர்க்க, மாமல்ல நரசிம்மர் அன்னையின் அருகில் பாய்ந்து சென்று அவளுடைய பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டார்.

''அம்மா! சக்கரவர்த்தியின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள் அல்லவா? அவர் எனக்கு அளித்த விடுதலையை நீங்களும் மனமுவந்து அளிப்பீர்கள் அல்லவா?'' என்று கேட்டார் மாமல்லர்.

''பொறு, குழந்தாய்! செய்தியை முழுதும் கேட்போம்!'' என்றாள் தேவி.

மாமல்லர் உடனே திரும்பி, ''சத்ருக்னா! எனக்கு என்ன செய்தி கொண்டுவந்தாய்?'' என்று கேட்டார்.

''நல்ல செய்திதான்; பிரபு! தங்கள் மனத்திற்கு உகந்த செய்திதான். நன்றிகொன்ற பாதகனான கங்கநாட்டு மன்னன் துர்விநீதன் சளுக்கப் புலிகேசிக்கு முன்னால் தான் காஞ்சியை அடைந்து விட வேண்டுமென்ற துராசையினால் விரைந்து வந்து கொண்டிருக்கிறான். பல்லவ குலத்துக்குக் கங்கர் குலம் பட்டிருக்கும் நன்றிக் கடனையெல்லாம் மறந்துவிட்டு இந்தப் படுதுரோகமான காரியத்தில் அவன் இறங்கியிருக்கிறான். அந்தத் துர்விநீதனுக்குத் தக்க தண்டனையளிக்கும் பொறுப்பைத் தங்களுக்குச் சக்கரவர்த்தி அளித்திருக்கிறார். கழுக்குன்றத்திலுள்ள படையுடன் தாங்கள் புறப்பட்டுச் சென்று, துர்விநீதன் காஞ்சியை அணுகுவதற்கு முன்னால் அவனை முறியடிக்க வேண்டும் என்று சொல்லி அனுப்பியிருக்

கிறார்!''

மாமல்லர் ஆவேசம் வந்தவரைப் போல் சத்ருக்னனிடம் ஓடிச் சென்று அவனைத் தழுவிக் கொண்டு, ''சத்ருக்னா! இவையெல்லாம் உண்மைதானே? நான் கனவு காணவில்லையே? நிஜமாகத்தானே சக்கரவர்த்தி என்னைக் கங்கநாட்டுப் படையுடன் போராடுவதற்குப் போகச் சொல்லியிருக்கிறார்?'' என்று பரபரப்புடன் கேட்டார்.

''ஆம், பிரபு! இதெல்லாம் கனவல்ல; உண்மைதான். இதோ 'விடைவேல் விடுகும்' கொடுத்தனுப்பியிருக்கிறார்!'' என்று சத்ருக்னன் ஓலை ஒன்றை அவரிடம் எடுத்துக் கொடுத்தான்.

பல்லவ குலத்தின் சின்னங்களாகிய விடை (ரிஷபம்)யும் வேலும் பொறித்த அந்த ஓலையை மாமல்லர் படிக்கும்போது அவர் முகத்தில் உற்சாகம் பொங்கிற்று. படித்து முடிக்கும் சமயத்தில் அவருடைய புருவங்கள் சிறிது நெறிந்தன. நிமிர்ந்து பார்த்து, ''சத்ருக்னா! உன்னிடம் ஏதோ வாய்மொழியாகச் செய்தி அனுப்பியிருப்பதாகச் சக்கரவர்த்தி எழுதியிருக்கிறாரே, அது என்ன?'' என்று கேட்டார்.

''ஆம், பிரபு! எத்தனையோ சாம்ராஜ்யக் கவலைகளுக்கிடையே பல்லவ நாட்டின் கலைச் செல்வத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையும் சக்கரவர்த்தியால் மறக்க முடியவில்லை. ஆயனச் சிற்பியாரும் அவர் மகளும் காஞ்சிக்கு வந்துவிட்டார்களா என்று என்னைக் கேட்டார். 'இல்லை' என்று நான் தெரிவித்தேன். தாங்கள் போர்க்களத்துக்குக் கிளம்புவதற்கு முன்னால் நேரில் ஆயனர் வீட்டுக்குச் சென்று அவர்களைக் காஞ்சிக்கு அனுப்பிவிட்டுப் போக வேண்டும் என்று தெரிவிக்கச் சொன்னார்.''

மாமல்லரின் மகிழ்ச்சி பூரணமாயிற்று. யுத்தத்துக்குப் போவதற்கு முன்னால் சிவகாமியைப் பார்த்து விடை பெற்றுக் கொண்டு போக அவர் விரும்பினார். இப்போது தயக்கமின்றி ஆயனர் வீட்டுக்குப் போகச் சௌகரியம் ஏற்பட்டு விட்டது.

சிவகாமியின் விஷயத்தில் தம் மனநிலையை அறிந்துதான் சக்கரவர்த்தி அவ்விதம் செய்தியனுப்பியிருப்பாரோ என்று ஒரு கணம் அவருக்குத் தோன்றியது. ஆனால், அவருக்குத் தம் மனநிலை எப்படித் தெரிந்திருக்க முடியும்? ஆ! தம் அருமைத் தோழர் பரஞ்சோதிதான் சொல்லி அனுப்பியிருக்க வேண்டும். இந்த எண்ணத்தினால் பரஞ்சோதியின் மேல் அவருக்கிருந்த சிநேக உணர்ச்சி பன்மடங்கு பெருக, அருகேயிருந்த அவருடைய கரத்தைப் பற்றித் தம் நன்றியைத் தெரிவிப்பதற்கு அறிகுறியாக அழுத்திப் பிடித்தார்.

பரஞ்சோதியோ, மனக்குழப்பத்துடன் சத்ருக்னனைப் பார்த்து ''ஐயா! எனக்கும் ஏதோ செய்தி இருப்பதாகச் சொன்னீரே அது என்ன?'' என்று கேட்டார்.

''லக்ஷ்மணன் இராமனைப் பின் தொடர்ந்ததுபோல் மாமல்லரைத் தொடர்ந்து உங்களைப் போகும்படி சொன்னார். காஞ்சிக்குச் சக்கரவர்த்தியே சீக்கிரத்தில் வந்து கோட்டைப் பாதுகாப்பைக் கவனித்துக் கொள்வதாகச் சொன்னார்.''

''ஆஹா! என் அருமைத் தோழரும் என்னுடன் வருகிறாரா?'' என்று மாமல்லர் மேலும் பொங்கிய மகிழ்ச்சியுடன் பரஞ்சோதியைத் தழுவிக் கொண்டார்.

பிறகு, அன்னையை நெருங்கி அவருடைய பாதங்களில் நமஸ்கரித்து, ''அம்மா! விடை கொடுங்கள்'' என்றார்.

பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினி கண்களில் அப்போது கண்ணீர் துளித்தது. ''குழந்தாய்! வெற்றிமாலை சூடி க்ஷேமமாய்த் திரும்பி வா!'' என்றார்.

மாமல்லர் எழுந்து நின்றார். ஏதோ சொல்ல எண்ணியவர் சிறிது தயங்கினார்.

''மாமல்லா! இன்னும் ஏதாவது சொல்ல வேணுமா?'' என்று தேவி கேட்டார்.

''ஆம், அம்மா! ஆயனரையும் சிவகாமியையும் பற்றித் தந்தை சொல்லியனுப்பியதைக் கேட்டீர்களல்லவா?''

''கேட்டேன், நரசிம்மா! அதைப்பற்றி என்ன?''

''அவர்களைக் காஞ்சிக்கு அனுப்பிவிட்டு நான் போர்க்களம் போகிறேன், அம்மா.''

''அப்படியே செய், குழந்தாய்!''

''சிவகாமி இங்கே இருக்கும் போது அவளைத் தாங்கள் மருமகளைப்போல் பார்த்துக் கொள்ள வேண்டும்!''

''மருமகளைப் போலவா? முடியவே முடியாது. அந்தத் தாயில்லாப் பெண்ணை என் சொந்த மகளைப் போலவே பார்த்துக் கொள்கிறேன், மாமல்லா!''

இதைக் கேட்ட மாமல்லர் புன்னகையுடன், ''இல்லை, அம்மா! மருமகளைப் போல் பார்த்துக் கொண்டால் போதும்!'' என்றார்.

புவனமகா தேவியின் புருவங்கள் அப்

போது நெறிந்தன. "ஏன் அப்படிச் சொல்கிறாய். குமாரா! மகளைப் போல் பார்த்துக் கொள்கிறேன் என்று நான் சொன்னதை ஏன் மறுக்கிறாய்? ஒரு வேளை...." என்று கூறிவிட்டுத் தேவி பரஞ்சோதியை நோக்கினாள். உடனே, அவளுடைய முகத்தில் மலர்ச்சி காணப்பட்டது." "ஓஹோ! புரிந்தது! ஆயனரிடம் சிற்பம் கற்க வந்த பரஞ்சோதி, ஆயனரின் மிகச் சிறந்த வடிவத்தையே கொள்ளை கொள்ளப் பார்க்கிறானா?" என்றார்.

மாமல்லர், பரஞ்சோதி இருவருடைய முகங்களும் அப்போது பெரிதும் வேதனையைக் காட்டின.

"இருக்கட்டும், அம்மா! தாமதிக்க நேரம் இல்லை. நாங்கள் புறப்பட வேண்டும். விடை கொடுங்கள்" என்றார் மாமல்லர்.

சத்ருக்னன் காஞ்சிக்கு வந்து இரண்டு நாழிகைக்குள்ளே, குமார சக்கரவர்த்தியும், தளபதி பரஞ்சோதியும் காஞ்சிக் கோட்டையின் வடக்கு வாசல் வழியாகப் புறப்பட்டார்கள். திருக்கழுக் குன்றம் சென்று அங்கிருந்த தற்காப்புப் படைகளை மறுநாள் அதிகாலையில் புறப்பட ஆயத்தமாகும்படிக் கட்டளையிட்டார்கள். அன்று மாலையே ஆயனரின் வீட்டுக்குப் போய்ப் பார்த்து விட்டு வந்துவிட வேண்டுமென்றும், மறுநாள் அதிகாலையில் சைனியத்துடன் தாங்களும் கிளம்பிவிட வேண்டுமென்றும் உத்தேசித்து, நரசிம்மரும் பரஞ்சோதியும் புரவிகள் மீதேறி, ஒரு சிறு குதிரைப் படை தங்களைப் பின்தொடர, விரைந்து சென்று ஆயனர் வீட்டை அடைந்தார்கள்.

போகும்போது, சிவகாமியிடம் இப்படி இப்படிப் பேச வேண்டும், இன்னின்ன சொல்லவேண்டும் என்பதாக மாமல்லர் எவ்வளவோ மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டு போனார். ஆனால் ஆயனரின் அரண்ய வீட்டை அடைந்தபோது, அவருடைய ஆகாசக் கோட்டைகள் எல்லாம் சிதறி விழுந்தன. வீட்டின் முன் கதவைப் பெரிய பூட்டுப் போட்டுப் பூட்டியிருந்தது! வீட்டிற்குள்ளேயும் வெளியிலும் பூரண நிசப்தம் குடி கொண்டிருந்தது!

பதினெட்டாம் அத்தியாயம்

பிரயாணம்

கார்த்திகை மாதத்தில் ஒரு நாள் மாலை நேரத்தில் காஞ்சியிலிருந்து சிதம்பரம் போகும் சாலையில் கூண்டு இல்லாத இரட்டை மாட்டு வண்டி ஒன்று போய்க் கொண்டிருந்தது. அதில் சிவகாமியும் அவளுடைய அத்தையும் உட்கார்ந்திருந்தார்கள்.

வண்டிக்குப் பின்னால் சற்றுத் தூரத்தில் ரதி துள்ளி விளையாடிக் கொண்டும் ஆங்காங்கே சாலைக்குப் பக்கங்களிலே முளைத்திருந்த புல்லை மேய்ந்து கொண்டும் வந்தது.

சுகப்பிரம்ம ரிஷி ஒவ்வொரு சமயம் ரதியின் முதுகின்மேல் உட்கார்ந்தும், சில சமயம் சிவகாமியின் தோளின் மேல் உட்கார்ந்தும், சில சமயம் வண்டிக்கு மேலாகப் பறந்தும் ஆனந்தமாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்.

பின்னால் இன்னும் சற்றுத் தூரத்தில் புத்த பிக்ஷுவும் ஆயனச் சிற்பியாரும் பேசிக் கொண்டு நடந்து வந்தார்கள.

அந்த வருஷம் ஐப்பசி மாதத்திலேயே மழை பிடித்துக் கொண்டு பதினைந்து நாட்கள் வரையில் விடாமல் பொழிந்தது. அதன் காரணமாக, ஏரிகள், குளங்கள் எல்லாம் தண்ணீர் நிறைந்து ததும்பிக் கொண்டிருந்தன. சாலை ஓரத்தில் ஓடைகளில் தண்ணீர் அலைகள் மோதிக் கொண்டிருந்தன. ஆறுகள், வாய்க்கால்களில் இரு கரையையும் தொட்டுக் கொண்டு பிரவாகம் ஓடிக் கொண்டிருந்தது.

நன்செய் வயல்களில் இரண்டாம் போகத்து வேளாண்மை அப்போதுதான் ஆரம்பமாகியிருந்தது. புன்செய்க் காடுகளில் கம்பும் கேழ்வரகும் செழித்து வளர்ந்திருந்தன.

சாலையின் இரு புறத்திலும் வளர்ந்திருந்த மரங்களும் ஆங்காங்கே வயல்களுக்கிடையே காணப்பட்ட தென்னந் தோப்பும் வாழைத் தோட்டங்களும் கண்ணைக் குளிர்விக்கும் காட்சியளித்தன.

பெருமழை விட்டுப் பலநாள் ஆகிவிட்டதாயினும், வானத்தில் இப்போதும் மேகத்திரள்கள் காணப்பட்டன. இவை இடையில் தங்குவதற்கு நேரமில்லாத நெடுந்தூரப் பிரயாணிகளைப் போல் ஆகாயத்தில் அதிவேகமாகப் பிரயாணம் செய்தன. சில சமயம் நீர்த்துளிகளை அள்ளித் தெளித்து விட்டுச் சிதறி மறைந்தன.

நீர் நிலைகளின் மீது தவழ்ந்தும், பசுமையான தோப்புக்களில் புகுந்தும், மழைத் துளிகளை அளாவியும் வந்து கொண்டிருந்த குளிர்ந்த வாடைக் காற்று உடம்பின் மீது

பட்டபோது, துணியை இழுத்துப் போர்த்திக் கொள்ளத் தோன்றியது; ஆயினும், அது அபூர்வமான சுகத்தை அளித்தது.

அந்தக் குளிர்ந்த வாடைக் காற்றில் அடிபட்டதனால் பட்சிகளுக்குக் கூடத் தொண்டை கட்டிக் கொண்டது போல் தோன்றியது. சாதாரணமாய், 'கலகல'வென்றும், 'கிளுகிளு' வென்றும் கேட்கும் புள்ளினங்களின் குரல் ஒலியில் இப்போது 'கரகரப்பு' சத்தம் கலந்திருந்தது.

வண்டியில் அத்தைக்கும் மருமகளுக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது:

"இன்றைக்கு மழை பெய்யுமா சிவகாமி?" என்று அத்தை கேட்டாள்.

"மலையா? எங்கே இருக்கிறது?" என்றாள் சிவகாமி.

"ஆமாம்; மழையைக் கண்டால் மயிலுக்குக் கொண்டாட்டந்தான்!" என்றாள் அத்தை.

"மாலையில் வெயில் அடித்தால் கொண்டாட்டத்துக்கு என்ன குறைவு?" என்றாள் சிவகாமி.

"என்ன சொன்னாய்?" என்றாள் அத்தை.

"என்ன கேட்டீர்கள்?" என்றாள் சிவகாமி.

"கொஞ்சம் செவிமந்தமுள்ள அத்தைக்குப் பேசுவதிலே அதிகப் பிரியம். எனவே, அவ்வப்போது சிவகாமியிடம் ஏதாவது கேட்டுக் கொண்டும் சொல்லிக் கொண்டும் வருவாள். கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த சிவகாமி, அத்தையின் பேச்சுக்களை மனத்தில் வாங்கிக் கொள்ளாமலேயே ஏதாவது பொருத்தமில்லாத மறுமொழி சொல்லுவாள். அது காதில் நன்றாய் விழாமல் அத்தை வேறு ஒன்றைக் கூறுவாள். இதே ரீதியில் அவர்களுடைய பிரயாணம் நடந்து கொண்டிருந்தது. காஞ்சியிலிருந்து ஏறக்குறைய ஆறு காத தூரம் அவர்கள் பிரயாணம் செய்திருந்தார்கள்.

மாரிக் காலத்து மாலைப் பொழுதில் வெளி உலகமானது எவ்வளவுக்குக் குளிர்ந்திருந்ததோ அவ்வளவுக்குச் சிவகாமியின் உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது. அதில் எரிமலை நெருப்பைக் கக்கிக் கொண்டிருந்தது. கொழுந்து விட்டெரியும் ஜ்வாலைகளுடனே அக்கினி ஆறு பிரவகித்துக் கொண்டிருந்தது.

மாமல்லரைப் பற்றி நாகநந்தி பிக்ஷு கூறிய விஷயங்கள் அவளுடைய மனத்தில் அத்தகைய பிரளயக் குழப்பத்தை உண்டு பண்ணியிருந்தன.

நம் அன்புக்குரியவர்களைப் பற்றிச் சாதாரணமாக ஏதேனும் கெடுதலான விஷயத்தைக் கேள்விப்பட்டால் நம் உள்ளம் கலபத்தில் நம்புவதில்லை. அப்படியெல்லாம் இராது' என்று மனத்தைத் திருப்தி செய்து கொள்கிறோம். அவ்வாறு சொல்கிறவர்களிடம் சண்டை பிடிக்கவும் ஆயத்தமாயிருக்கிறோம்.

ஆனால், எக்காரணத்தினாலாவது நமக்கு வேண்டியவர்களிடம் குற்றம் இருக்கிறதென்று நம்பும்படி நேர்ந்து விட்டால் உள்ளத்தில் கோபம் கொழுந்து விட்டெரியத் தொடங்குகிறது. வேண்டியவர்கள் மீது மட்டுமல்ல; உலகத்தின் மேலேயே கோபம் கொள்ளுகிறோம்.

இந்த மனித இயற்கை, காதலர்களின் விஷயத்தில் ஒன்றுக்கு நூறு மடங்கு ஆகிறது.

காதலன் எவனும் தன்னுடைய காதலியைச்





சாதாரண மானிடப் பெண்ணாகக் கருதுவதில்லை. தெய்வப் பிறவி என்றே கருதுகிறான். தேவலோகத்தில் அமிர்த பானம் செய்து கொண்டு ஆனந்த அமர வாழ்க்கை நடத்த வேண்டியவள் தன் பேரில் கொண்ட அன்பினாலேயே இந்தப் பூலோகத்திலே வாழ்ந்து வருவதாகக் கருதுகிறான்.

காதலியோ, குழந்தைப் பிராயத்திலிருந்து தன் மனத்தில் தானே சிருஷ்டி செய்து கொண்டிருந்த இலட்சிய புருஷனுக்குரிய சகல உத்தம குணங்களையும் காதலன் மீது ஏற்றி அவனைக் குற்றங் குறையில்லாத தெய்விகப் புருஷனாகவே எண்ணிக் கொள்கிறாள்.

ஆனால், எதாவது ஒரு காரணத்தினால் அவர்களுடைய நம்பிக்கைக்குப் பங்கம் ஏற்படும் போது மகத்தான ஏமாற்றம் உண்டாகி விடுகிறது. மலையின் சிகரத்திலிருந்து திடீரென்று அதல பாதாளத்தில் விழுகிறவர்களைப்போல் ஆகிவிடுகிறார்கள்.

சிவகாமி தன் இருதயத்தில் ஓர் அற்புதமான திருக்கோயிலை அமைத்து, அதிலே மாமல்ல நரசிம்மரைத் தெய்வங்களுக்கெல்லாம் மேலான பரதெய்வமாகப் பிரதிஷ்டை செய்திருந்தாள்.

நாகநந்தி கூறிய நஞ்சு தோய்ந்த வார்த்தைகளினால் அந்தத் திருக்கோயில் ஒரு நொடியில் இடிந்து தகர்ந்து விழுந்து விட்டது! அதிலே பிரதிஷ்டை செய்திருந்த தெய்வச் சிலையும் விழுந்து நொறுங்கிப் பொடிப் பொடியாய்ப் போய்விட்டது.

குமார சக்கரவர்த்தியைப் பற்றி நாகநந்தி கூறிய அவதூறு அவ்வளவு சாமர்த்தியமாகவும் நம்பும்படியாகவும் அமைந்திருந்தது. சிவகாமி அவர் கூறியது அவ்வளவையும் அப்படியே நம்பி விட்டாள். இராஜ்யத்திலே அவ்வளவு பெரிய யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது, மாமல்லர் காஞ்சிக்குள்ளேயே ஒளிந்து கொண்டிருப்பதற்கு வேறு காரணம் என்ன இருக்கமுடியும்?

போர்க்களத்திலே பரஞ்சோதியின் வீர தீரச் செயல்களைப் பற்றிய வரலாறுகள் காற்றிலே மிதந்து ஆயனரும் சிவகாமியும் வசித்த காட்டுக்குள்ளேகூட எட்டியிருந்தன. அதெல்லாம் உண்மை என்பதைப் பரஞ்சோதியை நேரிலே பார்த்த சிவகாமி தெரிந்து கொண்டிருந்தாள். தமிழ் படிக்கவும் சிற்பம் கற்கவும் வந்த பட்டிக்காட்டுப் பிள்ளை இப்போது பெரிய தளபதி ஆகிவிட்டான். அரங்கேற்றத்தன்று அவன் யானை மீது வேல் எறிந்து தங்களைக் காப்பாற்றிய சம்பவமும் சிவகாமியின் உள்ளத்தில் அழியாதபடி பதிந்திருந்தது. பரஞ்சோதியின் வீர வாழ்க்கையோடு மாமல்லர் கோட்டைக்குள்ளே ஒளிந்திருந்ததை ஒப்பிட்டுப் பார்த்து மாமல்லரைப் 'பயங்கொள்ளிப் பல்லவன்' என்று நாடு நகரமெல்லாம் அழைப்பதில் வியப்பில்லை என்று சிவகாமி எண்ணினாள். இதனால், நாகநந்தியின் வார்த்தைகளில் அவளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

ஒரு விஷயத்தில் நம்பிக்கை ஏற்பட்ட பிறகு, அதையொட்டிய இன்னொன்றிலும் நம்பிக்கை பிறப்பது இயல்பேயல்லவா? எனவே, மாமல்லரை 'ஸ்திரீ லோலன்' என்று நாகநந்தி கூறியதிலும் அவளுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. வீரமன்னர்களுக்குப் பிறந்த தூர்த்தர்களான இராஜகுமாரர்களைப்பற்றி அவள் கதைகளிலே கேள்விப் பட்டதுண்டு. மாமல்லர் அவர்களிலே ஒருவர் என்று அவள் கனவிலும் நினைத்ததில்லை. ஆனால், அதுவும் உண்மையாகத்தான் இருக்கவேண்டும் என்று இப்போது தோன்றியது. ஆகா! மாய வார்த்தை பேசி ஏழைப் பெண்ணைக் கெடுப்பதிலே அவர் கைதேர்ந்தவராயிருக்க வேண்டும்! கள்ளங் கபடமறியாத் தன்னிடம் என்னவெல்லாம் சொல்லி, ஏமாற்றினார்? பல்லவ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்திலேயே தன்னை ஏற்றி வைத்து விடுகிறவர் போல் அல்லவா பசப்பினார்! புருஷர்கள்தான் எவ்வளவு நயவஞ்சகர்கள்! அதிலும் இராஜகுலத்தவர் எப்பேர்ப்பட்ட சவிரக்மில்லாத கிராதகர்கள்!

வழிப் பிரயாணத்தின்போது இந்த மாதிரி எண்ணங்கள் சிவகாமியின் உள்ளத்தில் அடிக்கடி தோன்றி நரகவேதனையளித்தன.

சிலசமயம் அவளுக்குத் தன்னுடைய மனோராஜ்யத்தில் ஆசையுடன் நிர்

"எங்க மேனேஜருக்கு எப்பவும் விட்டு ஞாபகம்தான்...',

"எப்படிச் சொல்றீங்க?"

"பக்கத்து ஆபிஸுக்குப் போய் ஒரு கரண்டி இங்க் வாங்கிவரச் சொல்றாரே!"


— உ. ரா. ராஜேந்திரன்.



"வீட்டுப் பாத்திரங்கள் வாங்கணும்னா என் மனைவிக்கு ரொம்பப் பிரியம். அதுக்குப் பயந்தே நான் வெளியூர்ப் பயணமே வெச்சுக்கறதில்லே!"

"அதுவும் சரிதான். போகிற இடமெல்லாம் பாத்திரம் வாங்கணும்னா கட்டுப்படியாகுமா?"

"ஊஹூம். நான் வெளியூர் போய்த் திரும்பி வருவதற்குள் என்னுடைய பாண்ட் ஷர்ட்டையெல்லாம் போட்டுப் பாத்திரம் வாங்கிடுவா!"



மாணித்து வந்த இன்ப வாழ்க்கையாகிய கோட்டை இடிந்து தூளாகிவிட்டபடியால், இனிமேல் தன் வாழ்க்கை என்றென்றைக்கும் சோகமயமாகவே இருக்கும் என்று தோன்றியது.

மாரிக்காலத்தின் முடிவில் வானத்தில் சிதறி ஓடிய மேகங்கள் சில மழைத்துளிகளை உதிர்த்துவிட்டுப் போகும்போது தன்னுடைய கதிக்காக உலகமே கண்ணீர் வடிப்பதாக அவள் எண்ணினாள்.

இந்த வாழ்க்கை மட்டுமல்ல; இதற்கு முன்னர் எத்தனை எத்தனையோ ஜன்ம ஜன்மாந்திரங்களிலும் தன்னுடைய வாழ்க்கை இப்படியே சோகமயமாயிருந்ததாகத் தோன்றியது.

ஆனால், இரவில் எங்கேயாவது தங்கியிருந்து விட்டுக் காலையில் மறுபடியும் பிரயாணம் தொடங்கும் போது ஜகஜ்ஜோதியாகச் சூரியன் உதயமாகி மரக்கிளையில் தங்கியிருக்கும் நீர்த்துளிகளை வைரமணிகளாக ஒளி வீசச் செய்யும் காட்சியைப் பார்த்துவிட்டுச் சிவகாமி சிறிது உற்சாகம் கொள்வாள்.

மாமல்ல நரசிம்மர் பயங்கொள்ளி, தூர்த்தர் என்று ஏற்பட்டதன் பொருட்டுத் தன் வாழ்க்கையை எதற்காகப் பாழாக்கிக் கொள்ளவேண்டும் என்று கருதுவாள். 'உலகம் எவ்வளவோ விஸ்தாரமானது; பல்லவ இராஜ்யத்துக்கு அப்பாலும் உலகம் இருக்கத்தானே செய்கிறது? தன்னிடம் அற்புதமான நாட்டியக் கலையும் இருக்கிறதல்லவா? அந்தக் கலையைப் பார்த்து அநுபவித்து ஆனந்தமடைய நாகநந்தி சொல்வதுபோல், உலகம் காத்திருக்கிறதல்லவா? எதற்காகத் தன் வாழ்க்கை பாழாகி விட்டதாக எண்ணிக் கொள்ள வேண்டும்?....' இவ்விதம் எண்ணிச் சிவகாமி உற்சாகம் அடையப் பார்ப்பாள். தூர தூர தேசங்களிலே, பெரிய பெரிய சபைகளிலே தான் நாட்டியம் ஆடுவதுபோலவும், கணக்கற்ற ஜனங்கள் கண்டு களித்துத் தன்னைப் பாராட்டி உபசரிப்பது போலவும் கற்பனை செய்து கொண்டு களிப்புறுவாள்.

இத்தகைய மனோபாவத்துடனேயே சிவகாமி தன் தந்தையைப் பெரிதும் வற்புறுத்தி நாகநந்தி பிக்ஷுவின் யோசனையை ஒப்புக்கொள்ளச் செய்தாள். அதன் பேரிலேதான் இந்தப் பிரயாணம் அவர்கள் தொடங்கினார்கள்.

ஆனால், என்னதான் மனத்தை வேறு விஷயங்களில் செலுத்திப் பார்த்தாலும், எவ்வளவுதான் பிரயத்தனம் செய்து உற்சாகம் கொள்ளப் பார்த்தாலும், சாத்தியமாயில்லை. அவ்வப்போது குமுறிக் கொண்டு வந்த வேதனை உணர்ச்சியை மாற்ற முடியவில்லை. பொங்கியெழுந்த ஆத்திரத் தீயை அணைக்க முடியவில்லை.

முக்கியமாக, அந்தி மயங்கி நாற்புறமும் இருள் சூழ்ந்து வந்த நேரங்களில் சிவகாமியினுடைய உள்ளத்தில் வேதனையும் துயரமும் பெருகி அவளைச் சோகக் கடலில் மூழ்கச் செய்தன.

அன்று சாயங்காலம் அவ்வாறு சோகத்தில் ஆழ்ந்த உள்ளத்துடன் சிவகாமி கட்டை வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, அவளுடைய நினைவை வேறு பக்கம் திருப்பும்படியான சம்பவம் ஒன்று நேர்ந்தது.

சாலையில் அவர்களுக்கெதிரே ஒரு பெரும்படை வந்து கொண்டிருக்கிறதென்பதற்கு அறிகுறிகள் தென்பட்டன.

சங்கு, கொம்பு, தாரை, தப்பட்டை, பேரிகை, எக்காளம், சமுத்திரகோஷம் முதலிய வாத்தியங்களின் பேரொலியும், அநேக குதிரைகளும் மனிதர்களும் நடந்து வரும் காலடிச் சத்தமும், போர் வீரர்களுடைய பேச்சுச் சத்தமும், போர் முழக்கங்களின் கோலமும் கலந்த பேரிரைச்சல் நிமிஷத்துக்கு நிமிஷம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் சைனியத்தின் முன்னணிப் படை வீரர்கள் அவர்களின் கண்ணுக்குத் தென்படலாயினர்.

(தொடரும்)



வலி

மதுமிதா

ரகுநாதனின் முகத்தில் சின்னச் சின்னதாய் உதைகள் விழுந்தன.

குழந்தையின் கால்கள் இரண்டும் ரோஜாப்பூ. மெல்லக் குழந்தையின் பாதத்தைச் சுரண்டினான். குழந்தை கூச்சத்தில் நெளிந்தது. மெலிதாய்ச் சிரித்தது. அவன் கைகளிலிருந்து வழுக்கி இறங்கியது. மெல்ல நகர்ந்து அவன் முதுகுப் பக்கம் போனது.

தட்... தட்டென அவன் முதுகில் லேசான அடி விழுந்தது.

ரகுநாதனுக்குச் சடாரென்று விழிப்பு வந்தது.

திரும்பினான். அவன் தோளில் ஜானகியின் வலது கை புரண்டது.

மெல்லிய நீல விளக்கொளியில் அவள் முகம் வியர்த்திருந்தது.

எழுந்து உட்கார்ந்தான்.

''ஜானி... என்னம்மா?''

அவள் வேதனையில் புருவம் நெளித்தாள்.

''வலி வந்துட்டு...!''

விருட்டென எழுந்தான். அறையில் வெளிச்சம் விழுந்தது. கடைசியில் அந்தத் தருணம் வந்து விட்டது. ரகுநாதனுக்குள் மெலிதாய்ப் பய முடிச்சு விழுந்தது.

ஜானகி அழுத்தமாய் உதடு கடித்தாள். வேதனையில் முகம் சுளித்தாள்.

''ஜானிம்மா... ஒரு நிமிஷம்... விஸ்வத்தின் அம்மாவை அழைச்சிட்டு வர்றேன்...!''

மாடிப்படி இறங்கிக் கீழே போனான். கீழ்ப் போர்ஷன் கதவைத் தட்டினான். விஸ்வத்தின் அம்மாதான் கதவு திறந்தாள்.

''என்ன ரகு?''

''ஜானகிக்கு வலி எடுத்துடுச்சு!''

நிமிஷத்தில் செயல்பட்டாள். ஜானகியின் கன்னம் தட்டி ஆறுதல் சொன்னாள்.

''இங்கே டாக்ஸி கிடையாது ரகு. ஏதாவது ஒரு ரிக்ஷா அழைச்சுக்கிட்டு வா...!''

''ரிக்ஷாவா...?'' — ரகு யோசித்தான்.

அந்த நேரத்தில் ரிக்ஷாதான் கிடைத்தது.

அதற்குள் ஜானகி தயாராகியிருந்தாள். பெரிய வயர் கூடையில் தேவையான சாமான்கள் எடுத்து வைக்கப்பட்டிருந்தன. விஸ்வத்தின் அம்மா துளி விபூதி எடுத்து ஜானகியின் நெற்றியில் இட்டாள். ஜானகி ரகுவின் தோள் பற்றி ரிக்ஷாவில் ஏறினாள்.

''நிதானமா ஓட்டுப்பா!'' சைக்கிளில் பின்தொடர்ந்தான்.

ஜானகியின் அடி வயிற்றில் ஒரு புயல் சுழன்றது. வேகமாய்க் கேவினாள்.

''கொஞ்சம் வேகமாய்ப் போப்பா...!''

ரிக்ஷா குலுங்கிக் குலுங்கி ஓடியது.

நர்ஸிங் ஹோம் வாசல் கேட் சாத்தியிருந்தது. ரகுநாதன் பரபரப்பாய்ச் சைக்கிள் மணி அடித்தான். தூக்கக் கலக்கத்துடன் காவல்காரர் வந்து கதவைத் திறந்தார்.

ஜானகி ரிக்ஷாவிலிருந்து இறங்கும் போது தள்ளாடினாள். வேகமாய்க் கூச்சல் போட்டாள். அவசரமாய் உள்ளே அழைத்துப் போனார்கள். ரகுநாதன் வராந்தாவில் நிறுத்தப்பட்டான்.

கொஞ்சம் கொஞ்சமாய் ஜானகியின் கூச்சல் அதிகமாகியது.

ரகுநாதன் விரல் பின்னித் தவித்தான்.

இது மகா வேதனை. கஷ்ட நேரத்தில் ஆள் துணையின்றித் தனித்திருப்பது ஹிம்சை. பிரியமானவள் உள்ளே வேதனையில் துவள, இங்கே இவனுக்கும் வலித்தது.

''ஐ லவ் யூ ரகு!'' — ஜானகிதான் முதலில் தயக்கம் உடைத்தாள்.

''உங்க வீட்டுல ஒத்துக்குவாங்களா ஜானி...?'' ரகுநாதன் ஆரம்பத்தில் தயங்கினான்.

''மாட்டாங்க...!''

''அப்புறம்...?''

''உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா...? உண்டு, இல்லை, ஒரே வார்த்தை...''

''ம்...

''என்ன... ம்?''

''ஐ லவ் யூ ஜானி!''

அவள் வீடு எதிர்த்தது. இவன் வீடு அவனை ஒதுக்கியது.

ஆறு மாதம் கழித்து ஒரு புதன்கிழமை ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் மாலை மாற்றிக் கொண்டார்கள்.

உறவுகளின் குறுக்கீடின்றி விச்ராந்தியாய்ப் பொழுதைக் கழித்தார்கள்.

இப்போது ரகுநாதன் யோசித்தான்.

தவறு என் பக்கமும் உண்டு. கொஞ்சம் கொஞ்சமாய் உறவுகளைச் சமாதானப் படுத்தியிருக்க வேண்டும். அப்பாதான் கொஞ்சம் முரடு. அம்மா வெகுளி. இந்த நேரத்தில் அம்மா இருந்தால் கொஞ்சம் தைரியமாக இருக்கும். அம்மாவுக்கு ஐந்து பிரசவம் கண்ட அனுபவமுண்டு.

திடீரென்று வாசலில் கூக்குரல் கிளம்-



பியது. விருட்டென எழுந்து வாசல் பக்கம் போனான்.

டாக்ஸியிலிருந்து அந்தப் பெண்ணைத் தூக்கி வந்தார்கள். அவள் கண்கள் செருகிக் கிடந்தன.

டாக்டரம்மா வேகமாய் வந்தாள். சம்பிரதாயப் பரிசோதனை முடித்து மெல்லிய குரலில் அறிவித்தாள்.

கூட்டம் பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தது. அந்தப் பெண்ணின் கணவன் அந்தப் பெண்ணின் முகம் தொட்டுத் தொட்டு அழுதான்.

சற்று வயதானவள் இவனிடம் விஷயத்தைச் சொன்னாள் — அந்தப் பெண்ணுக்கு இது இரண்டாவது பிரசவம். கிராமத்தில் அவ்வளவு வசதியில்லை. வண்டி பிடித்து வருவதற்குள் எல்லாம் முடிந்து விட்டது.

ரகுநாதன் வெகுவாய் அதிர்ந்தான். வாழ்வில் மிகத்துயரமான நிமிஷம் இது. கண்ணெதிரே ஒரு மரணம். உள்ளே பிரியத்துக்குரியவள் மரணக் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறாள்.

ரகுநாதனின் விரல்கள் நடுங்கத் தொடங்கின.

ஜானகியின் குரல் விட்டுவிட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது.

தாதிப் பெண்ணிடம் விசாரித்தான்.

'ஊசி போட்டிருக்கிறார்கள். இன்னும் கொஞ்ச நேரமாகும். முதல் பிரசவம் ஆதலால் பெண் கொஞ்சம் அலட்டுகிறது.'

— அலட்சியமாய்ச் சொல்லி நகர்ந்தாள்.

இறந்து போன பெண்ணை அதே டாக்ஸியில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்கள்.

இப்போது வராந்தாவில் கொஞ்சம் கூட்டம் சேர்ந்திருந்தது. வயதான பெண்கள் தங்கள் அனுபவத்தில் கண்ட, பிரசவத்தில் செத்துப் போனவர்களைப் பட்டியல் போட ஆரம்பித்தார்கள்.

இவனுக்குள் வலி அதிகரித்தது. இவன் மேலே இவனுக்கே கோபமாய் வந்தது. ச்சே... எல்லாம் என் தப்பு... குனிந்த தலை நிமிராமல் வந்து கொண்டிருந்த பெண்ணைக் கொஞ்சம் கொஞ்சமாய் மடக்கி... இப்படித் தனியாய்த் தாயின் அரவணைப்பும், தந்தையின் பரிவுமின்றிக் கதற வைத்து விட்டேன்...

முட்டாள்தனமாய் யோசிப்பது போலவும் பட்டது.

ஜானகியை வீல் சேரில் உட்கார வைத்துத் தள்ளிக் கொண்டு போனார்கள்.

இவன் அவர்கள் பின்னே போனான்.

ஜானகி அதிர்ந்து பேச மாட்டாள். ஆனால் இப்போது அவளுடைய வேகமான குரல் இவன் வயிற்றுக்குள் அவஸ்தை பண்ணியது. சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்து கண் மூடினான்.

'பெண்ணே... உன் வேதனையை என்னிடம் கொடு. இதில் எனக்கும் பங்குண்டு... இது நமக்கு வைக்கப்பட்டுள்ள பரீட்சை. இருவருமாய்த் தாண்டி ஜயிப்போம். பின்னொரு சந்தோஷ நாளில் என் வலி பற்றிப் பேசிச் சிரிக்க வேண்டும்... அன்று நான் 'ஆணுக்கும் பிரசவ வலியுண்டு' என்ற உண்மையை உன்னிடம் சொல்லிச் சிரிப்பேன்.

மெல்ல மெல்ல நிமிடங்கள் நகர்ந்தன. ஜானகியின் குரல் தேய்ந்திருந்தது.

தோளில் விரல்பட, கண் விழித்தான். விஸ்வத்தின் அம்மா சிரிப்புடன் சொன்னாள்:

''பெண் பிறந்திருக்கு!''

ரகுநாதன் மனசுக்குள் நடனமாடினான்.

விஸ்வத்தின் அம்மாவின் விரல் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

அவனை உள்ளே அழைத்துப் போனாள்.

முதலில் குழந்தையின் பாதங்களைத் தான் ரகுநாதன் பார்த்தான். இரண்டும் ரோஜாப்பூக்கள்!

ஆகாசத் தாமரை

12

பிரிகேடியர் சாவ்லா சந்தியாவைப் புன்னகையுடன் வரவேற்றார்.

''வாம்மா.. வா...''

''உங்களுக்கு எத்தனை - வயதாகிறது, அங்கிள்?'' என்றாள் சந்தியா.

''அறுபத்தி மூன்று.''

''உங்களைப் பார்த்தால் நாற்பதுக்கு மேல் சொல்ல மாட்டார்கள்? இதன் ரகசியம் என்ன?''

''ரகஸ்யம் இதோ'' என்று சொல்லிக் கொண்டே வந்தாள் ப்ரீதம். சாவ்லாவின் மனைவி. தலையில் ஒரு கறுப்பு முடி கூடக் கிடையாது.

''அவருடைய கவலையெல்லாம் என் மீது சுமத்தி விட்டு, அவர் நிம்மதியாக இருக்கிறார்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் ப்ரீதம்.

''அது இல்லை விஷயம். நான் எதற்கும் கவலைப்படுவதில்லை. ஆனால் உன் ஆன்ட்டி எனக்கும் சேர்த்துக் கவலைப்படுகிறாள்...''

சந்தியா சாவ்லாவின் அருகில் சோபாவில் உட்கார்ந்தாள். சொன்னாள்.

''அந்த இடத்தைப் பார்த்தேன். ஒரு சின்ன இலட்சிய சமுதாயக் குடியிருப்பு உருவாக்குவதற்கு ஏற்ற இடம். சுற்று வட்டாரங்களையெல்லாம் நிலத் தரகர்கள் வாங்கிப் போட்டு விட்டதாகச் சொன்னார்கள். இதற்கு அரசாங்கமும் உடந்தை. உங்கள் நிலப் பகுதிதான் தனித்துத் தீவாகத் தெரிகிறது...''

''காரணம் தெரியுமா?''

''தெரியும். அப்பாதான் சொன்னார்.

''தரகர்கள் கோடிக்கணக்கில் தருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் எனக்கு எதற்காகப் பணம்? என் அருமை நண்பர் மூர்த்தியின் மகள் கேட்கும் போது என்னால் எப்படிக் கொடுக்காமலிருக்க முடியும்?''

''தானமாக வேண்டாம். சமுதாயப் பணிக்கு என்பதால் குறைந்த விலைக்கு...''

''சமுதாயப் பணிக்கு என்பதால்தான் சொல்லுகிறேன், என்னுடைய அன்பளிப்பு. என் அப்பா அம்மா பெயரை — 'ரமேஷ் — பூர்ணிமா தேவி குடியிருப்பு' என்ற பெயரை வைத்து விடு. என்றைக்குப் பத்திரம் எழுத வேண்டும்?''

''இரண்டு லட்ச ரூபாய் வசூல் செய்திருக்கிறோம். அந்தப் பணத்தைக் கொடுத்து விடுகிறோம். உங்கள் பெற்றோர் பெயர்களை வைப்பதில் எனக்கு ஆட்சேபணை கிடையாது.''

''சொல்வதைக் கேள். பணமே தேவையில்லை. இந்த இரண்டு லட்ச ரூபாயை வேறு எதற்காகவாவது மூலதனமாகப் பயன்படுத்திக் கொள். உங்கள் திட்டம் என்ன?''

சந்தியா, தான் எழுதி வந்திருந்த தாள்களை அவரிடம் கொடுத்தாள். வறுமையில் வாடும் பாரம்பரியக் கைவினைக் கலைஞர்களை ஒன்று திரட்டி அங்கு குடியேறச் செய்து, பலவிதமான கைவினைப் பொருள்களைத் தயாரித்தல், அதைப் பயிற்றுவிப்பதற்கான பள்ளிக்கூடம், பொதுப் பள்ளிக்கூடம், மருத்துவமனை, கலைக் கூடம், விளையாட்டு அரங்கு — இப்படியொரு திட்டம்.

''பணத்துக்கு எங்கே போவீர்கள், திட்டம் பலமாகத்தானிருக்கிறது'' என்றார் சாவ்லா.

'''செலவைக் கண்டுபிடி, பணம் தன்னால் வரும்' என்பதுதான் எங்களுடைய பொருளாதாரக் கொள்கை,'' என்றாள் சந்தியா சிரித்துக் கொண்டே.

''திட்டத்தட்ட ஐம்பது லட்சம் தேவைப்படும் போல் தோன்றுகிறது.''

''ஐம்பது லட்சம் எதற்கு? முதலில் பத்து லட்சம் வேண்டும்.''

''பத்து லட்சத்திலா, எப்படி முடியும்?''

''லேபர் கூலி கிடையாது. எல்லாமே நாங்கள்தான் செய்யப் போகிறோம். கைவினைப் பொருள்கள் செய்யத் தொடங்கி, வெளிநாட்டு ஏற்றுமதிக்கு ஒரு 'லைசென்ஸ்' வாங்கி விட்டால், அல்லது 'லைசென்ஸ்' உள்ளவர்கள் மூலம் ஏற்றுமதி செய்தால், அதன் மூலம் கிடைக்கும் பணத்தை வைத்துக் கொண்டு சமாளித்து விடலாம். வெளி உலகப் பரிவர்த்தனைக்கு மட்டுந்தான் எங்களுக்குப் பணம் தேவை. எங்களுக்குள் நடைபெறப் போகிற செலாவணி, எங்களுடைய பரஸ்பர ஒத்துழைப்புதான்.''

''இது சாத்தியமா?''

''முயற்சி செய்வதில் தவறில்லையே?''

''சரி... எட்டு லட்சம் தேடுங்கள் போதும். என் உதவி இரண்டு லட்சம். நானும் ஆன்ட்டியும் வந்து தங்கி விடுகிறோம். உங்கள் குடியிருப்புக்குப் பாதுகாப்பு வேண்டாமா? பிரிகேடியர் சாவ்லா...'' என்று சொல்லி விட்டு அவர் உரக்கச் சிரித்தார்.

''ஆன்ட்டிக்கு என்ன வேலை?'' என்

இந்திரா பார்த்தசாரதி

றாள் ப்ரீதம்.

''ஆன்ட்டி சமையல் வகுப்பு நடத்தலாம். அவளுடைய கோஃப்தாவுக்கும் கபாபுக்கும் நல்ல கிராக்கி இருக்கும்'' என்றார் சாவ்லா.

''அங்கு வந்தாலும் சமையற்காரி தானா?'' என்றாள் ப்ரீதம்.

''ஆன்ட்டி, எங்கள் குடியிருப்பில் எல்லா வேலைக்கும் சமமான அந்தஸ்துதான்...'' என்றாள் சந்தியா.

''உங்கள் அப்பா வருவாரா?''

''வர முடியாது.''

''ஏன்?''

''அங்கே பூரண மதுவிலக்கு.''

''புவர் மூர்த்தி! இது நியாயமில்லை'' என்றார் சாவ்லா.

''குடிப்பதை நிறுத்தட்டும்.. சரி... இதோ பத்திரம் தயாரித்துக் கொண்டு வந்திருக்கிறேன். உங்கள் வக்கீலையும் கலந்தாலோசித்துச் சொல்லுங்கள்.

''எனக்கு வக்கீலே கிடையாது. எங்கே கையெழுத்திட வேண்டும் சொல், போடுகிறேன்,'' என்றார் சாவ்லா.

சந்தியா அவரிடம் பத்திரங்களைக் கொடுத்தாள்.

''படித்துப் பாருங்கள், அங்கிள்.''

சாவ்லா அவளைத் திருப்தி செய்வதற்காகப் படிப்பது போல் பார்வை பார்த்தார்.

''உங்களுக்கு யார் 'ஆர்க்கிடெக்ட்?''' என்று கேட்டார் சாவ்லா.

''ஆர்க்கிடெக்ட்'டிடம் போகவில்லை. நாங்களேதான் தயாரித்தோம்.''

''ஒப்புதல் வாங்கி விட்டீர்களா?''

''இல்லை...''

அவர் கையெழுத்திட்டு விட்டுப் பத்திரங்களை அவளிடம் கொடுத்தார்.

''இவற்றைப் பதிவு செய்யும் போது பிரச்னை வரலாம். நீ தயாராக இருக்க வேண்டும்'' என்றார் சாவ்லா.

''என்ன பிரச்னை?''

''நகர்கள், அரசாங்கம் ஆகியவருடைய கூட்டு ஆட்சி முறை இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. நீ எந்தப் பிரச்னையையும் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும்.''

''நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை'' என்று சிரித்துக் கொண்டே கூறினாள் சந்தியா.

அப்பொழுது உள்ளே டெலிஃபோன் ஒலித்தது. அவர்கள் வராந்தாவில் உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

சாவ்லா எழுந்து உள்ளே போனார்.

''சந்தியா... நீ இப்படிச் சமுதாயப் பணி, அது இது என்றிருக்கிறாயே, கல்யாணத்தைப் பற்றி யோசிக்கவில்லையா?'' என்று கேட்டாள் சாவ்லாவின் மனைவி.

''நீங்கள் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர் என்று நினைத்தேன். நீங்களும் எல்லாரும் கேட்கும் கேள்வியையே கேட்கின்றீர்களே, ஆன்ட்டி?'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் சந்தியா.

''நானும் உன் வயதில் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் அப்படி நினைத்துக்





"நாட்டுல, எதெதுக்குத்தான் விழா எடுக்கிறதுன்னு ஒரு விவஸ்தையே இல்லாமல் போச்சு."

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"அடுத்த கட்சியோட ஆதரவை நம்பி வெற்றிகரமா 100 நாள் ஆட்சி நடத்திட்டாங்களாம்; அதுக்குப் போய் விழா எடுக்கிறாங்களே!"

— சீர்காழி வி. ரேவதி.

கொள்வது ஒரு மானஸீக சந்தோஷத்தைத் தருகின்றதே தவிர, உலகில் எல்லாரும் அடிப்படையில் ஒன்றுதான். சாதாரண சராசரி மனிதர்கள்தான் என்ற தவிர்க்க முடியாத, கசப்பான உண்மையை ஏதாவதொரு நாள் சந்தித்துத்தான் ஆக வேண்டும்," என்றாள் சாவ்லாவின் மனைவி.

"நான் நீங்கள் நினைப்பது போல், என்னை மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவள் என்று நினைத்துக் கொண்டதேயில்லை, ஆன்ட்டி. நான் சாதாரணமானவள், சாதாரணமானவர்களுடன் வேலை செய்வதைத்தான் உயர்வாக நினைக்கிறேன். கல்யாணம் இதற்கு ஒரு தடையாக இருக்கலாமல்லவா?"

"உன் மனத்துக்கிசைந்தவனை, உன் பணிகளுக்குத் தடையாக இல்லாதவனைத் தேடிக் கண்டுபிடி. அழகான, கெட்டிக்காரப் பெண் தனியாக இருப்பது மனித இயற்கைக்கே விரோதமான காரியம்."

"**பா**ஸ்டர்ட்ஸ்!" என்று கோபத்துடன் சொல்லிக் கொண்டே சாவ்லா வந்தார். அவர் நெடிய சரீரம் லேசாக ஆடியது.

சந்தியாவைப் பார்த்ததும், "ஐ ஆம் ஸாரி" என்றார்.

"ஏன் என்ன கோபம்?" என்று கேட்டாள் சாவ்லாவின் மனைவி.

"நான் பயப்பட்ட மாதிரியே ஆகியிருக்கிறது.

'தரகர்கள் — அரசாங்கம் ஆகியவருடைய கூட்டு ஆட்சி முறை' என்றேனே; உண்மையாகி விட்டது. அங்கு ஒரு பெரிய இரசாயனத் தொழிற்சாலை வரப் போகிறது..." என்றார் சாவ்லா.

"எங்கு?" என்றாள் சந்தியா.

"நீ இலட்சியச் சமுதாய நல அமைப்பு உருவாக்கப் போவதாகத் திட்டமிட்டிருக்கிறாயே அங்கு... சுற்றுப்புறச் சூழ்நிலையை நாசமாக்கப் போகிறார்கள். கழிவு நீரெல்லாம் என்ன செய்யப் போகிறார்கள்? புகை சுவாசப் பைக்குத் தீ வைக்கப் போகிறது..." என்று மிகுந்த ஆத்திரத்துடன் கத்தினார் சாவ்லா.

"தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போவது யாரென்று தெரியுமா?"

"அரசாங்க முதலீடும் இருக்கிறதாம்... பொதுப் பணிக்காக என் நிலத்தை விற்றுத்தான் ஆக வேண்டுமென்று வற்புறுத்தப் போகிறார்களாம். எல்லாரையும் சுட்டுத் தள்ளப் போகிறேன்."

"கோபப்படாதீர்கள். நான் விசாரிக்கிறேன்" என்றாள் சந்தியா.

"யாரைப் போய் விசாரிக்கப் போகிறாய்?"

"எனக்குத் தெரிந்த தொழிலதிபர் ஒருவர் இருக்கிறார். அவரை விசாரித்தால் யார் யார் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளலாம்."

"அவரே சம்பந்தப்பட்டிருந்தால்?"

"மிகவும் நல்லதாய்ப் போயிற்று. நான் சொன்னால் அவர் கேட்பாரென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது."

"லாபம் என்று வரும் போது, எந்த முதலாளியும் நட்பு, உறவு என்று எதனையும் பார்க்க மாட்டான். பட்... என்னைப் பொருத்தவரையில், நான் சுப்ரீம் கோர்ட் வரைப் போகத் தயார். என் நிலத்தை என்னிடமிருந்து யாரும் பறிக்க முடியாது."

"அது இப்பொழுது உங்கள் நிலமல்ல. நம் நிலம். நானும் போராடத் தயார்" என்றாள் சந்தியா.

சந்தியா சாவ்லாவிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போன போது, கதவைத் திறந்த சூசை குரலில் பதற்றம் தோன்றச் சொன்னான்.

"ஐயாவுக்கு உடம்பு சரியில்லே."

சந்தியா மூர்த்தியின் அறையை நோக்கி விரைந்தாள்.

அவர் கட்டிலில் படுத்திருந்தார்.

"என்னப்பா?"

"ஒண்ணுமில்லே. திடீர்னு இருட்டிண்டு வர மாதிரி இருந்தது. ஸம்டைம்ஸ் இட் ஹாப்பன்ஸ்... பயப்படறத்துக்கு ஒண்ணுமில்லே."

"குடிச்சீங்களா?"

"பகல்லியா...? ஆர் யு க்ரேஸி?"

"பின்னே ஏன் மயக்கம் வந்தது?"

"வயசானா அப்படித்தானிருக்கும். அது கிடக்கட்டும்... சாவ்லாவைப் பாக்கப் போனியே, என்ன ஆச்சு?"

"கீழே விழுந்துட்டீங்களா?"

"நதிங் மை டியர் கேர்ல்... சாவ்லா என்ன சொன்னான்?"

சந்தியா அவர் நாடியைப் பிடித்துப் பார்த்தாள்.

"'பி. பி'யா இருக்கலாமா?" என்றாள் சந்தியா.

"ரெண்டு நாள் முன்னால்தான் 'பி. பி.'யை 'டெஸ்ட்' பண்ணேன். சின்னவாள்ளாம் பொறாமைப்படும்படியா இருக்கு என்



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-இல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ.300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்பவேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

****** இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு *****

'பி. பி.'ன்னான் டாக்டர் சன்யால் — 80 — 140. போறுமா?''

சந்தியா கட்டிலில் உட்கார்ந்தாள்.

''என்ன ஆச்சு, சாவ்லா என்ன சொல்றான்? இடத்தைத் தரேன்னானா?''

''பணம் வேண்டாங்கிறார். 'ஃப்ரீ'யா தரேன்னு சொல்றார்.''

'''நைஸ் ஃபெல்லோ..' அவன் எப்பொழுதுமே இப்படித்தான். குழந்தை, குட்டி கிடையாது. இருந்தாலும் மனசு வேணுமே...!''

''ஆனா.....''

''சொல்லு...''

சந்தியா பிரச்னையைச் சொன்னாள்.

''நீ மஞ்சுளாவைப் பார்க்கப் போறயா?''

''ஆமாம்.''

''நீ அந்த விட்டுக்குப் போக வேணாம்... ஐ டோன்ட் லைக் இட்'...''

''பார்க்கிறதிலே என்ன தப்பு?''

''அந்த அயோக்கியன் துருவ் இருக்கிற விட்டுக்குப் போய்த்தான் ஆகணுமா?''

''யார் அயோக்கியன்? அவர் என்ன பண்ணார்?''

''அந்தப் பொண்ணு, பாவம், அவனோட எப்படிக் குடித்தனம் பண்ணப் போறது? அவன் ஒரு பைத்தியம்...''

''நீங்க ஏன் அவரை இப்படி அடியோடு வெறுக்கறீங்கன்னு எனக்குப் புரியலே...''

''ஏன் தெரியுமா? என் பொண்ணை வேண்டாம்னு சொல்ல அவனுக்கு என்ன தைரியம் இருக்கணும்?''

''நோ. யு ஆர் ராங். அவர் வேண்டாம்னு சொல்லவேயில்லே. நான் விரும்பியிருந்தா அவரைக் கல்யாணம் பண்ணிண்டிருக்கலாம். ஆனா... எனக்குப் பரிபூரணமான இஷ்டமில்லேன்னு எனக்கே பட்டது... நான் கல்யாணம் பண்ணிக்கவே விரும்பலே...''

''டோன்ட் பி ஸில்லி.''

''கல்யாணம் பண்ணிண்டா நான் செய்ய விரும்பறதையெல்லாம் செய்ய முடியாது...''

''எனக்குப் பேரன் பேத்தியோட கொஞ்சணும்னு ஆசை இருக்காதா?''

''இந்த 'கம்யூனிட்டி சென்டர்' உருவாகட்டும். உங்களுக்கு நெறையப் பேரன் பேத்தி கிடைப்பா. கொஞ்சலாம். உங்களுக்குக் குடிக்கிறதுக்குக் கூட நேரமிருக்காது.''

''ஏன் இப்படிப் பிடிவாதமா இருக்கே?''

''நான் என்ன செய்யணும்னு நினைக்கிறேனோ அதைச் செய்யறேன். இதை ஏன் 'பிடிவாதம்'னு சொல்றீங்க? 'இலட்சியம்'னு சொல்லக் கூடாதா?''

''இலட்சியமாவது, புண்ணாக்காவது! துருவ் என்ன பண்ணான், எனக்கு ஆகாசத் தாமரை வேணும்னு மேலே பறந்தான். இப்பொ... ஒரு சமையற்காரப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிண்டிருக்கான்'' என்றார் மூர்த்தி.

'''சமையற்காரப் பொண்ணா? ஏன் இப்படி 'க்ரூடா' பேசறீங்க?''

''தென் வாட்? ஒரு பட்சணம் பண்றவரோட பொண்ணு... என்ன வித்தியாசம்?''

''நீங்க இப்படிப் பேசறது நன்னாயில்லே... ரொம்ப அழகான, 'இன்னொசென்ட் கேர்ல்'. துருவ் இந்தப் பொண்ணை அனுதாபத்துக்காகப் பண்ணிண்டிருந்தார்னா, இதுதான் அவர் அந்தப் பொண்ணுக்குச் செய்யக்கூடிய பெரிய துரோகம்... பட்... எனக்கு ஒண்ணுமே புரியலே... திடீர்னு... ஏன் இப்படி... ஒருவேளை என் பேரிலிருந்த கோபத்திலே... அப்படியிருந்தாலும், இட் ஈஸ் டோடலி ராங்...''

அந்தப் பொண்ணுக்கு அதிர்ஷ்டந்தான். பட்சணக்காரருடைய பொண்ணுக்குத் திடீர்னு யோகம்...''

''அப்பா... ப்ளீஸ்... என்னைத் துருவ் கல்யாணம் பண்ணிக்கலேன்னு உங்களுக்குத்தான் கோபம் போலிருக்கு...''

''எனக்கா...? உனக்கென்ன பைத்தியம் பிடிச்சுடுத்தா? ஐ ஆம் ஹாப்பி, நீ ஒரு பைத்தியத்தைக் கல்யாணம் பண்ணிக்கலியேன்னு...''

''நான் சாயந்திரம் துருவ் விட்டுக்குப் போறேன். மஞ்சுளா 'ஆன்ட்டி'யோட பேசியாகணும். அவருக்கு நிச்சயமா தெரிஞ்சிருக்கும், இந்த புதுசா வரப் போற 'இன்டஸ்ட்ரி'யோட யார் யார் சம்பந்தப்பட்டிருக்கான்னு... சரி... நீங்க 'ரெஸ்ட்' எடுங்கோ... 'நோ ட்ரிங்ஸ்' ஒரு வாரம்'' என்றாள் சந்தியா.

(தொடரும்)

காந்திஜியின் கண்டிப்பு!



அரசியல் கைதியாகக் காந்தியடிகள் எரவாடாச் சிறையில் அடைக்கப்பட்ட சமயம் அவருக்கு 150 ரூபாய் வரை செலவு செய்ய அரசு உத்தரவிட்டது. அதன்படி அதிகாரிகள் மேசை, நாற்காலி, மற்றும் பல வசதிகளைச் செய்து கொடுத்தனர்.

''எனக்காகச் செய்யப்படும் இந்த வசதிகளுக்காக மக்களின் வரிப் பணம்தானே செலவாகிறது? இதை நான் விரும்பவில்லை. சாதாரணக் கைதியைப் போலவே என்னையும் நடத்தி, 35 ரூபாய் செலவழிக்கலாம்,'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் காந்திஜி.

— தக்கோலம் அ. முஸ்தபா.

சுத்தம் சுகம் அப்புசாமி!

கிர்ச் கிர்ச் என்ற சப்தம். ராத்திரி மணி பன்னிரண்டு. கவர்க் கோழிகள் அல்ல. அப்புசாமி மும்முரமாக அன்றைய கணக்கை எழுதிக் கொண்டிருந்தார்.

மாவிலைச் சருகுகள்: இருபத்தெட்டரை.

பால் கவர்கள்: மூன்று

கசங்கிய பொட்டலக் காகிதம்: ஒன்பது

சிகரெட் துண்டுகள்: ஆறு.

கார் கிளீன் பண்ணின துணிக் கந்தல்: இரண்டரை அடி. லாட்டரி சீட்டுக் கிழிசல்கள்: ஐம்பத்தேழு.

கதவு லேசாகத் திறந்தது. சீதாப்பாட்டி மிகுந்த அக்கறையுடன் (கணவன் மீது 1%. கரெண்ட் பில் மீது 99%) தலையை நீட்டி. ''மை காட்! இட் இஸ் ட்வல்வ்! பாஸிங் த மிட் நைட் ஆவில்! இன்னுமா நீங்கள் தூங்கவில்லை? — உடம்பு எதற்காகும்? ''சீக்கிரம் படுத்துக் கொள்ளுங்கள். காலையில் ஆறு மணிக்கெல்லாம் நீல்கிரிஸில் கல்யாணிக் குட்டி வந்து விடுவாள். நீங்கள் அப்போது தூங்கிக் கொண்டிருந்தால் இட் வோண்ட் லுக் நைஸ்,'' என்ற சீதாப்பாட்டி. ஆட்டக்காரர் அலற அலற அவுட் கொடுக்கும் அம்பயர் மாதிரி விளக்கைப் படக்கென்று அணைத்து விட்டுச் சென்றாள்.

மனைவி அந்தண்டை சென்றதும் அப்புசாமி இன்னொரு படக் உபயோகித்து விளக்கை எரிய வைத்துக் கொண்டு கணக்கை ஒருவழியாக எழுதி முடித்தார். ஜன்னலைத் திறந்து தெருவைப் பார்த்தார் ஒரு தரம் — புதிய குப்பை ஏதாவது தென்படுகிறதா என்று.

ஒன்றுமில்லை என்று தெரிந்தது. 'சுத்தம் சுகம் சுந்தரம்!' என்று மூன்று தரம் உச்சரித்து விட்டுக் கண்களை மூடினார்.

அப்புசாமி குப்பைக் கணக்கு எழுத நேர்ந்தது எப்படி?

சில மாதங்களுக்கு முன் பா. மு. கழகத்தில் சில துறுதுறுப்பான புதுக் கிழவிகள், கழக நடவடிக்கைகளை விஸ்தரிக்க வேண்டும் என்ற கருத்தைச் சீதாப்பாட்டியின் முன் வைத்தனர்.

அவர்களுக்கு ஏதாவது வேலை தராவிட்டால் கழகத்தில் உட்கட்சிப் பூசல் ஏற்படக்கூடும் என்று எண்ணிய சீதாப்பாட்டி 'சுத்தம் சுகம் சுந்தரம்' என்ற புதுப் பிரிவைக் கழகத்தில் ஏற்படுத்தினாள்.

சம்பந்தப்பட்ட தொண்டுக் கிழவிகள் — அதாவது தொண்டு மனப்பான்மையுள்ள கிழவிகள் — ஒவ்வொரு தெருவுக்கும் சென்று, அந்தத் தெருவிலுள்ளவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 'சுத்தம் சுகம் சுந்தரம்' என்ற கமிட்டியை அமைப்பார்கள். சு. சு. சு. வுக்கு ஒரு பிரசிடெண்ட், ஒரு வைஸ் பிரசிடெண்ட், ஒரு காரியதரிசி, ஒரு காஷியர் உண்டு.

தெருவாசிகள் அத்தனை பேரும் சு. சு. சு. உறுப்பினர்கள்.

சீதாப்பாட்டி குடியிருந்த தெருவிலும் ஒரு சு. சு. சு. கமிட்டி துவங்கியது. தெருவிலிருந்த பிரபல ஜவுளி வியாபாரி செட்டி முத்துவின் பங்களாவின் பச்சைப் பசேல் புல் தரையில் குழுமிய அந்தக் கூட்டத்தில் அப்புசாமியும் பங்கேற்றார்.

ஒரு பணக்காரக் கிழவி தனது பிரச்னையைக் கமிட்டியின் முன் சமர்ப்பித்தாள். ''ரோடிலே காற்றடித்தால் போதும். ஏதாவது காகிதம் எங்கள் பங்களா கேட்டுக்குள் பறந்து வந்து விடுகிறது!'' என்றாள். தன் பிரச்னையை அந்த அம்மாள், நியாயமாக, அடக்கமாகத்தான் சொன்னாள்.

ஆனால் கால் மேல் கால் போட்டு உட்



பாக்கியம் ராமசாமி

கார்ந்திருந்தவிதமும், அவளது சாயம் பூசிய கால் கட்டை விரல் நகமும் பயமுறுத்திய விதம் அப்புசாமிக்கு எரிச்சலூட்டியது.

''காற்றடித்தால் காகிதம் பறந்து வராமல் ஏரோப்ளேனா பறந்து வரும் உங்க பங்களா வாசலுக்கு?'' என்று உரத்த குரலில் எதிர்க் கேள்வி கேட்டு மேற்படி கிழவியையும் கமிட்டியையும் கலகலத்துப் போக வைத்து விட்டார். ஒவ்வொரு யோசனையின் போதும் அதிருப்தி அரசியல்வாதி போல மேஜையைத் தட்டுவதும், விசில் அடிப்பதுமாக தூள் கிளப்பிக் கொண்டிருந்தார்.

அப்புசாமியின் புரட்சிக் குரல் அடிக்கடி கலாட்டா செய்யவும், கமிட்டிக் கிழவிகள் அரசியல் தந்திரத்தைப் பிரயோகித்து அப்புசாமியையே அந்தத் தெருவின் சு.சு.சு. கமிட்டிக்குத் தலைவராக்கி ஏராளமான பொறுப்பையும் உடனடியாக ஒப்படைத்து விட்டனர்!

சுத்தம் சுகம் சுந்தரம் திட்டத்தின் முக்கிய அம்சம்:

ஒவ்வொரு வீட்டிலும் குப்பைகளைத் தினமும் ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு வைக்க வேண்டும். சு. சு. சு. கமிட்டியின் ஸ்பெஷல் சைக்கிள் ரிக்ஷா (மோட்டாரில் இயங்குவது) காலை, பகல், மாலை என்று மூன்று வேளைகளிலும் வந்து ஒரொரு வீட்டு வாசலிலும் நின்று பாம் பாம் என்றோ . பீங் பீங் என்றோ கிணிங் கிணிங் என்றோ ஒரு வகை ஹார்ன் ஒலி



எழுப்பும். உடனே வீட்டுக்காரர், தன் வீட்டு பிளாஸ்டிக் பையை வண்டியில் போட்டு விட வேண்டும் — கையோடு. புதிய பைகள் ஒரொரு வீட்டுக்கும் மலிவு விலையில் கமிட்டி சப்ளை செய்யும். மாதா மாதம் இந்தச் செலவுகளுக்காக ஒரொரு வீடும் இருபது ரூபாய் தர வேண்டும்.

கொதித்து வரும் பாலில் தண்ணீர் தெளித்தாற்போல் அப்புசாமி தனக்குத் தலைமை பதவி கிடைத்ததும் ஸ்தலத்திலேயே நல்ல பிள்ளையாகி விட்டார்.

''ஒரு குப்பை விழுகிறது என்றால், அது ஏன் விழுகிறது, எப்படி விழுகிறது, யாரால் விழுகிறது என்பதைக் கண்டுபிடித்துக் களைந்தாலொழிய, குப்பைகளுக்கு நீங்கள் குட் பை வைக்க முடியாது!'' என்று அவர் சொன்னதும், கமிட்டி செட்டப் செய்ய வந்த கிழவிக் கூட்டம் பிரமித்து விட்டது. 'ஸ்டஃப் உள்ள ஆசாமிதான். ஒருத்தரைப் பொறுப்பில் உட்கார வைத்தால்தானே அவர் திறமை வெளிப்படும்...' என்று அவர் காதுபடப் பேசிக் கொண்டதன் விளைவாக அப்புசாமியின் காதுகளில் புகழுரைகள் விழுந்த பகுதிகள் ஜில்லிட்டு ஐஸ் கட்டிகளாக மாறி ராத்திரி வரைக்கும் கூட உருகாமலிருந்தன.

'சுத்தம் சுகம் சுந்தரம்' அப்புசாமியின் உயிர்மூச்சான கதை இதுவே.

காலை ஆறு மணி. ஆட்டோ ஒன்று வாசலில் படபடப்பு அடங்கி நின்றது.

''ஹாய்! ஆன்ட்டி! ஹாய்! அங்க்கிள்!'' என்ற குரல். பரட்டைத் தலையும், பரபரப்புமாய், உடம்பெல்லாம் ஏக கறுகறுப்புடன், டக்கராக ஒரு ஜீன்ஸும், மேல் சட்டையுமாக, கையில் ஏராளமான பெட்டிகள், ஃபைல்கள், லக்கேஜுகளுடன் ஓர் உருவம் வந்து இறங்கியது.

''நம்ம கல்யாணி! என்ன முழிக்கிறீர்கள்? டோன்ட் யூ ரெகக்னைஸ் ஹர்? கல்லுக் குட்டி என் ஒன்று விட்ட மருமான்'' என்று அப்புசாமிக்கு ஞாபகப்படுத்தினாள் சீதாப் பாட்டி.

''ஆன்ட்டி! கால் மி காலா! நோ கல்லுக் குட்டி, புல்லுக்குட்டி!'' என்றவள் கையிலிருந்த காலாவதியான ரயில்வே டிக்கெட்டை, ''விஷ்ஷ்!'' என்று ஒரு சீட்டி அடித்தவாறு பறக்க விட்டாள்!

அப்புசாமி, ''ஆ! கீழே போடாதே!'' என்று அலறியவாறு கெட்டிக்கார கிரிக்கெட் வீரர் பவுண்டரி பந்தைக் காட்ச் பிடிப்பது போல ஓடி விழுந்து, அந்த டிக்கெட்டை அது கீழே விழுமுன் பிடித்து, வாஷ்பேஸின் அருகே தயாராயிருந்த பிளாஸ்டிக் பையில் போட்டு விட்டார்.

''அங்க்கிள்! பிரமாதமாக காட்ச் பண்றீங்களே?'' என்று விருந்தாளிப் பெண் அப்புசாமியைப் புகழ்ந்தவாறு கையிலிருந்த நீள சாக்லேட்டை உரித்துக் காகிதத்தைக் கீழே போட்டாள்.

அப்புசாமி பாய்ந்து காகிதத்தைப் பொறுக்கி எடுத்து பிளாஸ்டிக் பையில் சேர்ப்பித்து விட்டு மூச்சிரைக்க, ''இந்தாம்மா கல்லுக்குட்டி! இப்படியெல்லாம் இஷ்டத்துக்குக் குப்பையைக் கீழே போடக் கூடாது. தெரிஞ்சுக்கணும் நீ.'' என்றார்.

சீதாப்பாட்டி அவளுக்கு விளக்கினாள் புன்னகையுடன். ''உங்க அங்க்கிள்தான் இந்தத் தெருவிலே குப்பைத் தொட்டித் தலைவர். ரீஸன்ட்டா எலக்ட் ஆனார். அன் அப்போஸ்ட். ஒரு சின்னக் குப்பை நம்ம வீட்டிலோ தெருவிலோ விழுந்தால் துடித்துப் போய் விடுகிறார். சுத்தம் சுகம் சுந்தரம் கமிட்டியின் பிரசிடெண்ட் ஆச்சே...''

''கன்கிராஜுலேஷன்ஸ் அங்க்கிள்!'' என்று காலா அப்புசாமியின் கையைக் குலுக்கி விட்டு, ''ஆன்ட்டி! தலைக்கு மேலே எனக்கு இன்னைக்கு வேலை இருக்கு! வேர் கான் ஐ ஹாவ் மை ஹேர் கட்?'' என்றவள், கையில் அணைத்திருந்த கற்றை கற்றையான காகிதங்களையும் ஃபைல்களையும் மேஜை மீது தபதபவென்று போட்டாள்.

அப்புசாமிக்குத் தன் மீதே அவற்றைப் போடுவது போலிருந்தது. காலா, தலை முடி வெட்டிக் கொள்ளச் சலூனுக்குச் சென்றதும், ''இந்தப் பரட்டைப் பீடை எங்கிருந்து வந்து சேர்ந்தது? எப்பப் பார்த்தாலும் சாக்லேட்டை உரித்து உரித்துக் கீழே போட்டுக் கொண்டு? ...தெருவை எட்டிப் பார்! சூயிங்கம் காகிதத்தை வரிசையாகப் போட்டுக் கொண்டு போயிருக்கிறாள்! இப்ப நான் போய்ப் பொறுக்கணும்'' என்று படபடத்தார். ''மறுபடி மறுபடி அவள் சாக்லேட் காகிதம் கீழே போட்டான்னா கல்தாதான்.''

சீதாப்பாட்டி, ''காம் டவுன் சார்.. காம் டவுன்...'' என்று அப்புசாமியை அமைதிப்படுத்தி விட்டு விவரித்தாள். ''காலா நீங்க நினைக்கிற மாதிரி பழைய கல்யாணிக் குட்டி இல்லே... ஷி இஸ் எ ஜீனியஸ். ஸிஸ்டம்ஸ் ஸாஃப்ட்வேர்லே ஒரு பிரமாதமான ப்ராஜக்ட் பண்ணியிருக்கிறாள் இன் கோ ஆர்டினேஷன் வித் எ விசிட்டிங் ப்ரொபஸர் ஃப்ரம் யு.எஸ். ஸிஸ்டம்ஸ் ஸாஃப்ட்வேர்னா உங்களுக்குப் புரிகிறதோ?''

''அவ எதை வேணும்னாலும் பண்ணட்டும். ஆனால் கண்ட இடத்திலே அவள் இப்படிக் குப்பை மாதிரி எல்லாவற்றையும்

கோபமே கோபம்!

• அனைவராலும் சுலபமாகக் கோபம் கொள்ள முடியும். ஆனால் சரியான ஆளிடம், சரியான அளவில், சரியான நேரத்தில், சரியான காரணத்திற்காக, சரியான முறையில் கோபம் கொள்வது சுலபமானது அல்ல.

— அரிஸ்டாட்டில்.


தகவல்: ஆர். கே. லிங்கேசன்.

வறுமைக் கோட்டுக்குக் கீழே...

'வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள்' என்ற சொற்றொடரை அரசியல்வாதிகள் அடிக்கடி பயன்படுத்துகிறார்கள். அது உண்மையில் யாரைக் குறிக்கும்?

திட்டக்கமிஷனின் நிர்ணயப்படி, கிராமப் பகுதிகளில் மாதம் தலா ரூ. 107/-க்கும், நகரங்களில் ரூ. 122/-க்கும் (1983—84 விலைவாசிப்படி) குறைவான வருமானம் உள்ளவர்களே அவ்வர்ணனையில் அடங்குபவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

— அ. ஷண்முகசுந்தரம்.



இறைத்து வைத்தால் நான் பொல்லாதவனாயிடுவேன்'' என்னை என்ன குப்பைப் பொறுக்கின்னு நினைச்சுட்டாளா அவள்?"

"டேக் இட் ஈஸி! டோன்ட் பி ஸில்லி!'' அமைதிப்படுத்தினாள் சீதாப்பாட்டி. "பெரிய ஜீனியஸ்களெல்லாம் அப்படித்தான். எதையும் ஒழுங்காக ஒரு இடத்திலே வைக்க மாட்டார்கள்.''

அப்புசாமி செருமினார்: "அப்படீன்னா, ஒழுங்கா வைக்கிறவங்களெல்லாம் முட்டாள் கழுதைங்களா... இல்லே, கேட்கிறேன். சுத்தம் சுகம் சுந்தரம் கமிட்டியோட பிரசிடெண்ட் என்கிற முறையிலே கேட்கிறேன்...! பார்த்தியா! இந்தக் காகிதங்களை அப்படியே கடாசிட்டுப் போய் விட்டாள். காற்றிலே இப்பவே பறக்கிறேன் என்கிறது. எனக்கு வர்ற கோபத்திலே இத்தனையையும் இப்பவே பிளாஸ்டிக் பையில் அடைச்சு வண்டியிலே போட்டு குப்பை மேட்டுக்கு அனுப்பத் தோணுது.''

"மை குட்னஸ்!'' என்று அப்புசாமியின் கையிலிருந்து காகிதங்களையும் ஃபைலையும் வாங்கி மேஜை மீது வைத்தாள்.

"பதட்டப்படாதீர்கள். அதெல்லாம் அவளோட இம்பார்ட்டன்ட் பேப்பர்ஸ். ஐ ஷல் அரேஞ்ச். நான் எல்லாவற்றையும் சுத்தமா வைச்சுடறேன்.''

— சீதாப்பாட்டி ஃப்ரிஜ்ஜைத் திறந்து குளுமையாக நுரை ததும்பும் பழரசம் ஒரு டம்ளர் தந்தாள்.

அப்புசாமி மடக் மடக்கென்று குடித்துவிட்டு, உதட்டில் கரை கட்டிய ஜூஸின் நுரையைக் கூடத் துடைத்துக் கொள்ள நேரமின்றி, "இருபத்திரண்டாம் நம்பர் வீட்டிலே ஏதோ கல்யாண நிச்சயதார்த்தமாம். அவுங்க வீட்டுலே இன்னைக்கு விழுற ஸ்பெஷல் குப்பைகளுக்கு இன்னும் இரண்டு பிளாஸ்டிக் பை கொண்டு போய்த் தரணும். வேலை சரியாயிருக்கு...'' என்று கடமை உணர்ச்சியுடன் தெருக் கண்காணிப்புக்குக் கிளம்பினார்.

மாலை மூன்று மணி. அப்புசாமி களைத்துக் கண் பூத்துக் காய்த்துப் பழுத்து வீடு திரும்பிய போது வீடு ஒரே ரகளையாயிருந்தது.

பீமாராவ், ரசகுண்டு எல்லாரும் அப்புசாமியைக் கண்டதும், பரபரப்புடன் ஓடி வந்தனர்.

"தாத்தா! தாத்தா! எங்கே தொலைஞ்சிட்டீங்க? குடிமுழுகிப் போயாச்சு. பாட்டி நேரே என் வீட்டுக்குக் கார் போட்டுகிட்டு வந்து... உங்களை எங்கெல்லாம் தேடறது?"

அப்புசாமி முந்தின நாள் இரவு கண் விழிப்பின் காரணமாக, அடுத்த தெருவிலிருந்த பூங்காவில் ஒரு மரத்து நிழலில் மறைவாகப் படுத்தவர் — ஒரே அடியாகத் தூங்கி விட்டார். எழுந்து இமைகளைப் பிரித்துக் கொண்டு வீட்டுக்கு வர ஆறு மணி நேரமாகி விட்டது! வந்தால் இங்கே பூகம்பம் எரிமலை.

"என்னை ஏண்டா ரசம், கிழவி தேடினாள்?'' என்று குழப்பத்துடன் உள்ளே நுழைந்ததும் அவர் மேல் சில புத்தகங்கள், ஃபைல்கள் வந்து தாக்கின.

கோயமுத்தூர் ஸாஃப்ட்வேர் ஜீனியஸ் கோரதாண்டவம் ஆடிக் கொண்டிருந்தாள். கைக்குக் கிடைத்ததையெல்லாம் தூக்கி அப்புசாமி மேல் அடித்தாள். "யூ! ப்ளடி ரெச்! நீ ஒரு அங்க்கிளா! கோல்ட் ப்ளடட் மர்டரர்! வேர் த ஹெல் என் ஃப்ளாப்பீஸ்? அதெல்லாம் ஸீக்ரட் ப்ராஜக்ட். என் ப்ரோக்ராமின் பிரிண்ட் அவுட் கற்றை கற்றையாக இருந்ததே... எல்லாத்தையும் பையிலே போட்டு வைத்திருந்தேன். குப்பை மேட்டுக்கு அனுப்பி விட்டீர்களா என் மேலிருந்த கோபத்தில்? கோ டு ஹெல்! எனக்கு அந்தப் பை உடனடியாக வந்தாக வேண்டும். ஐ வில் கில் யூ...''

அப்புசாமி குலைநடுங்கிப் போனார்.

இத்தனை கலாட்டாவும் நடந்து கொண்டிருந்த போது சீதாப்பாட்டி அமைதியாகச் சமையலறையில் காப்பி தயாரித்துக் கொண்டிருந்தாள். காப்பியுடன் அமைதியாக வந்தவள், "ப்ளீஸ் ஃபர்கிவ் ஹெர்... ஷி இஸ் இன் எ ஃப்ரென்ஸி. ஒரேயடியாக அப்ஸெட் ஆகி விட்டிருக்கிறாள். நாளைக்குக் காலையிலே பத்து மணிக்கு அவள் பி. ஸி. எஸ். கன்ஸல்டிங் சர்வீஸஸுக்குப் போயாகணும். ராத்திரி பூரா ப்ரிபேர் பண்ணணும்னு சொல்லிக் கொண்டு வந்து பார்த்தால் அவள் பையையே காணோம். நீங்க குப்பைத் தொட்டிக்கு அனுப்பிட்டீங்க.''

"அடிப்பாவி!'' என்றார் அப்புசாமி. "கண்ணாம்பு இல்லாமலே வாய் வெந்து போயிடும்டி. நான் ஏன் இந்தப் பீடையோடதை எடுத்துக் குப்பை மேட்டுக்கு அனுப்பறேன்'' அவர் சொல்லி வாய் மூடுமுன்,

"யூ! யூ! யூ ஒன்லி டிட் இட்!'' என்றவாறு

காலா அவர் மீது நரிப் பாய்ச்சல் பாய சீதாப் பாட்டி பதறி, இருவரையும் பீமாராவின் உதவியோடு பிரித்து விட்டாள்.

ஜல்லிக்கட்டுக் காளைக்கு இரைப்பது போல காலாவுக்கு மூச்சு இரைத்தது. சற்று நேரத்தில் தொப்பென்று உட்கார்ந்து விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டாள். "மை ப்ராஜக்ட்! மை ஃப்யூச்சர்" எல்லாம் போச்சு. எவ்ரிதிங் கான்."

சீதாப்பாட்டி மருமாளைத் தைரியமாகத் தொட்டுச் சமாதானப்படுத்தினாள். "காலா... ப்ளீஸ்... லீவ் இட் டு மி. உன் ப்ராஜக்ட், ஃப்ளாப்பி, எவ்ரிதிங்... நான் கொண்டு வந்து சேர்க்கச் சொல்கிறேன். தூக்கக் கலக்கத்திலே அவர், நம்ம வீட்டு கார்ப்பேஜ் பைக்குப் பதிலாக உன்னோட ப்ராஜக்ட் பையை வண்டியில் தூக்கிப் போட்டிருக்கலாம். சான்ஸஸ் ஆர் தேர். நான் அவரை இப்பவே குப்பை மேட்டுக்குப் போய் நன்றாகத் தேடிப் பார்க்கச் சொல்கிறேன்" என்றவள் அப்புசாமியிடம், "ப்ளீஸ்! ஹாவ் ஸம் பிடி! புவர் காலு. ஹெல்ப் ஹெர். கோ டு குப்பை மேடு!" என்றாள்.

"அடியே கிராதகி!" என்று கத்தினார் அப்புசாமி. "நான் காலையிலே பத்து மணிக்கு வெளியே போனவன் பார்க்கிலே பொணம் மாதிரி படுத்துத் தூங்கி விட்டு இப்பத்தாண்டி வர்றேன்.. நடந்தது எதுவுமே எனக்குத் தெரியாது..."

சீதாப்பாட்டி அமைதியாக, "அங்கே தான் யு ஆர் மிஸ்டேக்கன். நீங்க உங்களை மறந்து தூங்கினதாகச் சொல்றீங்க இல்லையா? அது ரொம்ப கரெக்ட்... ஏன்னா மத்தியானம் ஒரு மணிக்கு நீங்க இங்கே வீட்டுக்கு வந்து சாப்பிட்டுட்டுப் போனீங்க. போகிறப்போ வாஷ்பேஸின்கிட்டேயிருந்த பையைத் தூக்கி அப்போ வந்த குப்பை வண்டியில் போட்டீங்க. உங்களை அறியாமல் தூக்கத்திலேயே இவ்வளவும் நடந்திருக்கிறது... யு ஹாவ் டேக்கன் யுவர் மீல். அது கூடத் தெரியவில்லையே."

"ஆமாண்டி!" பல்லை நறநறத்தார் அப்புசாமி. "என்னை அறியாமலேயே நான் செத்துட்டேன்னு கூடச் சொல்லுவே."

அப்புசாமி பேசி முடிப்பதற்குள் புத்தகம் ஒன்று பறந்து வந்து அவரை இரண்டாம் தடவை தாக்கியது.

"ப்ளீஸ்! போய்த்தான் தேடி விட்டு வந்து விடுங்களேன். ட்ரை டு ஹெல்ப் ஹெர். அவளுடைய எதிர்காலமே உங்கள் கையில் தான்."

சீதாப்பாட்டி கெஞ்சினாள்.

காலா தொடர்ந்து போட்ட கூச்சலில் அடுத்த அரையாவது மணியில் அப்புசாமி வள்ளுவர் கோட்டம் எதிரேயிருக்கும் பரந்த பெரிய புராதனமான குப்பை மேட்டில் முழங்கால் அளவுக்கு உள்ளே போய்த் தேடத் தொடங்கி விட்டார்.

வாலாயமாக அங்கு மேயும் சில பன்றிகள் நட்புறவோடு அப்புசாமியின் அருகில் வந்து முகர்ந்து பார்த்தன.

தகரம், இரும்பு, எலும்பு என்று ரக வாரியாகக் குப்பை மேட்டில் மாமூலாகப் பொறுக்கிக் கொண்டிருந்த சில பெண்மணிகள் புது ஆள் ஒருத்தன் தங்கள் தொழிலில் போட்டிக்கு வந்ததைக் கண்டித்து, "நைனா! எங்க பொழப்பிலே மண்ணைப் போடாதே! போயிடு! இது எங்க ஏரியா!" என்று எச்சரித்து, அச்சாரமாக சில பழைய சட்டிகளை எடுத்து அப்புசாமியை நோக்கி அன்பளிப்பாக அனுப்பி வைத்தனர்.

அப்புசாமி அவசரம் அவசரமாக அவர்களைக் கும்பிட்டு, "தாய்க்குலமே! கொஞ்சம் பொறுத்துக்குங்க.. ஒரு பையிலே புஸ்தகம் காகிதமெல்லாம் இருந்தது. மிஸ்டேக்கா வந்துட்டுதாம். அது மட்டும் இருக்குதான்னு தேடிட்டு ஓடிடறேன்" என்று கெஞ்சி விட்டு, தேடிக் களைத்து, மேலெல்லாம் சேறும் சகதியும் குப்பையுமாக; காலிலும் கையிலும் கண்ணாடி, தகரங்கள் குத்தி அடையாளச் சின்னங்கள் இட்ட கோலத்தில் வெறும் கையுடன் போகலாகாது என்று கைக்குக் கிடைத்த கன்னாபின்னாக் காகிதங்கள் சிலவற்றுடன் பயந்து நடுங்கிக் கொண்டு இரவு ஏழு மணிக்கு வீட்டுக்குள் நுழைந்த போது பிரியமான ஒரு ஜோடி மெல்லிய கரங்கள், அவர் கையைப் பற்றின.

"அங்கிள்! அங்கிள்! ஐயம் ஸோ ரிப்ளி ஸாரி அங்கிள்! என்னை மன்னிச்சிடுங்க! என்னுடைய ப்ராஜக்ட் பை அல்மைரா பின்னாடியேதான் இருந்தது. நீங்க மத்தியானம் குப்பை வண்டியில் போட்டது அசல் குப்பை போட்ட பைதான். ஆனால் என் ப்ராஜக்ட் பை எப்படி அல்மைரா பின்னால் போயிற்று என்கிறதுதான் எனக்குப் புரியவில்லை" என்று தேன்குரலில் காலா கூறி அப்புசாமி அங்கிளிடம் மன்னிப்புக் கோரினாள்.

"எனக்கும் அதுதான் புரியவில்லை" என்றாள் சீதாப்பாட்டி நமுட்டுச் சிரிப்புடன்.

"அடியே! கெயவி! உன் வேலையாகத் தாண்டி இருக்கும். நான் க. க. க. தலைவரானதிலே உனக்குப் பொறாமை... பையை ஒளிச்சு வெச்சு என்னை இப்படி இந்தச் சிறுக்கி மூலம் சித்திரவதை பண்ணிட்டே...." அப்புசாமி கூச்சலிட்டார்.

"ப்ளீஸ்! உள்ளே வந்து குளித்து விட்டு அப்புறம் கத்துங்கள்! யு ஆர் ஸ்டிங்கிங்!" என்றாள் சீதாப்பாட்டி.

"தலை முழுகிடறேண்டி... க. க. க. தலைவர் பதவிக்கும் சேர்த்து முழுகிடறேண்டி! இருப்திதானே?" என்றவாறு அப்புசாமி குப்பைசாமியாகக் குளியலறைக்குள் நுழைந்தார்.

அடுத்த வாரம் அப்புசாமி தன் வீட்டு மொட்டை மாடியில் காய்கறிப் பண்ணை போடுகிறார்.

காய் போட்டாரா? காய்ந்தாரா?

YOU CAN WIPE-OFF THIS CHILD'S TEARS.

This child knows the pain of hunger, the cold of loneliness and the fear of being unwanted. This child can have all the love and care it needs to feel wanted at UDAVUM KARANGAL.

UDAVUM KARANGAL is a secular organisation aligned to neither sect nor creed or receiving aid from the Government or Abroad. We depend on the general Public– AND THAT MEANS YOU. Remember no donation is too small – It's the love that goes with it that matters. Our children need Food, Medicine, Clothing and Education.

You can help us in more ways than one. Write to us and tell us about yourself. We need volunteers too.

DONATONS ARE EXEMPTED UNDER SEC 80 (G) OF THE INCOME-TAX ACT.



S. VIDYAKAR

UDAVUM KARANGAL (REGD)

(CENTRE FOR HUMAN SERVICES)

460, NSK NAGAR
MADRAS - 600 106
PHONE : 426141.

SPACE DONATED BY JAYABHARATHAM GROUP OF COMPANIES, ROYAPETTAH MADRAS - 14.

ALKA'S



• டெலிடேட்டாவில்...

சந்தேகங்கள் தீர்க்கும் டெலிபோன் மனை

உங்களுக்கு அவசரமாகத் திருச்சி போக வேண்டும்... எந்த ரயிலில் டிக்கெட் கிடைக்கும்? எங்கு தங்குவது...? எவ்வளவு செலவாகும்...? இதெல்லாம் எப்படித் தெரிந்து கொள்வது? 470014 — என்ற எண்ணுக்கு டயல் செய்யுங்கள். உங்களுக்கு வேண்டிய தகவல்கள் உடனுக்குடன் கிடைக்கும். இது மட்டுமல்ல.... நீங்கள் எந்த நியாயமான சந்தேகத்துடன் கேள்வி கேட்டாலும் உடன் பதில் கிடைக்கும். எங்கே?

சென்னை அண்ணாசாலை, மாலை முரசு அலுவலகத்திற்கு எதிர்ப்புறம் அமைந்துள்ள டெலிடேட்டா இன்ஃபர்மேஷனில் தான் இவ்வளவும்...!

உங்கள் சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் டெலிபோனிலேயே தெளிவான பதில் தருவதோடு சில சிறப்பு உதவிகளும் செய்கிறது டெலி டேட்டா. உதாரணமாக, செகண்ட் ஹேண்ட் கார் வாங்க/விற்க வேண்டுமா? விற்பவர்களுக்கும், வாங்குபவர்களுக்குமிடையே பாலமாக இருந்து செயல்படுகிறது. டெலிபோனில் வழங்கும் ஓரிரு பதில்களுக்குக் கட்டணம் கிடையாது. ஆனால் கார் விற்பது போன்ற சேவைகளுக்குக் கமிஷன் வசூலிக்கப்படும்.

வருடத்துக்கு 600 ரூபாய் கட்டணம் செலுத்தினால் உங்களுக்கு வேண்டிய எல்லா விஷயங்களையும் டெலி டேட்டா கவனித்துக் கொள்ளும்.

உதாரணத்துக்கு நீங்கள் ஒரு பெரிய பிசினஸ்மேன்.... எப்பவும் பிஸிதான்... மனைவி, குழந்தைகள், உறவினர்கள் பிறந்த நாள் போன்ற சின்னச் சின்ன விஷயங்களை நினைவில் வைத்துக் கொள்வது கடினம்.... டெலி டேட்டா இந்த விஷயங்களை உங்களுக்கு ஞாபகப்படுத்தும் (**Reminder Service**). நீங்கள் வெளியூர் போனால் ஹோட்டலில் ரூம் புக் பண்ணித்தருவது முதல்; விமானம், ரயில் ரிசர்வேஷன் வரை.... டெலி டேட்டா செய்து தரும்.

தவிர திருமணப் பொருத்தமும் (**Matri-**

monial) பார்த்துச் சொல்கிறார்கள். இந்த நிறுவனத்தில் உங்களுடைய பயோடேட்டா, பெண்/பையன் எப்படியிருக்க வேண்டும் என்பது பற்றிய விவரங்கள் கொடுத்து விட்டால், டெலிடேட்டா தானே கம்ப்யூட்டர் ஜாதகம் தயாரித்து: பத்திரிகைகளில் வரும் திருமண விளம்பரங்களில், சம்பந்தப்பட்டவருக்குப் பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கும்! இது போல் வேலை வாய்ப்பும் தேடிக் கொடுக்கப்படும். இந்த சேவைகள் உறுப்பினர்களுக்கு மட்டுந்தான்!

தனி நபர் சர்வீஸ் போல் கம்பெனி சர்வீஸும் உண்டு. இதற்கு 2400 ரூபாய் ஆண்டுக் கட்டணம். கம்பெனிக்கு வேண்டிய விவரங்கள் — கம்ப்யூட்டர் வாங்குவது முதல் டெண்டர் விடுவது வரை..... டெலிடேட்டாவே கவனித்துக் கொள்ளும்! கம்பெனிக்கு வேண்டிய விளம்பரங்களை வெளியிடுவதையும் இவர்கள் கவனித்துக் கொள்வார்கள்.

டெலிடேட்டாவின் பொதுநலச் சேவையே நம்மை அதிகமாகக் கவர்கிறது. எத்தனை விதவிதமான தகவல்கள்!

வெளிநாடுகளில் எத்தனை பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன? என்பது போன்ற விவரம்... TOEFL, GRE தேர்வு மதிப்பெண்களைச் சொன்னால், எந்த சர்வகலாசாலையில் உங்களுக்கு இடங்கிடைக்கும்? எத்தனை செலவாகும்...? போன்ற தகவல்கள் 470014க்கு டயல் செய்தால் உடன் கிடைக்கும்!

நீங்கள் லண்டன் போகிறீர்கள்... உங்கள் மகனுக்கு ஒரு ஷர்ட் வாங்க வேண்டும்... அவனுக்கு இந்திய அளவின்படி 36 இஞ்ச். வெளிநாட்டில் என்ன அளவாக இருக்கும்? டெலிடேட்டாவிடம் கேளுங்கள்... சொல்வார்கள்...!

"எறும்புக்கு எத்தனை கால் என்பது போன்ற கேள்விகளைக் குறும்புக்காகக் கேட்பவர்களும் இருக்கிறார்கள்...." என்று சொல்லிச் சிரிக்கிறார் இந்நிறுவன கம்ப்யூட்டர் செக்ஷன் தலைமைப் பொறுப்பு வகிக்கும் செந்தில்!

"நான் தற்கொலை செய்து கொள்ள விரும்புகிறேன்.... சுலபமான வழி சொல்ல முடியுமா.....? என்று ஒருவர் போனில் கேட்டார். நாங்கள் உடனே, அவரை மறு முனையில் காத்திருக்குமாறு சொல்லி விட்டு, ஸ்னேகாவுடன் (தற்கொலை தடுப்பு மையம்) தொடர்பு கொண்டு விஷயத்தைச் சொல்லி அவரை உடனே சந்திக்கும்படி செய்தோம்....

"வரப் போகும் தமிழக சட்டமன்ற மற்றும் மக்களவைத் தேர்தல் பற்றிக் கருத்துக் கணிப்பு ஒன்று எடுத்து வருகிறோம். இதில் யாருடைய கணிப்பு சரியாக இருக்கிறதோ, அவர்களுக்குக் குலுக்கல் மூலம் 5000 ரூபாய் பரிசு தர இருக்கிறோம்..." அடுக்கிக் கொண்டே போகிறார் செந்தில்.

இவ்வளவு விதமான தகவல்களை எப்படிச் சேகரித்து வைத்துள்ளார்கள்? டெலிடேட்டா டைரக்டர்களுள் ஒருவரான கே. பத்மநாபனைச் சந்தித்துக் கேட்டோம்:

எல்லாம் கம்ப்யூட்டர் உபயம்தான். தினந்தினம் நடக்கும் முக்கியமான நிகழ்ச்சிகளைக் கம்ப்யூட்டரில் பதிவு செய்துள்ளோம். 24 மணிநேரமும் புதுப்புதுச் செய்திகளைச் சேர்க்கிறோம்; போன் செய்வோருக்குக் கம்ப்யூட்டரின் மெமரியிலிருந்து சரியான பதிலை அளித்து விடுகிறோம்.

"நிறையச் செலவாகுமே... உங்களுக்கு எப்படி கட்டுப்படியாகிறது...?" என்று கேட்டபோது,

"பொதுநல சேவையும் எங்கள் நோக்கம் என்றாலும் முழுக்க முழுக்கப் பொது நலச் சேவைக்காகத்தான் இதை ஆரம்பித்தோம் என்று சொல்ல நான் விரும்பவில்லை.



• பத்மநாபன்

அரசு, மற்றும் தனியார் நிறுவனங்கள் பல, எங்களுக்கு ஆண்டுச் சந்தா கட்டியுள்ளன. சிங்கப்பூர், துபாய் நகரங்களிலும் கூடிய விரைவில் இம்மாதிரி நிறுவனத்தை ஆரம்பிக்க இருக்கிறோம். கின்னஸ் உலக சாதனைகளையும் கம்ப்யூட்டரில் பதிவு செய்ய நினைத்திருக்கிறோம்..." சொல்லி முடித்தார் பத்மநாபன்.

டெலிடேட்டா அலுவலகத்தில் ஆண்களும், பெண்களும் சிரிப்பு மாறாமல் பதில் சொல்வதைப் பார்க்க முடிந்தது. கடந்த நவம்பரில் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் சென்னை வாசிகளிடையே ரொம்ப பாப்புலராகிவிட்டது என்பதை நிதர்சனமாய்க் காண முடிந்தது.

— வே. பகவதி

வாசகர் யோசனை:

தோ,
திருச்சி — 18.

மாணவர் கட்டுரைப் போட்டி

போதைப் பொருளைப் புறக்கணிப்பது எப்படி?

ரூ. 50 முதல் பரிசு பெறும் கட்டுரை!

படிக்கவரும் மாணவன் போதையால் பாதை மாறி, பாழாய்ப்போவது எவ்வளவு பெரிய கொடுமை? இதை இன்றே தடுக்கா விட்டால் மாணவர்கள் பாதிக்கப்படுவதோடு நாட்டின் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும்.

நண்பர்களின் கட்டாயம், 'என்னதான் அதில் உள்ளது?' என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் போன்ற ஏதாவதொரு காரணத்திற்காக முதலில் போதைப் பொருளைப் பயன்படுத்தத் தொடங்குகின்றனர். பின்னர் தங்கள் வாழ்க்கையையே அதற்கு விலையாகத் தருகின்றனர். முதலில் சிகரெட்டில் ஆரம்பிக்கும் போதைப் பழக்கம் மெல்ல மெல்ல கஞ்சா, அபின், ஹெராயின், பெத்தடின் போன்றவைவரை நீள்கிறது.

இதற்கெல்லாம் முக்கிய காரணம் மனக்கட்டுப்பாடு இல்லாததுதான். பல வகைகளில் இதனை வளர்த்துக் கொள்ள வேண்டும். முதலில் போதைப்பழக்கம் உள்ள நண்பர்களை இனம் கண்டு நாம் முயற்சி செய்து திருத்த வேண்டும்; முடியாவிட்டால் நாம்மட்டுமாவது நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும்; அவர்களுடன் சேர்ந்து நாமும் படுகுழியில் விழுந்து விடக்கூடாது. 'அவன் மட்டும் கஞ்சா அடிக்கிறான். ஏன் நாமும் அதன் சுவையை ரசிக்கக்கூடாது? சுவையை அறிந்த பிறகு பின்னர் விட்டு விடலாம்' என்ற நினைப்பில் பலர் போதைப்பொருளைச்சுவைக்கத்தொடங்குகின்றனர். இதற்குப் பதில் 'அவன் மட்டும் வகுப்பில் முதல் மாணவனாக வருகிறான். ஏன் நாமும் வரக்கூடாது?' என்று மனம் எண்ண வேண்டும். இப்படிப்பட்ட ஆக்கபூர்வமான சிந்தனையும் மன உறுதியுமே நம்மைக் காக்கும்.

போதைப் பொருளைப் பயன்படுத்துவதற்குரிய நேரம் வந்தவுடன் அதற்குப் பழகியவர்களின் மனம் அலைபாயும். இந்த நேரத்தில் அவர்கள் கருத்தரங்கு, பட்டிமன்றம் மற்றும் பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டால் அவர்களின் சிந்தனை மெல்ல மெல்ல போதையிலிருந்து விடுபட்டு வேறு விஷயங்களில் செல்லும். அல்லது நமக்குத் தெரிந்த பெரியவர்களை அணுகி அவர்களிடம் நல்லவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்ள முயற்சி செய்தால் நிச்சயம் மனம் போதை பற்றிய சிந்தனையிலிருந்து விடுபட வழிபிறக்கும்.

உழைப்பு — இதற்கு எதையும் மறக்கடிக்கக்கூடிய சக்தி உண்டு. போதைப் பொருளால் அலைக்கழிக்கப் படும் மாணவர்களுக்கு உழைப்பு மிகச் சிறந்த மாற்று. கம்பராமாயணப் பாடத்தைப் படித்து உரை எழுதி முடிக்கும் வரை வேறு எந்தச் செயலிலும் இறங்கமாட்டேன் என்று தீர்மானித்துத் தீவிரமாகச் செயல்படலாம். அல்லது தோட்டம் கொத்துவது; தண்ணீர் விடுவது போன்ற உடலுழைப்புக் காரியங்களையும் செய்யலாம். முதலில் கஷ்டமாயிருந்தாலும் நாளடைவில் நிச்சயம் வெற்றிதான்.

சமுதாயத்தின் உதவியும் நிச்சயம் தேவை. போதைப் பொருளால் பாதிக்கப்பட்டவர்களை ஒரு குற்றவாளியைப் போல் நடத்தாமல் அவர்களும் மனிதர்கள்தான் என்ற நோக்கில் பார்க்க வேண்டும். சமுதாயம் அவர்களை வெறுத்து ஒதுக்கும் போதுதான் அவர்கள் ஏமாற்றமடைந்து மேலும் மேலும் போதைப் பொருளுக்கு அடிமையாகிறார்கள். அவர்களைத் தனிமைப் படுத்தாமல் மற்றவர்களுடன் பழக விட்டு முறையான சிகிச்சையும் அளித்தால் அக்கொடிய பழக்கத்தை அவர்களிடமிருந்து விரட்டிவிடலாம்.

போதைப் பொருளுக்கு எதிராக அரசாங்கம் இன்று எடுக்கும் நடவடிக்கைகள் போதாது. போர்க்கால நடவடிக்கையாக இன்னும் பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த வேண்டும். போதைப் பொருளை விற்பவர்களுக்கும், கடத்துபவர்களுக்கும் இப்போது உள்ள தண்டனையைவிட அதிகமான தண்டனை வழங்கச் சட்டம் இயற்றப்பட வேண்டும். போதைப் பொருள்களின் கொடுமையை எடுத்துக் கூற போதைப் பொருள் ஒழிப்பு வாரம் ஒவ்வொரு கல்லூரியிலும் நடத்தச் செய்ய வேண்டும். போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்குத் தனி மருத்துவமனை ஏற்படுத்தி, அதில் நல்ல முறையில் சிகிச்சை அளித்திட ஏற்பாடு செய்ய வேண்டும்.

மிகப்பெரிய தேவை அன்பு. வீட்டில் சரியானபடி அன்பு காட்டப்படாமல் புறக்கணிக்கப்படும் மாணவர்கள்தான் போதைப் பொருள்களை அணுகுகிறார்கள். பெற்றோர் தங்கள் குழந்தைகளிடம் பாசத்தைப் பொழிந்து, அன்புடன் நடத்தினார்கள் என்றால் போதை என்ற பேச்சுக்கே இடம்

இல்லாமல் போய்விடும்.

— ஈ. முத்துக்குமார்,
இரண்டாம் ஆண்டு,
ஆங்கில இலக்கியம்,
ந. க. ம. கல்லூரி,
பொள்ளாச்சி — 642 001.

மனக்கட்டுப்பாடு மங்களம் தரும்!

● நம் மனத்தைக் கட்டுப்படுத்த யோகாசனத்தையும்.

● நம் நடத்தையை ஒழுங்குபடுத்த ஆன்மீகத்தையும் நாட வேண்டும்.

● நம் செயலையும் சிந்தனையையும் ஒழுங்காகப் பராமரிக்கக் 'கூடா நட்பு; கூட்டை அழிக்கும்,' 'துஷ்டனைக் கண்டால் தூர விலகு'; போன்ற ஆன்றோர்களின் வாக்குகளை நினைவில் கொண்டு செயல்பட வேண்டும்.

● கல்லூரிக்குக் காலத்துடன் சென்று காலத்துடன் வீடு திரும்புதல்;

● 'படி, முன்னேறு' என்பதற்கு ஏற்பப் படிப்பில் கவனம் செலுத்துவது; ஓய்வு நேரங்களில் வீட்டு வேலைகளும் நம் கடமை என்பதை உணர்ந்து செய்வது;

● பொதுத் தொண்டுகள் செய்யும் அமைப்புக்களுடன் இணைந்து நம் கவனத்தைத் திசை திருப்பி நல்ல காரியங்களை ஆற்றுதல்;


● போதைப் பொருள்களை விநியோகிக்கும் ஆட்களை இனம் கண்டு ஊருக்குள் சேர்க்காவண்ணம் சமுதாயத்துடன் இணைந்து ஒத்துழைத்தல்...

ஆகியன நம்மைத் தீய பழக்கத்துக்கு அடிமைப்படாமல் காப்பாற்றும்.

— ச. மணிவண்ணன்,
பி. எஸ்ஸி முதல் ஆண்டு,
அரசு கலைக் கல்லூரி,
வேலூர் — 632 002.

யோகாவுக்கு அடங்கும் மனம்

யோகாவில் ''சவாசனம்'' என்றொரு ஆசனம் இருக்கிறது. போதைப் பொருளை உபயோகிக்கக்கூடிய நேரம் நெருங்கியதும் உடலெல்லாம் ஒரு பரபரப்பு, தினவு ஏற்





கி. மு. 762 இல் வாழ்ந்த பிரபல சீனக் கவிஞர் லி-போ இறந்த விதம் ஆச்சர்யமானது. ஒரு பௌர்ணமி இரவில் படகில் உல்லாசப் பயணம் சென்றவர், கடல் நீரில் பிரதிபலித்த சந்திரனை முத்தமிடத் துணிந்து கடலில் மூழ்கி இறந்தார்!

— எஸ். முகம்மது யூசுப்.

படும். அந்த சமயத்தில் தரையில் ஒரு பெட்ஷீட்டை விரித்து அதில் மல்லாந்தவாறு கை, கால்களை நீட்டிப் படுக்க வேண்டும். உங்கள் உடல் தளர்ச்சியாக, மிருதுவாக இருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள்.

முதலில் உங்கள் கால் பாதம் காணாமல் போய்விட்டதாகக் கற்பனை செய்ய வேண்டும். பின் முட்டிப் பகுதியை மறக்கவும். இவ்வாறு மார்பு, கழுத்து, தலை, கை எல்லாவற்றையும் மறந்து விடுங்கள். இப்பொழுது உங்கள் மனம் மட்டும் தான் இருக்கிறது. அதைக் கட்டுப்பாட்டில் வைப்பேன் என்று எண்ணுங்கள். சாந்தி அடையுமாறு அதனுடன் உரையாடுங்கள். உங்கள் உடலில் போதைப் பொருள் பயங்கரத்தினால் தோன்றிய பரபரப்பு, குறைந்து மறைந்தே போயிருக்கும். இதே நிலையில் பத்து நிமிடம் வரை இருக்கவும்.

இவ்வாறு தினமும் இருமுறை செய்து வந்தால் உங்கள் மனம் போதைப் பொருளில் இருந்து விடுபட்டு உங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கும்.

— எம். முத்துக்குமார்,
இளங்கலை கணிப்பொறி அறிவியல்,
முதலாண்டு,
காமராஜ் கல்லூரி,
தூத்துக்குடி — 3.

அன்பு அடிமையாகாமல் காக்கும்

இது போன்ற விஷயங்களில் மனவுறுதி பெற நான் சில எண்ணங்களை மனத்தில் கொண்டு வந்து நிறுத்துவேன்:

1. குடும்பப் பாரம்பரியம்: 'இவரு பையனா இப்படி?' என்று யாராவது கூறிவிட்டால் நம் குடும்ப கௌரவம் பாதிக்கப்படுமே என்ற எண்ணம்.

2. முன்னோடிகள்: பல துறைகளிலும் நல்ல திறமைசாலிகள் இப்போதைப் பழக்கத்தால் அழிந்த விஷயங்களைப் பற்றி எண்ணிப் பார்த்தல்.

3. எதிர்காலம்: இளமையில் நண்பர்களால் உண்டாகும் இவ்வின்பங்கள், நிலையானவையல்ல, நம் எதிர் காலமே பாலைவனமாகிவிடும் என்ற உண்மையான எண்ணம்.

தவிர, போதைப்பொருட்களை விற்போர், வாங்குவோர் பற்றி அறிந்தால் நமக்கென்ன என்று இராமல், உடனே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் துணிந்து தகவல் தர முன்வர வேண்டும்.

கல்லூரியில் படிக்கும் தங்கள் மக்களின் நடவடிக்கைகளில் மாற்றம் கண்டால் உடனே அதன் காரணங்களை அறிய பெற்றோர் முற்பட வேண்டும். ஆயிரம் வேலைகள் இருந்தாலும் தங்கள் குழந்தைகளிடம் உண்மையான அன்பைச் செலுத்தவும் அதை வெளியிடவும் நேரம் ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.

— எஸ். செந்தில்வேலன்,
பி. எஸ்ஸி மூன்றாம் ஆண்டு,
முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி,
வேலூர் — வ. ஆ. அ. மா.

கொள்ளை லாபத்திற்காக வேட்டையாடுகிறார்கள்!

போதைப் பொருளை விற்பதால் கொள்ளை லாபம் கிடைக்கிறது. அதனால் தான் அப்பொருள்களை விற்போர் எங்களை வேட்டையாடுகின்றனர். குறிப்பாக என் போன்று ஹாஸ்டலில் தங்கியுள்ளவர்கள் இவர்களின் பார்வையிலிருந்து தப்புவது ரொம்பக்கடினம். எப்போது வீட்டிலிருந்து பணம் வரும், எவ்வளவு வருகிறது என்பதை நன்கு தெரிந்து வைத்துக் கொள்வார்கள். சாம, தான, பேத, தண்டத்தைப் பிரயோகிப்பார்கள். வாங்கச் செய்துவிடுவார்கள். நகர மாணவர்களை விடக் கிராமத்திலிருந்து வரும் மாணவர்களையே இவர்கள் சுலபமாக மடக்கிவிடுகிறார்கள்.

நாங்கள் போதைப் பொருளிலிருந்து தப்ப வேண்டுமானால், கல்லூரி நிர்வாகம், ஹாஸ்டல் நிர்வாகம், பொது மக்கள் ஆகியோர் இம்மாதிரி போதைப்பொருளைத் தூக்கிக் கொண்டு அலைபவரை அடையாளம் கண்டு எங்கள் அருகில் வராமல் தடுக்க வேண்டும். இதைச் செய்தாலே அறுபது சதவீதம் பிரச்னை தீர்ந்து விடும்.

மீதி நாற்பது சதவீதம் எங்களது மன உறுதியில் உள்ளது. ஹாஸ்டலில் கூட இருப்பவன் ஸ்மாக்கைப் புகைத்தாலோ, பிரவுன் ஷுகரை நக்கினாலோ அவனைத் தடுப்பதோடல்லாமல், விடுதி நிர்வாகத்துக்கும் தெரிவித்து அவனைத் திருத்த வேண்டும்.

ஹாஸ்டலில் தங்காமல் வீட்டிலிருந்து வந்து போகும் மாணவர்களிடம் இப்பழக்கம் அவ்வளவாகக் காணப்படுவதில்லை என்றாலும் பெற்றோர் இருவருமே வேலைக்குப் போகும் போதும், வசதி மிக்க பணக்காரக் குடும்பத்திலும், வீட்டிலுள்ள பெரியவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இளைஞர்களைக் கண்காணிக்க வேண்டும்.

— எம். செந்தில்குமார்,
முதல் ஆண்டு பொறியியல்,
குருநானக் கல்லூரி,
வேளச்சேரி சாலை,
சென்னை — 600 032.

RM.வீரப்பன்

அளிக்கும்

சத்யா மூவீஸ்

புது மனிதன்

சென்னை

ஆல்பட் A/c

அபிராமி A/c

உதயம் A/c

தினசரி 3 காட்சிகள்

ஸ்ரீ கிருஷ்ணா

பகல் 11-30 மணி காட்சி

மற்றும் தமிழகமெங்கும்

2-வது வாரம்

மணிவண்ணன்

தேவா





தயாரிப்பு :

V. தமிழழகன்

V. செல்வம்

V. தங்கராஜ்

Elegant

தலைவருக்குத் தேர்தல் டிக்கெட் கிடைக்குமா...?

சிரிக்க வையுங்கள் ;
சிங்கப்பூர் செல்லுங்கள் !

50



நிருபர்: உங்க கணவரைத்தான் விவாக ரத்து செய்துட்டீங்களே...! இன்னும் ஏன் அவருடனேயே இருக்கிறீங்க?

நடிகை: அடுத்த திருமணம் செய்து கொள் ளும் வரை 'இடைக்காலக் கணவராக' இருக்கச் சொல்லியிருக்கேன்.

— எஸ். மாரியப்பன், தேனி.

○ ○ ○

"தலைவருக்குத் தேர்தல் டிக்கெட் கிடைக் குமான்னு சந்தேகமாயிருக்கு...!"

"ஏன்?"

"கட்சித் தொண்டர்கள் தலைவரை நேரடி விசாரணை பண்ணணுமாம்!"

— விஜயம், கோவை.

○ ○ ○

○ அண்ணன் சினிமாவிற்குப் புறப்படும் வேளை. தம்பி தானும் செல்ல வேண்டும் என்று அடம் பிடித்தான். அப்பா அதட்டி னார். சிறிது நேரம் கழித்து, "அப்பா, கோவி லுக்குப் போகலாமா?" என்றான் தம்பி. அப்பா உச்சிகுளிர்ந்து, "எந்தக் கோவி லுக்குப் போகலாம்?" என்று கேட்க, "குடி யிருந்த கோவில்" என்ற பதில் கிடைத்தது!

அப்பாவின் கடுகடு மாறி, 'களுக், களுக்' ஆயிற்று.

— இர. ஜோதி, மதுரை.

○ ○ ○

"சார்! நீங்க இந்த ஃபைலை இத்தனை கண்டிப்பா இன்னிக்குக் கேட்பீங்கன்னு நேத்தே எனக்குத் தெரிஞ்சிருந்தா..."

"நேத்தே முடிச்சிருப்பியாக்கும்?"

"இல்லை சார், இன்னிக்கு லீவு போட்டி ருப்பேன்!"

— ஜி. டி. ராஜா, சென்னை — 28.

○ ○ ○

"வெளியேயிருந்து ஆதரவு கொடுக்கிறோம் என்று அந்தக் கட்சி சொன்னதை நம்பினது தப்பாப் போச்சு."

"ஏன்?"

"ஒவ்வொரு வோட்டெடுப்பின் போதும் சபையை விட்டு வெளியேறினார்கள் — 'வெளியேயிருந்து ஆதரவு கொடுக்கிறோம்' என்று கூறி!"

— பி. சோமசுந்தரம், ராமநாதபுரம்.

○ ○ ○

"ஏம்மா உமா, இந்த வாரம் முழுக்க விட்டுக் கணக்கைத் தப்பில்லாமல் போட்டு வந்திருக்கியே; என்ன ஆச்சு, திடீர்னு...?"

"எங்க அப்பா ஒரு வாரம் முன்னே திடீர்னு ஆபீஸ் காரியமா ஊருக்குப் புறப் பட்டுப் போயிட்டார், மச்சர்!"

— அ. சந்தியா, சென்னை — 64.

○ ○ ○

நிருபர்: கல்யாணத்துக்குப் பிறகு நடிக்கவே போறதில்லைன்னு சொன்னீங்களே, இப்ப மறுபடியும் சினிமாவிலே நடிக்க வந்திருக்கீங்களே?"

நடிகை: சொன்னது என்னவோ உண்மை தான். ஆனால், எத்தனாவது கல்யாணத்துக்குப் பிறகுன்னு நான் சொல்லவே இல்லையே!

— வி. ரெங்கநாதன், திருச்சி.


○ ○ ○

○ என் நண்பன் அரைகுறை இங்கிலீஷ் அறிவுடன் ரொம்ப அலட்டிப்பான். ஒரு முறை நானும் அவனும் சினிமாவிற்குப் போனோம். படம் ஆரம்பிப்பதற்கு முன் பாக டாக்குமெண்டரி படம் போட்டார்கள். திரையில் தெரியும் ஆங்கிலத்தை உரக்கப் படிக்க ஆரம்பித்தான். "பிரைமினிஸ்டர்ஸ்" அட்ரஸ் டு த நேஷன்" என்று. நானும் எரிச்சலாக, "இப்ப யாரு இதைக் கேட்டாங்க...?" என்றதும், "பி. எம். அட்ரஸ் தெரிஞ்சாத்தானே ஏழைங்க லெட்டர் போட்டு ஏதாச்சும் உதவி கேட்பாங்க. அதுக்காகத்தான்" என்றான் நண்பன்! சுற்றிருந்தவர்களெல்லாம் கருகருப்பாய்ச் சிரிக்க, நண்பன் திருதிரு!

— உ. ரா. ராஜேந்திரன், உத்திரமேரூர்.















முதலீட்டின் அதிகபட்ச பயன்		
திட்டம்	ஆண்டுகள்	வட்டிவிகிதம்
தேசிய சேமிப்பு பத்திரம் 8வது வெளியீடு	6	16.91%
கிஸான் விகாஸ் பத்திரம்	5½	18.18%
இந்திரா விகாஸ் பத்திரம்	5	20%

அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து அதிகப்பயன் பெறுவீர்!

சிறப்பு பரிசுக் கூப்பன் திட்டம் - I

தேசிய சேமிப்புத் திட்டத்தில் ரூ.5000/-ம் அதற்கு மேலும் முதலீடு செய்பவர்களுக்கென ஒரு சிறப்புப் பரிசுத்திட்டம் 11.3.91 முதல் தொடங்கப்பட்டுள்ளது. ஒரு லட்சம் பரிசுக் கூப்பன்களுக்கான ஒரு வரிசை மட்டுமே இதில் இடம்பெறும்.

ஒவ்வொரு ரூ.5000/- முதலீட்டுக்கும் ஒரு பரிசுக் கூப்பன் பெறலாம்.

329 அரிய பரிசுகள்	
ஒரு சிறப்பு பரிசு	: சென்னை மாநகரில் உயர் வருமான பிரிவினருக்கான அடுக்கு மாடி வீடு (HIG)
இரண்டு முதல் பரிசுகள்	: சென்னை நகரில் நடுத்தர வருமான பிரிவினருக்கான அடுக்கு மாடி வீடு (MIG)
ஒரு இரண்டாவது பரிசு	: மாருதி கார்
ஐந்து 3-வது பரிசுகள்	: சில்வர் பிளஸ்
பத்து 4வது பரிசுகள்	: வண்ணத் தொலை காட்சிப் பெட்டி
பத்து 5-வது பரிசுகள்	: 165 லிட்டர் ரெப்ரிஜிரேட்டர்
100 6-வது பரிசுகள்	: 7½ லிட்டர் பிரஷர் குக்கர்
200 ஆறுதல் பரிசுகள்	: குவார்ட்ஸ் சுவர் கடிகாரம்

பரிசுக் கூப்பன் திட்டம் - II

தேசிய சேமிப்புத் திட்டத்தில் ரூ.500/- ம் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கான பரிசுத் திட்டமும் 31.3.91 வரை தொடர்ந்து செயல்படும். மாருதி கார் முதல் 261 கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படுகின்றன.

262 அரிய பரிசுகள்	
1 சூப்பர் பம்பர் பரிசு	- மாருதி கார்
1 முதல் பரிசு	- பஜாஜ் ஸ்கூட்டர்
2 இரண்டாம் பரிசுகள்	: உ.சி. வண்ணத் தொலைகாட்சிப் பெட்டி
3 மூன்றாம் பரிசுகள்	: குளிர்பதனப் பெட்டி 165லி
5 நான்காம் பரிசுகள்	: சோஃபா
10 ஐந்தாம் பரிசுகள்	: தையல் மிஷின்
10 ஆறாம் பரிசுகள்	: சைக்கிள்
30 ஏழாம் பரிசுகள்	: குவார்ட்ஸ் கைகடிகாரம்
200 ஆறுதல் பரிசுகள்	: சுவர்க்கடிகாரம்

தமிழ்நாடு அரசின் சிறப்புச் சலுகைகள்:

- தேசிய சேமிப்பில் ரூ.1000/-ம் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கு ரூ.50,000/- வரையிலான தனிநபர் விபத்துக் காப்புறுதியினை தமிழ்நாடு அரசு வழங்குகிறது.
- குறிப்பிட்ட சில திட்டங்களில் ரூ.1000ம் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கு ஒரு சதவீத ஊக்கத் தொகையும் தமிழக அரசு காசோலை மூலம் வழங்கும்.

தமிழ்நாடு சிறுசேமிப்புத் துறை வழங்கும் இரு பரிசுத் திட்டங்களும் தமிழ்நாடு அரசு வழங்கும் சலுகைகளும் தமிழ்நாட்டில் தேசிய சேமிப்புத்திட்டத்தில் முதலீடு செய்வோருக்கு மட்டுமே பொருந்தும்.

எல்லா அஞ்சலகங்கள் மூலமாகவும்

தேசிய சேமிப்புத் திட்டத்தில் முதலீடு செய்யலாம்.

தேசிய சேமிப்புத் திட்டப் பரிசுக் கூப்பன்களையும் விபத்து காப்புறுதி பாலிசியையும் பெறுவதற்கு அணுக வேண்டிய இடம்:

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்கள்:

இயக்குநர்

சிறுசேமிப்புத்துறை

143, அண்ணா சாலை,
சென்னை 600 002
தொலைபேசி: 840223/846209

கம்ப்யூட்டர் முறையில் முதலீடு பற்றிய ஆலோசனை பெற தொலைபேசி எண் 840223 (சென்னை)ல் தொடர்பு கொள்ளுங்கள்.

DIPR:633/AS/91:Efficient

கம்பீரம்

கங்கை நதியின் கிளை நதிகள் வரி வரியாகக் கடலில் கலக்கும் அந்த மகத்தான சுந்தர்பன் பகுதிக்கு நிகில் சட்டர்ஜியின் ஜீப் வந்தபோது மாலை மயங்கும் நேரம். கிராமத்தின் பெயர் போர்டில் எழுதியிருந்தது. 'நஜத் கிராமத்திற்கு நல்வரவு'.

ஜீப்பின் உள்ளே மனைவியின் மடியில் இருந்த பையன் கேட்டான். ''டாடி! இங்கே தான் புலி இருக்கா?''

டிரைவர் திரும்பிச் சிரித்தான். நிகில் செல்லமாக அவன் தலையைக் கலைத்தார். ஜீப் நின்றது.

ஜீப்பில் அரசாங்க வாசனை இருப்பதைப் பார்த்தவுடன் கிராமத்துக் கூட்டம் கூடி விட்டது. எல்லாமே பாமர மக்கள். மீன் பிடிப்பவர்கள், மரமறுப்பவர்கள், தேன் சேகரிப்பவர்கள்... அவர்களின் முகத்தில் கோபமும், ஆத்திரமும் இருப்பது உடனே தெரிந்தது. குரல்கள் ஆக்ரோஷமாக வெளிப்பட்டன.

''யார் அது? புது ஆஃபீஸரா?''

''வெட்டணும் இவன்களை!''

''குடும்பத்தோட வந்திருக்கான்.''

''இவன் மட்டும் என்ன செய்யப் போறான்?''

''பாத்துடலாம்.''

சட்சட்டென்று பாட்ரோல் ஆசாமிகள் வந்தார்கள். அவர்களுடைய தோளில் துப்பாக்கிகள் இருந்தன. கூட்டத்தை விலக்கி, நிகிலிடம், ''ஸாப்! நீங்கள் ரெஸ்ட் ஹவுஸ் வந்து விடுங்கள். பீட் ஆபீசர்கள் அங்கே இருக்கிறார்கள்'' என்றார்கள்.

ஜீப் மறுபடி கிளம்பியது. நிகில் திரும்பிப் பார்க்க, கிராம மக்களின் முகத்தில் படிந்திருந்த வன்மம் திகைக்க வைத்தது. கல் ஒன்று வந்து விழுந்தது. அருகில் ஏறிக் கொண்ட செக்யூரிட்டியைக் கேட்டார்.

''நான் இத்தனை எதிர்பார்க்கவில்லை. ஏன் இவ்வளவு கோபம்?''

''அவர்கள் கோபத்தில் நியாயம் இருக்கிறது ஸாப். இங்கே இருக்கும் புலிகளைப் பாதுகாக்கப்போகிறோம் என்று சொல்லி எல்லா காட்டுப் பகுதியையும் சர்க்கார் மூடி விட்டது. பிழைப்புக்கு என்ன செய்வார்கள்? காட்டை விட்டால் இவர்களுக்கும் வேறு கதி இல்லை. அதே நேரத்தில் புலிகள் கிராமத்தில் புகுந்து மனித வேட்டை வேறே ஆடுது. அதான் கோபம்.... இதுவரைக்கும் இந்த வட்டாரத்தில் நாற்பது பேர் புலி அடிச்சுச் செத்தாச்சு....''

பையனின் முகத்தில் கிலி படிவதைக் கவனித்தார் நிகில். ''ஆதித்யா! பயந்துட்டியா?'' என்றார் முதுகைத் தட்டி.

''இல்லை டாடி'' என்று சிரித்தான் ஐந்து வயது ஆதித்யா.



கிருஷ்ணா டாவின்ஸி

ரெஸ்ட் ஹவுஸ் அழகான தோட்டத்தின் உள்ளே இருந்தது. பின்னால் சற்றுத் தூரத்தில் ஏரியும் ரொம்ப தூரத்தில் அடர்ந்த மரங்களும் இருப்பதைப் பார்த்தார் நிகில். பீட் ஆஃபீஸர்கள் நிகிலைப் பார்த்தவுடன் மரியாதையாக எழுந்து நின்றார்கள்.

மனைவியும் பையனும் உள்ளே வேறொரு அறைக்குள் சென்று விட, ஒரு பீட் ஆபீஸரைத் தனியே அழைத்துப் பேசினார் நிகில்.

''எஸ். டி. பி. ப்ரோக்ராம் எந்த அளவில் இருக்கிறது...?''

எஸ். டி. பி! சுந்தர்பன் டைகர் ப்ராஜக்ட்!

''ரொம்பக் கஷ்டம் சார். கிராமத்து மக்களின் ஸைக்காலஜி புரியவில்லை. அவர்களுக்கு எத்தனை செய்தும் திருப்தியே இல்லை. போனவாரம் கூட ஒரு புது இன்ஷ்யூரன்ஸ் திட்டம் கொண்டு வந்தோம். ப்ச, என்னை ஒரு முறை நன்றாக அடித்து விட்டார்கள்'' என்றார் கோஷ் பரிதாபமாக.

''புலிகள் பற்றிய செய்திகளெல்லாம் உண்மைதானா? இல்லை, வெறும் வதந்திகளா?''

''சே! சே! ரியல் பெங்கால் டைகர்ஸ். எத்தனை பார்த்திருக்கிறேன்? கொழு கொழுவென்று இருக்கும். பாப்புலேஷன் அதிமாகி விட்டது.

''கிராமத்தில் புகுந்து மனிதர்களை அடிப்பதாகச் சொல்கிறார்களே அது கூட உண்மையா?''

''உண்மைதான் ஸார்! ஸேவ் டைகர்ஸ் திட்டத்தினாலே புலிகளுக்குப் பாதுகாப்பு அதிகமாயிடுச்சு. காட்டுக்குள்ளே யாரும் போறதில்லை. சுதந்திரமாத் திரியுதுங்க. வேட்டையைத் தடை செஞ்சாச்சு. ரெண்டாயிரம் சதுர மைலுக்குப் பரந்த காடு. கேட்கணுமா? மதமதன்னு வளர்ந்து போச்சு.....''

''இங்கே இருக்கிற மக்களோட ஆக்ரோஷத்தைக் கட்டுப்படுத்தறதுக்காகத்தான் நான் வந்திருக்கேன். சில பிளான்கள் வைச்சிருக்கேன். சில ஸ்பெஷல் ரைட்ஸ் இருக்கு... சில திட்டங்கள் இருக்கு... முதல்ல கிராமத்து ஜனங்களோட நேருக்கு நேர் பேசணும். அதுக்கு ஏற்பாடு செய்ங்க... இம்மீடியட்டா...''

''சரி சார்...''

மறுநாள் காலை பத்து மணிக்கு ரஜத் கிராமம் முழுவதும் ஆபீஸ் முன் கூடி விட்டது. நிகில் வந்து சேர்ந்ததும் கசகச வென்று குரல்கள் எழுந்தன. யாரோ ஒரு பெரியவர் குரலெடுத்து அடக்க, பேச்சுக் குரல்கள் உடனே அடங்கின.

நிகில் சத்தமான குரலில் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

''உங்க பிரச்னையெல்லாம் என்னன்னு எங்களுக்கு நல்லாத் தெரியும். இங்கே இருக்கிற காட்டுப் பகுதியெல்லாம் சர்க்கார் பாதுகாக்கறதுனால உங்க தொழில் பாதிக்கப் பட்டிருக்கிறதும் தெரியும். அதனால், உங்க முன்னேற்றத்துக்காகப் பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தப் போறோம்...''

''எந்தத் திட்டமும் எங்களுக்கு வேண்டாம். காட்டுக்குள்ளே போக அனுமதிச்சாலே போதும்...'' என்றான் ஒருவன் ஆக்ரோஷமாக.

''கோபப்படாதீர்கள். காட்டுக்குள்ளே நீங்க போறது இந்த நிலையில் ரொம்ப அபாயம். புலிகளோட எண்ணிக்கை அதிகமாயிடுச்சு...''

''எல்லாத்துக்கும் நீங்கதானே காரணம்! புலிகளைப் பாதுகாக்கறாங்களாம்! மனுஷனை விடப் புலியா முக்கியம்? அநியாயமா வயித்துல அடிக்குது சர்க்கார்...''

''இனிமேல் எந்தப் பிரச்னையும் வராது... இந்தக் காடுகள்ல இருக்கிற பெங்கால் புலிகள் ரொம்ப அபூர்வம். உலகத்துல வேறெங்கியும் இது போல கிடையாது. வேட்டைக்காரங்க, கிராமத்து ஆளுங்களெல்லாம் அதனோட அருமை தெரியாம அந்த இனத்தையே அழிக்க ஆரம்பிச்சாங்க... ஐம்பது வருஷத்துக்கு முன்னால் அறுபதாயிரம் புலிகள் இருந்த இடத்துல இப்ப வெறும் மூவாயிரம் புலிகள் தான் இருக்கு... அதுவும் சர்க்கார் பராமரிக்கறதுனாலத்தான்... அப்படிச் செய்யலைன்னா இன்னும் கொஞ்ச காலத்துல ஒரு புலி கூட இருக்காது.. ஒரு கம்பீரமான இனமே அழிஞ்சுபோகும்.

''போகட்டும். ரத்த வெறி புடிச்ச புலிங்க! எத்தனை பேரை அடிச்சிருக்கு...? ஏய் ஜதின்! இங்கே வா...!'' என்று ஒருவன் மற்றொரு இளைஞனைத் தள்ளி முன்னால் நிறுத்தினான். அவன் பார்வையில் சோகமும் வெறுப்பும் இருந்தது.

''இவனுக்கு நாங்களெல்லாம் சேர்ந்து கல்யாணம் பண்ணி வச்சோம். பதினெட்டு வயசு மனைவி... தெரியாத்தனமா ஒரு முறை ஏரிக்கரைப் பக்கம் போயிட்டா... அவ்வளவு தான்... புலி அடிச்சுச் சதைப் பிண்டமாப் போனா... எலும்பும் சதையும் ரத்தமுமா... இது மாதிரி எத்தனை கதை வேணும் உங்களுக்கு?'' அவன் ஆவேசமாகப் பேசியதன் நெருப்பு மக்கள் மனத்தில் கொஞ்சம் கொஞ்சமாகப் பற்றிக் கொள்வதைக் கவனித்தார் நிகில்.

''புரியுது... புதுசா நிறைய ரேஞ்சர்ஸ் வரப் போறாங்க. மின்சார வேலி போடப் போறோம். இருபத்தி நாலு மணி நேரமும் துப்பாக்கியோட ரோந்து நடக்கும்... நான் உங்களுக்கு உறுதியாச் சொல்றேன். இனிமே புலிகள் கிராமத்துக்குள்ள வராது... உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது...''

''இப்படித்தான் எல்லாரும் சொல்வாங்க... எதுவும் நடக்காது. காட்டுக்



உனக்குள்ளே முத்துக்கள்

ஏன் இந்தத்
தாழ்வுணர்ச்சி இளைஞனே?
வல்லவனைக் கண்டால் — ஏன்
புல்லாகக் குறுகுகிறாய்?
கல்லைப்போல் உறுதியாய் இரு!
காயம் உனக்கில்லை!
மிதிப்பவருக்கே!

வளைந்தாலும்
வில்லைப்போல் வளை!
இலக்கை நோக்கி
அம்பெய்ய!

விழுந்தாலும்
அருவியைப் போல் விழு!
நதியாய் நடந்து
பாசனம் செய்ய!

உப்பு நீரை வெளியேற்ற
கண்ணீர் ஒன்றுதானா வழி?
வியர்வை இல்லையா?
மனச்சுமை அதிகமானால்
கண்ணீர் சிந்தாதே!
இரட்டிப்பாக உழை!

யார் கண்டார்கள்?
இன்றைக்கு நீ சிந்தும்
வியர்வைத் துளிகள் யாவும்
சிப்பிக்குள் விழுந்த
மழைத்துளி போல்
தானையே முத்தாகலாம்!

— பாரதி சந்திரன்

குள்ளேயும் போக முடியாது. வருமானமும் கிடையாது. பாதுகாப்பும் கிடையாது... நாங்க என்னதான் செய்யறது?'' என்றாள் ஒரு பெண்மணி. அவள் இடுப்பில் ஒரு குழந்தை இருந்தது. நிகிலைப் பார்த்துச் சிரித்தது.

''எல்லாத்துக்கும் திட்டங்கள் வைச்சிருக்கோம். புதுசா இறால் வளர்ப்புத் திட்டம் இருக்கு. கிராமத்துக்கு உள்ளே இரண்டு ஏரி இருக்கில்லையா? அதுலதான் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப் போகுது... உங்க எல்லாருக்கும் வேலை கிடைக்கும். நெசவு மில் வரப் போகுது... இங்கே இருக்கிற கிராமங்கள் எல்லாத்துக்கும் ஸ்பெஷல் ஸ்டேடஸ் கொடுக்கும்படி சர்க்கார் உத்தரவு போட்டிருக்குது. ஆஸ்பத்திரி, ஸ்கூல், சினிமா தியேட்டர் எல்லாம் மளமளன்னு வரப் போகுது... எல்லாத்தையும் நானே முன்னால நின்று செஞ்சுத் தர்றேன். தயவு செஞ்சு எனக்கு ஒத்துழைப்புத் தாங்க...''

நிகில் நீண்ட நேரம் பேசினார். கூட்டம் அவருடைய பேச்சைக் 'கவனிக்க' ஆரம்பித்ததைப் பார்க்க சந்தோஷமாக இருந்தது.

அன்று சாயங்காலம் ஒரு பீட் ஆஃபீஸர் வந்து அவசரமாக ஒரு செய்தி சொன்னார். நிகில் உடனே கிளம்பினார்.

ஏரிக்கரையைத் தாண்டி, காட்டுப் பகுதி ஆரம்பிக்கும் இடத்தில் நிறைய பீட் ஆஃபீஸர்களும் ரேஞ்சர்களும் நின்றிருக்க ஒரு புதர் நடுவில் ஒரு ராயல் பெங்கால் புலி குற்றுயிராகப் படுத்துக் கிடந்தது. அதன் பெரிய வயிறு காற்றுக்காகப் புஸ்புஸ்ஸென்று எழுந்து அடங்கியபடி இருந்தது. உடலெங்கும் குத்தப்பட்டு ரத்தம் வழிந்தது. வாய்ப் பகுதி ரத்தச் சிதறலாக இருந்தது. ''செத்து விடும்'' என்று யாரோ ஒருவர் சொன்னது கேட்டு நிகில் திடுக்கிட்டார். புலியிடமிருந்து முனகல் சத்தம் கேட்டது.

''என்ன ஆச்சு?'' என்றார்.

''யார் செஞ்சதுன்னு தெரியலை ஸார்! ரேஞ்சர்தான் பாத்திருக்காரு. கிராமத்து ஆளுங்களாத்தான் இருக்கும். ஈட்டி மாதிரி வைச்சிருப்பாங்க. அதாலத்தான் குத்தியிருக்கணும். நல்ல அடி. பாவம், வயித்துல குட்டி வேற...'' என்றார் ஒரு ரேஞ்சர்.

புலி சனமாகக் கண்களைத் திறந்து பார்த்தது. வாயைத் திறந்து காற்றை உண்ண விரும்பியது. மீசை சிலிர்ப்பிலும், தசை அசைவிலும் அதன் கடைசி நேர மரணத் துடிப்புகள் தெரிந்தது. கால்களை உதறிக் கொண்டது. வால் தரையில் ஓங்கி ஓங்கி அடிக்க... செய்வதறியாமல் எல்லோரும் பார்க்க... அடுத்த மூன்றாவது நிமிடத்தில் அதன் தலை கவிழ்ந்தது.

நிகில் அதன் வழுவழுப்பான உடலைத் தொட்டுப் பார்த்தார். வலிமையான, அழகான, கம்பீரமான மிருகம்.

இரண்டு நாட்கள் விசாரணையில் மூன்று பேர் சிக்கிக் கொண்டார்கள்.

அருள்வாக்கு

பண சம்பந்தத்தால் சாஸ்திரோக்த வாழ்க்கையே கெட்டுப் போய்விட்டது. சாஸ்திரோக்தமாக மாறுவதற்கு நாம் நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்றில்லாமல் . பண்ணிக் கொண்டு விட்டால் போதும்.

எனக்கு மூன்று விதத்தில் செலவைக் குறைக்கலாம் என்று தோன்றுகிறது. 1. எல்லோரும் ஸ்திரீகள் உள்பட — பட்டு முதலான பகட்டுத் துணிகளை விட்டுக் கடைசித் தரமான வஸ்திரந்தான் வாங்குவது என்று வைத்துக் கொள்ள வேண்டும். 2. காப்பிக்குத் தலைமுழுகிவிட்டுக் காலையில் கோதுமைக் கஞ்சிதான் சாப்பிடுகிறதென்று வைத்துக் கொள்ள வேண்டும் அல்லது மோர் சாப்பிடலாம். காப்பி சாப்பிடுவது என்ற ஒரு பழக்கத்தைப் பண்ணி விட்டதால் Substitute (அதை மாற்ற ஏதாவது ஒன்று) வேண்டுமல்லவா? தக்ரம் (மோர்)தான் அமிர்தமென்று வைத்திய சாஸ்திரம் சொல்லுகிறது. இப்படிச் செய்வதனால் அநேக குடும்பங்களில் செலவில் நூற்றுக்கு அறுபது பங்கு குறைந்துவிடும் என்று தோன்றுகிறது. 'அரிசி எவ்வளவு ரூபாய்க்கு வாங்குகிறோம்? பால் காப்பிக் கொட்டை எவ்வளவு வாங்குகிறோம்?' என்று பார்த்தால் பால் காப்பிக் கொட்டைக்குத்தான் அதிகமாகச் செலவு! (3) விவாகத்துக்காகப் பணத்தைக் கொண்டுவா என்று வரதக்ஷிணை வாங்குவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இப்படிப் பண்ணினால் டம்பம் போவது ஒன்று; நல்ல ஆரோக்யமும் மனவின் அபிவிருத்தியும் ஏற்படுவது இன்னொன்று; மூன்றாவதாக சாஸ்திரோக்தமான வாழ்க்கையையும் வழக்கங்களையும் நிலைநிற்கும் படி பண்ணிவிடலாம்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

நிகிலின் முன்னால் நிறுத்தப்பட்டார்கள். அவர்களுடைய முகங்கள் இறுக்கமாக இருந்தன. நிகில் அவர்களைக் கூர்மையாகப் பார்த்தார்.

''நீங்கதான் அந்தப் புலியைக் கொன்னீங்களா?''

அவர்கள் தலையசைத்தார்கள்.

''ஏன் கொன்னீங்க?''

''என்னுடைய பத்து வயசுப் பையன் புலி அடிச்சுத்தான் செத்துப் போனான்...'' என்றான் ஒருவன். இளைஞனாக இருந்தான்.

''உன் பையனை அடிச்சது இந்தப் புலி தானா?''

அவன் கேலியாக ''தெரியாது. அது ஒரு புலி. அவ்வளவுதான்...'' என்றான்.

''நீங்க செஞ்சிருக்கறது சட்டப்படி தப்பு; உங்களை ஜெயில்ல போடலாம்...'' என்றார் கடுமையாக.

''முடிஞ்சா செய்ங்க...'' என்றான் மற்றொருவன். பீட் ஆஃபீஸர்களும் ரேஞ்சர்களும் நிகிலையே பார்க்க, அவர் சட்டென்று முடிவெடுத்தார். டெலிஃபோனைச் சுழற்றி போலீஸை அழைத்தார்.

மூன்று பேரும் கைது செய்யப்பட்டார்கள்.

கிராம மக்கள் எஸ். டி. பி. அலுவலகம் முன்னால் அமர்ந்து தர்ணா ஆரம்பித்தார்கள். 'ஆஃபீஸர்கள் ஒழிக' ''கிராமத்தை விட்டு வெளியே போ!'' ''புலிகளைக் கொல்வோம்'' ''மூன்று பேரையும் விடுதலை செய்'' போன்ற கோஷங்கள் ஒலித்தன. நிகில் எதையும் கண்டுகொள்ளவில்லை. கல்கத்தாவிலிருந்து டிரக்குகளில் மரங்களும் மின்சாரக் கம்பிகளும் வந்திறங்க, காட்டைச்

அடுத்த இதழில்...

மாடலிங் தொழிலில் மிஸ் இந்தியா

சுற்றிலும் வேலிகள் போடுவதற்கான வேலைகள் ஆரம்பித்தன.

படுக்கையறையில் நிகிலின் மார்பில் சாய்ந்திருந்தாள் பிந்தியா. நிகில் அவள் தலை முடியைக் கோதி விட்டார்.

''நிகில்! நாம் வந்ததில் இருந்து நிலைமையே சரியில்லை. ஒரே ஆர்ப்பாட்டம்!''

''எல்லாம் ஓய்ந்து விடும் பிந்தியா! படிப்பறிவில்லாத ஜனங்கள்! புரிந்து கொள்ள நேரமாகும்...''

''ஆனால் உண்மையிலேயே இவர்கள் பாவம்தான் இல்லையா? சரியான வேலை கிடையாது. ஆபத்து வேற....''

''இல்லை பிந்தியா. எல்லாமே பயம். கொஞ்சம் திட்டமிட்டுச் செஞ்சா புலிகள் கிராமத்துக்குள்ளேயே வராமப் பண்ணிடலாம். அநியாயமா ஒரு புலியை அடிச்சுக் கொன்னிருக்காங்க தெரியுமா? வயித்துல குட்டி வேற... பாவம்...''

''எல்லாருக்கும் உங்க மேலதான் கோபம்! ஜாக்கிரதையா இருங்க நிகில். எனக்குப் பயமா இருக்கு...'' என்று இறுக்கி அணைத்துக் கொண்டாள்.

''சே! சே! என்ன இது அநாவசிய பயம்!''

ஆதித்யா மெதுவாக எழுந்தான். அப்பாவும் அம்மாவும் படுத்திருந்த அறையைப் பார்த்தான். சாத்தியிருந்தது. ஜன்னலருகே போய்ப் பார்த்தான். தோட்டம் தெரிந்தது. அதில் பளிச் பளிச்சென்று சிறிய மின்னல் துணுக்குகள் தெரிந்து மறைந்தன. என்ன அது...? அவனுக்கு ஞாபகம் வந்தது. அம்மா சொல்லியிருக்கிறாள். மின்மினிப் பூச்சிகள்...! எத்தனை பூச்சிகள் பறக்கிறது. அவனுக்கு அதைப் பிடிக்க வேண்டும் போல் இருந்தது. அம்மாவிடம் சொன்னால் திட்டுவாள்.

ஆதித்யா மெதுவாகக் கதவைத் திறந்தான். பின்னால் தோட்டத்தைப் பார்த்து நடந்தான். நிலவு வெளிச்சம் இல்லை. இருட்டில் மின்மினிகளின் ஒளி வசீகரமாக இருக்க, அதை நோக்கி நடக்கும் போது அந்த சப்தத்தைக் கேட்டான். மனம் திடும் என்று விழிக்க, மிக அருகில் கண்கள் பளபளக்க நின்ற ஒரு புலியைப் பார்த்தான். அவனால் கத்தக் கூட முடியவில்லை. பிரமித்து நிற்கையில் புலி பாய்ந்தது.

''மம்மீ....''

வீட்டு வாசலில் கிராமம் முழுக்கக் கூடி விட்டது. உள்ளே நுழைய விடவில்லை. கட்டுக்கடங்காத கூட்டம். வீட்டினுள்ளே அழுகைக் குரல் கேட்டது. பிந்தியாவின் அழுகை.

ரேஞ்சர் நிகில் அருகே வந்து குனிந்து, ''ஸார்! கிராமம் முழுக்க வீட்டு வாசலில் கூடி விட்டது. உங்களைப் பார்க்க வேண்டுமாம்'' என்றார்.

நிகில் எழுந்தார். தளர்ந்த நடையில் வாசலை அடைந்தார். கூட்டம் அமைதியாக இருந்தது. எல்லோர் கையிலும் கட்டிகளும் ஆயுதங்களும் இருந்தன. குரல்கள் எழுந்தன.

''ஸாப்! பார்த்தீங்களா புலி செய்த வேலையை! கொல்லணும் அதை!''

''வெட்டிப் போடணும்....''

''அநியாயமா உங்க மகனை அடிச்சிருச்சு...''

''அனுமதி கொடுங்க... காட்டுக்குள்ளே புகுந்து துவம்சம் செஞ்சிடறோம்...''

''உங்க மகனைக் கொன்ன புலி இனத்தையே அழிச்சிடறோம்... கொன்னு குவிக்கிறோம்...''

அவர்களின் முக இறுக்கங்களைப் பார்த்தார். தீவிரத்தைப் பார்த்தார். கைப்பிடியில் இறுகிய ஆயுதங்களைப் பார்த்தார். அவர் மனத்தில் கோபம் பொங்கியது. காட்டைச் சுற்றிய வேலிகளை உடைத்து, ஆயுதங்களுடன் உள்ளே நுழைந்து, தென்படும் புலிகளையெல்லாம் வீழ்த்திக் கொன்று, ஆதித்யாவை அடித்த புலியும் அங்கேதான் இருக்கும்...! ஒவ்வொரு புலியையும் ரத்தத்தில் தோய்த்து, தோல்களைப் பிய்த்தெடுத்து... வயிற்றைக் கிழித்து... கொன்று குவித்து...

நிகில் கை கூப்பினார். ''தயவு செய்து ஒன்றும் செய்யாதீர்கள். அமைதியாகப் போங்கள்... ப்ளீஸ் தயவு செய்து போங்கள்... புலிகளை ஒன்றும் செய்யாதீர்கள்...'' அவர் திரும்பி நடந்தார். நடை தளர்வாக இருந்தது.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/-; விமானத் தபால் ரூ. 350/-.

இவ்விழாக்காலத்திலே உங்கள் இல்லத்திற்கு வண்ணம் பூசுவீர்.



உங்கள் இல்லக் கனவை நனவாக்குவீர். ஆனால் உங்கள் இல்லத்திற்கு வண்ணம் பூசும் முன்பு உங்கள் எண்ணத்தில் எண்ணற்ற வினாக்கள் எழலாம். என் வீட்டிற்கு டிஸ்டெம்பர் அல்லது எமல்ஷன் பூச என்ன செலவாகும்? என் வீட்டு ஹாலுக்கு எந்த வண்ணம் சிறப்பாக இருக்கும்? பூச்சு வேலை முடிந்ததும் அதிலுள்ள குறைகளை எப்படி சரிப்படுத்த முடியும்?

ஏஷியன் பெயிண்ட்ஸ் உங்கள் பிரச்சினைகளை நன்கு அறியும். உங்கள் இல்லக்கனவை நனவாக்க உதவிடும் வகையில் ஒரு கைப்புத்தகம் தயாரித்து உள்ளது. **"உங்கள் இல்லத்திற்கு மிகச் சிறப்பாக வண்ணம் பூச — வீட்டுவின் வழிகாட்டி"** என்ற 16-பக்க கலர் புத்தகம், வண்ணம் பூசுவதில் உள்ள எல்லா விபரங்களைப் பற்றிய நடைமுறைக் குறிப்புகளைக் கொண்டதாகும். அதிலே பட்ஜெட், கலர் தேர்வு, பெயிண்டர் தேர்வு, வண்ணம் பூசும் முறை இன்னும் பல விபரங்கள் அடங்கியுள்ளது.

ஏஷியன் பெயிண்ட்ஸ், உங்கள் இல்லத்திற்கு நீடித்த எழில் வழங்கிட எப்போதும் உங்களோடிருக்கும். எவ்வித பரப்பிற்கும் ஏற்ற வண்ணம், விரிவான ஷேடு அணிவரிசை மற்றும் நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் தேவைகளை நிறைவேற்றிட நாடெங்கிலும் விரிவான டீலர் அமைப்பு முறை எங்களிடம் உள்ளது.

ஆகவேதான் நாடெங்கிலும் இதர பெயிண்டுகளை விட ஏஷியன் பெயிண்ட்ஸை தேர்ந்தெடுக்கும் இல்லங்கள், ஆண்டுக்கு ஆண்டு அதிகம் பெருகுகின்றன.

வாருங்கள் எங்களோடு கொண்டாடுங்கள்.

"வீட்டுவின் வழிகாட்டி" இலவச புத்தகம் பெற்றிட இக்கூப்பனை நிறைவு செய்து இம்முகவரிக்கு அனுப்புங்கள்.

பிராடக்ட் மேனேஜர், ஏஷியன் பெயிண்ட்ஸ்
தபால் பெட்டி எண்: 11701, பம்பாய்-400 021.

எங்களோடு கொண்டாடுங்கள்
ஏஷியன் பெயிண்ட்ஸ்

பெயர் ______________________

முகவரி ______________________

____

______________________ பின் ☐☐☐ ☐☐☐

வருமானம் ☐ 1500-2500 ☐ 2501-3500 ☐ 3501-5000 ☐ 5001 + KAL 2

O&M/6595/TM



சுவையான இனிப்புப்பண்டங்கள் எளிதாகத் தயாரிக்கலாம்.

மில்க்மெய்டினால் தயாரிக்கப்பட்ட, சுவை நிறைந்த இந்த ஸ்பெஷல் இனிப்புப் பண்டங்களை உங்கள் குடும்பத்தினர் விரும்புவார்கள். இவற்றை எளிதாகத் தயாரிப்பதில் உங்களுக்கு ஒரே ஆனந்தம்தான்.

பாதாம் கீர்

5 பேருக்கு
சமைக்க ஆகும் நேரம்: 20 நிமிடங்கள்

தேவை

மில்க்மெய்ட் —1 டின், பசுப் பால் —1 லிட்டர்
முந்திரிப் பருப்பு —50 கிராம் (6 டேபிள் ஸ்பூன்)
வாதாம் பருப்பு எஸ்ஸென்ஸ்—1/4 டீஸ்பூன்

செய்முறை

1. பாலைக் காய்ச்சி ஆற வைக்கவும். உடைத்த முந்திரிப் பருப்பை 2 கப் பாலில் 2 மணி நேரத்துக்கு ஊற வைக்கவும். ஊறிய முந்திரிப் பருப்பை மையாக அரைக்கவும்.
2. மில்க்மெய்டையும், அரைத்த முந்திரிப் பருப்பையும் சேர்த்து கலக்கவும்.
3. வாதாம் பருப்பு எஸ்ஸென்ஸை சேர்க்கவும்.
4. சூடாகவோ, குளிர வைத்தோ பரிமாறவும்.

கடலைப்பருப்பு பாயாசம்

6 பேருக்கு
செய்ய ஆகும் நேரம்: 30-35 நிமிடங்கள்

தேவை

மில்க்மெய்ட்	—1 டின்
கடலைப் பருப்பு	—1 கப்
வெல்லம்	—100 கிராம் (1/2 கப்)
ஏலக்காய் பவுடர்	—1/4 டீஸ்பூன்
தேங்காய்	—1 (துருவப்பட்டது)
முந்திரிப் பருப்பு	—10 (விரும்பினால்)
நெய்	—1 டேபிள்ஸ்பூன்

செய்முறை

1. கடலைப் பருப்பை 3 கப் தண்ணீரில் குழையும் வரை வேக விட்டு பருப்பை மசிக்கவும்.
2. வெல்லத்தை ஒரு கப் நீரில் கரைத்து வடிகட்டவும்.
3. தேங்காய்த் துருவலிலிருந்து ஒரு கப் கெட்டியான பாலும் ஒரு கப் அடர்த்தி குறைந்த தேங்காய்ப் பாலும் எடுத்துக்கொள்ளவும்.
4. வெல்லப்பாகு, பருப்பு, அடர்த்தி குறைந்த தேங்காய்ப் பால் மற்றும் ஏலக்காய் பொடியை கலவையாக்கிக் கொள்ளவும்.
5. கலவையை இளந்தீயில் சிறிது நேரத்திற்கு வேகவிட்டு மில்க்மெய்ட் சேர்த்து கிளறி கெட்டித் தேங்காய்ப் பாலை சேர்க்கவும்.
6. முந்திரிப்பருப்பை நெய்யில் வறுத்து எடுத்தபின் மீதியுள்ள நெய்யிலேயே தேங்காய்த் துண்டுகளையும் வறுக்கவும்.
7. பாயாசத்தில் முந்திரிப்பருப்பு, தேங்காய்த் துண்டுகள் மற்றும் நெய்யை சேர்த்து கலக்கவும் அடுப்பிலிருந்து இறக்கி பரிமாறவும்.

விந்தை பல செய்திட மில்க்மெய்ட்

இலவசம்

மில்க்மெய்ட் ரெஸிப்பீ புத்தகம்
அதனைப் பெற போஸ்ட் பேக் 22,
புது தில்லி-110019
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.



நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு